॥ श्रीः ॥

॥ श्रीरामचन्द्राय परस्मै ब्रह्मणे नमः ॥

स्कान्दोपपुराणोक्तम्

॥ श्रीमद्वाल्मीकिरामायणमाहात्म्यम् ॥

प्रथमोऽध्यायः ॥

नारद उवाच—

पितामहोऽसि लोकानां पिताऽसि च मम प्रभो ।
तत्त्वां पृच्छामि लोकेश लोकानां मम चाब्जज ॥
हिताय करुणासिन्धो कृपयाऽऽख्याहि सादरम् ॥ १ ॥

उक्तं किल त्वया ब्रह्मन् पठनाच्छ्रवणादपि । श्रीरामायणकाव्यस्य चतुर्वर्गो भवेदिति ॥
कथं पाठाद्भवेद्धर्मः कथं चार्थश्च सिध्यति ।
कथं कामो भवेत्पुंसां मोक्षो वाऽपि कथं भवेत् ॥
विभवं विस्तरं चैव नियमं च सकल्पनम् । ब्रूहि जगतां नाथ सर्वज्ञोऽसि मतो मम ॥ ४ ॥

ब्रह्मोवाच—

शृणु नारद वक्ष्यामि श्रीरामायणवैभवम् । यस्य स्मरणमात्रेण नरः पापात्प्रमुच्यते ॥
त्वन्मुखेनाखिला लोका उत्तरेयुरघार्णवात् ॥ ६ ॥

1. நாரதர் சொல்லுகிறார்:— பிரபுவே! தாங்கள் உலகங்களுக்கெல்லாம் பிதாமஹராகவும் எனக்கு பிதாவாகவும் இருக்கிறீர். ஆகையால் தாமரையினின்று ஜனித்த லோகநாதா! உலகங்களுடையவும் என்னுடையவும் நன்மைக்காக தங்களிடத்தில் கேட்கிறேன். கருணைக்கடலே! ஆதரவோடும் கிருபையோடும் சொல்லவேண்டும்.

2. பிரம்மதேவரே! ஸ்ரீமத் ராமாயண காவ்யத்தைப் படித்தாலும் சிரவணம் செய்தாலும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷமும் இவைகள் உண்டாகுமென்று எங்கள் நன்மைக்காக உம்மால் சொல்லப்பட்டதல்லவா.

3-4. எவ்விதம் படித்தால் தர்மமுண்டாகும்? எவ்விதம் அர்த்தம் ஸித்திக்கும்? மனிதர்களுக்கு காமம் எவ்விதம் கிடைக்கும்? மோக்ஷம்தான் எவ்விதமாகக் கிடைக்கும்? ஜகந்நாதா! தாங்கள் ஸர்வக்ஞன் என்பது எனது அபிப்பிராயம். ஆகையால் ராமாயணத்தின் வைபவத்தையும், நியமத்தையும், ஸங்கல்ப்பத்தையும் விஸ்தாரமாக எனக்குச் சொல்லவேண்டும்.

5. பிரம்மதேவர் சொல்லுகிறார்:— நாரதா! எதை ஸ்மரித்தமாத்திரத்தில் மனிதன் பாபத்திலிருந்து முக்தனாக ஆகின்றானோ, அந்த ஸ்ரீராமாயணத்தின் வைபவத்தைச் சொல்லுகிறேன், கேள்.

ஸகலஜனங்களும் பாபக்கடலிலிருந்து உன்னால் கரையேறட்டும்.

acharya.org

श्रीमद्रामायणं पुण्यमितिहासं पुरातनम् । येऽर्चयन्ति रघूत्तंसं स्मरन्तस्ते सुखाः नराः ॥
ब्रह्मक्षत्रियविट्च्छूद्रैश्चतुर्वर्गफलेप्सुभिः । श्रोतव्यं नियमान्नित्यं श्रीरामायणमादरात् ॥ ८ ॥
पठनं च प्रवचनं ब्राह्मणाधीनमेव च ॥ ९ ॥
श्रीमद्रामायणाख्यस्य कल्पवृक्षस्य नारद । सप्तकाण्डाह्वयाः शाखाः सप्तरूपफलप्रदाः ॥
पठनाच्छ्रवणं पुण्यमधिकं सम्प्रयच्छति ॥ ११ ॥
अर्थप्रवचनं तस्मान्महापुण्यतमं स्मृतम् ॥ १२ ॥
पुत्रपौत्रादिसम्पत्तिं सर्वरोगनिवारणम् । पत्नीपुत्रादिकलहनाशनं क्षेमवर्धनम् ॥
करोति बालकाण्डस्य पठनश्रवणादिकम् ॥ १३ ॥
अनिष्टकार्यप्रत्यूहनाशनं धर्मवर्धनम् । पितापुत्रादिवात्सल्यं रामदास्येऽधिकां रुचिम् ॥
अयोध्याकाण्डपठनं करोति रुचिरं नृणाम् ॥ १४ ॥
वियुक्तबन्धुसंश्लेषं पतिभक्तिं च योषिताम् । धर्माविरुद्धां कामानामवाप्तिं साधुषु स्पृहाम् ॥
लभते वनकाण्डस्य पठनश्रवणान्नरः ॥ १५ ॥

7. எவர்கள் ஸ்ரீராமனைத் தியானம்செய்துகொண்டு, புராதனமும், புண்ணியமான ஸ்ரீமத் ராமாயணம் என்னும் இதிகாசத்தை பூஜைசெய்கிறார்களோ அவர்கள் சுகத்தை அடைகிறார்கள்.

8. தர்மார்த்தகாமமோக்ஷங்களை விரும்பிய பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்களால் எப்பொழுதும் ஸ்ரீமத்ராமாயணம் ஆதரவுடனும் நியமத்துடனும் கேட்கத்தகுந்தது.

9. படிப்பதற்கும், பிரவசனம் செய்வதற்கும் பிராமணன் ஒருவனுக்கே அதிகாரம்

10. நாரதா! ராமாயணமென்ற கல்பவிருக்ஷத்தின் ஏழுகாண்டங்கள் என்ற கனிகள் ஏழுவித பலன்களை கொடுக்கின்றன

11. படிப்பதைக் காட்டிலும் சிரவணஞ் செய்வது அதிக பலனை அளிக்கிறது.

12. அதைக் காட்டிலும் அர்த்தம் சொல்வது அதிகபுண்ணியத்தைக் கொடுப்பதாகக் கருதப்படுகின்றது.

13. பாலகாண்டத்தின் படனம், சிரவணம், முதலியன புத்திரபௌத்திராதி சம்பத்தைக் கொடுக்கும்; ஸமஸ்த வியாதிகளையும் நிவிர்த்திசெய்யும்; பத்னிபுத்திராதிகளுடனுண்டாகும் கலஹத்தை நாசம் செய்யும்; க்ஷேமத்தை விருத்திசெய்யும்.

14. அயோத்யாகாண்டத்தைப் படிப்பது இச்சித்த கார்யங்களின் இடையூறு இல்லாததாகும்; தர்மத்தை விருத்தி செய்யும்; பிதாவுக்கும் புத்திரர்களுக்கும் சினேகபாவம் உண்டாகும்; ஸ்ரீராமருக்கு பணிவிடை செய்வதில் ஆசையை உண்டாக்கும்.

15. ஒரு மனிதன் ஆரண்யகாண்டத்தைப் படிக்கவோ கேட்கவோ செய்தால், தன்னை விட்டுப்பிரிந்த பந்துக்களுடன் சேர்க்கையையும், ஸ்திரீகளுக்கு பதிபக்தியையும், தர்மத்திற்கு விரோதமில்லாமல் காமங்களையடைதலையும், ஸாதுக்களிடத்தில் வாஞ்சையையும் அடைகிறான்.

acharya.org

अर्थावाप्तिं च विपुलां मित्रलाभगुणानपि ।
सत्साहाय्यं सुखप्राप्तिं स्वामिभक्तिं च निर्मलाम् ॥
किष्किन्धाकाण्डसर्गाणां पठनात्प्राप्नुयान्नरः ॥ १६ ॥

यद्यत्सङ्कल्पितं चित्ते सुकरं वाऽपि दुष्करम् । शत्रुहस्ताद्विमुक्तिं च कारागाराद्विमोक्षणम् ।
लभते सुन्दराख्यस्य काण्डस्य पठनान्नरः ॥ १७ ॥

दिने दिने सप्तसर्गांस्तस्य काण्डस्य यो नरः । पठेद्भक्त्या तु काकुत्स्थं हृदि कृत्वा नमस्य च ॥
तस्य जन्मान्तरशतैः सञ्चितस्यापि पाप्मनः । नाशं कुर्यात्सुप्रसन्नो रामो विष्णुः सनातनः ॥
किं पुनश्चिन्तितार्थाप्तिं चिन्तयामः पुनः पुनः ॥ २० ॥

युद्धकाण्डस्य पठनाच्छ्रवणाच्च प्रवाचनात् । सर्वशत्रुक्षयो भूयादसाध्यं साध्यतामियात् ॥
श्रीमदुत्तरकाण्डस्य पठनाद्भक्तितो नरः । जीवन्मुक्तः स विज्ञेयो राघवस्य प्रसादतः ॥
न पुनः स तु जायेत कर्म भोक्तुं स्वयं कृतम् ॥ २३ ॥

उषित्वा स तु वैकुण्ठे कार्यब्रह्मसमीपतः । ब्रह्मज्ञानं प्रपन्नोऽथ विष्णोः सायुज्यमाप्नुयात् ॥
येषां गृहेषु तिष्ठेत श्रीरामायणपुस्तकम् . यक्षरक्षःपिशाचाद्या भिया धावन्ति तद्गृहात् ॥

16. ஒரு மனிதன் கிஷ்கிந்தாகாண்டத்தின் ஸர்க்கங்களை படிப்பதால், அதிகமான தன்யாபத்தையும், மித்ரலாபத்தாலுண்டாகும் குணங்களையும், ஸத்ஜனங்களுடைய ஸஹாயத்தையும், ஸுகத்தையும், நிஷ்கபடமான ஸ்வாமிபக்தியையும் பெறுகிறான்.

17. ஒருவன் சுந்தரகாண்டத்தை படிப்பதால், பெற எளியதாயினும் பெற அரியதாயினும் மனதில் நினைத்ததைபெறவும், சத்துருக்களிடமிருந்து விடுதலை பெறவும் சிறைவாஸத்திலிருந்து விடுதலைபெறவும் கூடும்.

18-20. "பிரதிதினமும் சுந்தரகாண்டத்தின் ஏழேழு ஸர்க்கங்களை ஓர் மனிதன் ஸ்ரீராமனை மனதால் தியானம்செய்து, நமஸ்கரித்து, பக்தியுடன் படிப்பானேயானால், என்றுமுள்ள விஷ்ணுவாகிய ஸ்ரீராமர் பிரஸன்னராகி, அவனுடைய பலநூறு ஜன்மாக்களில் ஸஞ்சிதமான பாபங்களை நாசஞ்செய்கிறார். அப்படியிருக்க மனதில் எண்ணிய காரியஸித்தியைக்குறித்துச் சொல்லவேண்டுமோ ?" என்று நாங்கள் அடிக்கடி ஆலோசனை செய்கிறோம்.

21. யுத்தகாண்டத்தைப் படிப்பதாலும், கேட்பதாலும், பிரவாசனம் செய்வதாலும், சகல சத்துருக்களுக்கும் நாசமுண்டாகும்; செய்யமுடியாத காரியமும் செய்துமுடித்ததாகும்.

22-25. ஒரு மனிதன் உத்தரகாண்டத்தை பக்தியுடன் படிப்பதால் ஸ்ரீராமானுக்ரஹத்தால் ஜீவன்முக்தனாக ஆகிறான். தான் செய்த கர்மபலத்தை அனுபவிக்க மறுபடியும் பிறப்பதில்லை. அவன் வைகுண்டத்தில் கார்யபிரம்மத்தினருகில்வாஸம் செய்து பிரம்மஜ்ஞானத்தைப்பெற்று ஸ்ரீ விஷ்ணுவின் ஸாயுஜ்யத்தையடைகிறான். எவர்களுடைய கிருஹத்தில் ஸ்ரீ ராமாயண புஸ்தகம் இருக்கிறதோ, அந்த கிருஹத்திலிருந்து யக்ஷர், ராக்ஷஸர், பிசாசர் முதலியவர்கள் பயத்தால் ஓடிப்போகின்றார்கள்.

acharya.org

श्रीरामायणकोशस्य यैः पूजा क्रियतेदरात् । तस्य देवास्तु निखिलाः प्रसीदन्ति स्वयं सुत ॥
यैर्नित्यं पठ्यते भक्त्या दिनविच्छित्तिशून्यकम् । गच्छन्तमनुगच्छेत्तं श्रीरामः करुणावशः ॥
पाठः काम्यश्च नित्यश्च मोक्षार्थश्चेति स त्रिधा ॥ २८ ॥
सङ्कल्प्यानिष्टनाशं वा इष्टावाप्तिं मनोरथे । श्रीरामायणपाठस्तु काम्यः स परिकीर्तितः ॥
काण्डस्य सुन्दराख्यस्य सप्तसर्गीविधानतः ॥ ३० ॥
सम्पूर्णस्यापि षट्काण्डसंमितस्य विधानतः । पुनर्वसौ समारम्भः सम्पूर्तिश्च पुनर्वसौ ॥
चैत्रे वाऽश्वयुजे मासि नवरात्रे महोत्सवे । पठनं कुरुते विप्रः कामानां परिपूर्तये ॥ ३२ ॥
सङ्कल्पादौ समारभ्य मुहूर्तत्रयपाठनम् । काम्यपाठ इति प्रोक्तो नित्यपाठमथो शृणु ॥
दिने दिने त्वविच्छित्त्या मनसाद्रव्यतोऽपि वा । संपूज्य सीतारमणं तं ध्यात्वा पुस्तकेधिया ॥
नित्यकर्माविरोधेन प्रातः सङ्कल्प एव वा । पठेद्रामायणं पुण्यमुच्चैः सुस्वरमेव च ॥ ३५ ॥
अनश्नन्नेव च पठेद्राघवस्य कृपाप्तये ॥ ३६ ॥

26. புத்திர! எவர்களால் ஸ்ரீ ராமாயண புஸ்தகமானது ஆதரவுடன் பூஜிக்கப்படுகிறதோ, அவர்களுக்கு தேவர்களனைவரும் தாமே அனுக்கிரஹம் செய்கிறார்கள்.

27. எவன் ஒரு நாள் தவிராமல் பக்தியுடன் ஸ்ரீ ராமாயணத்தைப் படிக்கிறானே, அவன் எங்கு சென்றாலும் ஸ்ரீராமன் கருணை கூர்ந்து அவனைப் பின்தொடர்ந்து செல்லுகிறார்.

28. ஸ்ரீராமாயண படனம், காம்யம், நித்யம், மோக்ஷார்த்தம் என்று மூன்று வகைப்படும்.

29. அனிஷ்டங்கள் தீரவேண்டுமென்றுவாது, இஷ்டங்கள் சித்திக்கவேண்டுமென்றுவது ஸங்கல்பம்செய்து ஸ்ரீராமயணத்தை படிப்பது 'காம்யபாடம்' என்று சொல்லப்படுகிறது.

30-33. ஸ்ரீ சுந்தரகாண்டத்தை 'ஸப்தஸர்க்கபாராயண' முறைப்படி படிப்பதும், புனர்வஸு நக்ஷத்திரத்தில் தொடங்கி மறுபுனர்வஸு நக்ஷத்திரத்தில் ஆறு காண்டங்களை பாராயணம் செய்து முடிப்பதும், சைத்திரமாதத்தில் ஸ்ரீராமநவமி மஹோத்ஸவகாலத்திலாவது, ஆச்வயுஜமாதத்தில் நவராத்திரிமஹோத்ஸவகாலத்திலாவது பிராம்மணன் அபீஷ்டங்களை பூர்த்தியாவதற்காக படிப்பதும். ஸங்கல்பகாலத்தில் ஆரம்பித்து, மூன்று முகூர்த்தகாலம் பாராயணம்செய்து முடிப்பதும் 'காம்யபாடம்' என்று சொல்லப்படுகிறது. இதற்குமேல் 'நித்யபாடத்தை' கேள்.

34-35. ஒவ்வொரு நாளும் தினவிச்சேதமின்றி ஸ்ரீராமாயணபுத்தகத்தில் சீதாரமணனை ஸ்ரீராமனை தியானம் பண்ணி, மனதாலாவது, திரவியங்களைக் கொண்டாவது பூஜைசெய்து, நித்யகர்மவிரோதமில்லாமல், ப்ராதக்காலத்திலாவது, ஸங்கவகாலத்திலாவது புண்ணியமான ஸ்ரீராமாயணத்தை நல்ல ஸ்வரத்தில் உரச்சப்படிக்கவேண்டும்.

36 ஸ்ரீராமனுடைய அனுக்கிரகத்தைப் பெறுவதற்கு போஜனம் செய்யாமலே பாராயணம் செய்யவேண்டும்.

acharya.org

पठेत्तु सर्गान्दश वा पञ्च वा त्रीनथापि वा । एकं वाऽपि पठेत्सर्गं प्रयतो नान्यमानसः ॥
उत्तमं दश सर्गास्तु मध्यमं सर्गपञ्चकम् । अधमं तु त्रयःसर्गा एकसर्गोऽधमाधमः ॥ ३८ ॥
न सर्गमध्ये विरमेद्यदि दैवाद्विरम्यते । पुनस्तदादिमारभ्य पठेन्नियमपूर्वकम् ॥ ३९ ॥
एवं कृते फलं यत्स्यात्तद्वदिष्यामि नारद ॥ ४० ॥
दारिद्र्यनाशो रोगाणां द्रावणं सुखवर्धनम् । भवेज्जन्मान्तरे चैव यत्पापं रचितं नृभिः ॥
तच्चापि नश्यति क्षिप्रं ज्ञानं स्यान्मोक्षसाधनम् ॥ ४१ ॥
न पुनर्जायते सोऽयं सवित्रीयोनितो भुवि ॥ ४२ ॥
मोक्षार्थपाठं वक्ष्यामि शृणु वीणामुने शुभम् ॥ ४३ ॥
दिवा भुक्त्यन्तरं विप्रस्त्वपराह्णे यतव्रतः । एकावरं तु श्रोतारं कल्पयित्वा शुचिव्रतम् ॥
अखादित्वा तु तांबूलमपीत्वाऽपि जलं शुचिः । यथाशक्ति च संपूज्य श्रीरामायणपुस्तकम् ॥
एकावरान् पठेत्सर्गान् विरक्तस्तु त्रिवर्गके ॥ ४५ ॥
न संभाषेत दारैर्वा पुत्रैर्वा पाठमध्यतः ॥ ४६ ॥

37. வேறொன்றில் மனதைச் செலுத்தாதவனாய, பரிசுத்தனாக இருந்து கொண்டு பத்தோ அல்லது ஐந்தோ அல்லது மூன்றோ அல்லது ஒரு ஸர்க்கத்தை யோ பாராயணம் செய்யவேண்டும்.

38. பத்துஸர்க்கங்கள் பாராயணம் செய்வது உத்தமம்; ஐந்துஸர்க்கங்கள் மத்திமம்; மூன்றுஸர்க்கங்கள் அதமம்; ஒரு ஸர்க்கம் அதமாதமம்.

39. ஒருஸர்க்கத்தின் நடுவில் பாராயணத்தை நிறுத்தக்கூடாது. ஏதாவது ஒரு காரணத்தால் நிறுத்தப்படுமானால் மறுபடி அந்த ஸர்க்கத்தின் ஆதியிலிருந்து நியமத்தோடு படிக்கவேண்டும்.

40. நாரதா! இவ்விதம் பாராயணம் செய்தால் பலமென்னவென்பதைச் சொல்கிறேன்; கேள்.

41. தரித்திரநாசம், ரோகசாந்தி, சுகம் அதிகமாதல் இவைகளுண்டாகும். மனிதர் முன்ஜன்மத்தில் செய்த பாபம் சீக்கிரத்திலே நசிக்கும், மோக்ஷஸாதன மான ஞானமுண்டாகும்.

42. அதன் மறுபடி தாய்வயிற்றிலிருந்து பூமியிற்பிறப்பதில்லை.

43. நாரதமுனியே! மங்களகரமான 'மோக்ஷார்த்த' பாடத்தை சொல்கி றேன், கேள்.

44-45. பிராமணன் பகற்போஜனத்திற்குப் பிறகு பிற்பகலில் நியமத்துடன் ஒருவருக்குக்குறையாமல் நன்னடத்தையுடையவனை ச்ரோதாவாக வைத்துக் கொண்டு தாம்பூலம் தரிக்காமலும் ஜலபானங்கூட செய்யாமலும் சுசியாயிருந்து கொண்டு ஸ்ரீராமாயணபுஸ்தகத்தை சக்தியனுசாரமாக பூஜை செய்து தர்மார்த்தகா மங்களில் பற்றற்றவனாக ஒரு ஸர்க்கத்திற்குக் குறையாமல் படிக்கவேண்டும்.

46. பாராயணமத்தியில் பத்தினியோடாவது புத்திரர்களோடாவது பேசக் கூடாது.

acharya.org

आरभ्य नारदप्रोक्तं सर्गं वाल्मीकये पुरा । यावदुत्तरकाण्डान्तं पठेदेवं क्रमेण तु ॥ ४७ ॥
चतुर्विंशतिसाहस्रश्लोकमण्डलमादरात् । पठित्वा तु समाप्याथ ब्राह्मणान् भोजयेद्बहून् ॥
प्रतिसाहस्रकश्लोकमेकैकं भोजयेद्द्विजम् ॥ ४९ ॥
श्रीरामजनने चैव सीतायाः पाणिपीडने । पादुकाराज्यलाभे च जटायोर्मोक्षसङ्गतौ ॥ ५० ॥
सुग्रीवराज्यलाभे च तरणेऽब्धेर्हनूमतः । अङ्गुलीयकदाने च विभीषणसमागमे ॥ ५१ ॥
विभीषणस्य राज्यार्थं लङ्कायामभिषेचने । रामपट्टाभिषेके च कारयेदुत्सवं प्रभोः ॥ ५२ ॥
श्रीमदुत्तरकाण्डस्य समाप्तौ तु द्विजोत्तम । महोत्सवं प्रकुर्वीत रामस्य परमात्मनः ॥ ५३ ॥
नित्यपाठे च पाठे च मुमुक्षूणां यथाक्रमम् ।
काण्डाः सप्तापि पाठ्याः स्युरन्यथा निष्फलं भवेत् ॥ ५४ ॥
काम्यपाठे तु षट्काण्डमितं रामायणं पठेत् । न तत्रोत्तरकाण्डस्य पठने श्रेयसां क्षतिः ॥
रामायणस्य पठनं यदारभ्येत हि क्वचित् । तद्ग्रन्थस्य पुरस्तात्तु कोऽपि नासीत सर्वथा ॥

47. நாரதரால் வால்மீகிக்குச் சொல்லப்பட்ட ஸர்க்கம் (பாலகாண்டம் முதல் ஸர்க்கம்) ஆரம்பித்து உத்தரகாண்டம் முடிய இவ்வாறு ஒழுங்காகப் படிக்க வேண்டும்.

48. இருபத்திநாலாயிரம் சுலோகங்களை ஆதரவுடன் படித்துமுடித்தபிறகு அனேக பிராமணர்களை போஜனம் செய்விக்கவேண்டும்.

49. ஒவ்வொரு ஆயிர சுலோகத்திற்கும் ஒவ்வொரு பிராமணரை போஜனம் செய்விக்கவேண்டும்.

50-52. ஸ்ரீராமாவதார கட்டத்திலும், ஸீதாவிவாஹ கட்டத்திலும், பாதுகாபட்டாபிஷேக கட்டத்திலும், ஜடாயுமோக்ஷ கட்டத்திலும் சுக்ரீவபட்டாபிஷேக கட்டத்திலும் ஹநுமான் ஸமுத்திரத்தைத் தாண்டுகிற கட்டத்திலும், கணையாழி கொடுக்கும் கட்டத்திலும், விபீஷண சரணாகதி கட்டத்திலும், இலங்கையில் விபீஷண பட்டாபிஷேக கட்டத்திலும், ஸ்ரீராம பட்டாபிஷேக கட்டத்திலும் ஸ்ரீராமசந்திரப் பிரபுவுக்கு உத்ஸவம் செய்யவேண்டும்.

53. பிராமணோத்தமா! உத்தரகாண்டம் முடியும்பொழுது பரமாத்மாவாகிய ஸ்ரீராமருக்கு மஹோத்ஸவம் செய்யவேண்டும்.

54. நித்திய பாராயணக் கிரமத்திலும், மோக்ஷார்த்த பாராயணக்கிரமத்திலும் கிரமமாக ஏழுகாண்டங்களும் படிக்கவேண்டியவைகளே; அல்லாவிடில் பலனுண்டாகாது.

55. காம்யபாடத்தில்மட்டும் ஆறுகாண்டங்களுள்ளிட்ட ஸ்ரீராமாயணத்தை படிக்கவேண்டும். ஆனால் உத்தரகாண்டத்தை பாராயணம் செய்வதால் கெடுதியில்லை.

56. எவ்விடத்திலாகட்டும் ஸ்ரீராமாயணபாராயணம் தொடங்கப்படுமேயாகில் ஸ்ரீராமாயணபுஸ்தகத்தின் முன்பக்கத்தில் ஒருவனும் எவ்விதத்திலும் இருக்கக்கூடாது.

acharya.org

शृणोति तत्र ह्यासीनो हनुमान् राघवीं कथाम् ॥ ५७ ॥
स्वस्थाने यः समासीनस्तं शपेत् स तु कोपतः ॥ ५८ ॥
सर्वशास्त्रार्थपारज्ञो भक्तियुक्तो रघूत्तमे । वाल्मीकिहृदयाभिज्ञः शब्दसारार्थसारवित् ॥
प्रवक्तृत्वेऽधिक्रियेत ह्यन्यथा हनुमाञ्च्छपेत् ॥ ५९ ॥
श्रोतृभिश्च प्रवक्ता तु पूजनीयः प्रयत्नतः । तं च मत्वा रघूत्तंसमादृताः शृणुयुः कथाम् ॥
दुग्धेन मधुनाऽऽज्येन भोजयेत्तं दिने दिने ॥ ६१ ॥
वस्त्रैराभरणैश्चित्रैः स्तुतिभिश्चापि पुष्कलैः । संमानयेत्प्रवक्तारमादावन्ते च मध्यतः ॥ ६२ ॥
एतदुद्देशतः प्रोक्तं श्रीरामायणवैभवम् । यः पठेच्छृणुयाद्वाऽपि भक्त्याऽध्यायमिमं नरः ॥
श्रीरामस्य प्रसादस्य पात्रं स भवति ध्रुवम् ॥ ६३ ॥

इति श्रीस्कान्दोपपुराणे पुराणवैभवखण्डे ब्रह्मनारदसंवादे श्रीरामायणपठन-श्रवणविधिनिरूपणं नाम त्रयोविंशोऽध्यायः ॥

अत्र प्रथमोऽध्यायः ॥

57. ஹனுமான் அவ்விடத்தில் வீற்றிருந்து ஸ்ரீராமகதையை கேட்கிறார்.

58. தனது ஸ்தானத்தில் எவன் வீற்றிருக்கிறானே, அவனை கோபத்தால் ஹனுமான் சபிப்பார்.

59. ஸமஸ்தசாஸ்திரார்த்தங்களை அறிந்தவனும், ஸ்ரீராமனிடம் பக்தியுள்ளவனும், வால்மீகி மஹரிஷியின் அபிப்பிராயம் அறிந்தவனும், சப்தசாரத்தையும் அர்த்தசாரத்தையும் அறிந்தவனுமிருப்பவனே பிரவசனத்தில் அதிகாரமுள்ளவனாவான். அதற்கு விபரீதமானால் ஹனுமான் சபிப்பார்.

60. பிரவசனம் செய்பவன் ச்ரோதாக்களால் சிரத்தையோடு பூஜிக்கப்பட வேண்டும். பிரவசனம் செய்பவனை ஸ்ரீராமனுகத்தியானம் பண்ணிக்கொண்டு மிக்க ஆதரவுடன் கதையைக் கேட்கவேண்டும்.

61. பிரதினமும் பால், தேன், நெய் இவைகளால் அவரை போஜனம் செய்விக்கவேண்டும்.

62. பிரவசனம் செய்பவரை ஆதியிலும், மத்தியிலும், கடைசியிலும் அனேக விதங்களான வஸ்திரங்களாலும், ஆபரணங்களாலும், பரிசுத்தமான ஸ்தோத்திரங்களாலும் வெகுமானம் செய்யவேண்டும்.

63. இவ்விதம் ஸ்ரீராமாயணமஹிமை சுருக்கமாய்ச் சொல்லப்பட்டது. யாதொரு மனிதன் பக்தியுடன் இந்த அத்தியாயத்தை படிக்கவோ, கேட்கவோ செய்கிறானே, அவன் நிச்சயமாய் ஸ்ரீராமபிரானின் அனுக்கிரகத்திற்கு ஆளாகிறான்.

acharya.org

द्वितीयोध्यायः ॥

युधिष्ठर उवाच—

भगवन् सर्वधर्मज्ञ अपारकरुणानिधे । रामायणेतिहासस्य काम्यपाठक्रमं वद ॥ १ ॥
कथं वा कामिभिः पाठ्यं कं वा नियममाश्रितैः । एतदाख्याय मां सद्यः पावय त्वं महामुने ॥

दाल्भ्य उवाच—

सम्यक् पृष्टं महाराज रामदिव्यकथामृतम् । पुनीयात्त्वां च मां चैतान् रामायणमहानदी ॥
चतुराननवक्त्राब्जाच्छ्रीरामायणवैभवम् । श्रुत्वा जगाद धर्मात्मन्नारदो भगवानृषिः ॥ ४ ॥

नारद उवाच—

रामस्य चरितं प्रोक्तं मया वाल्मीकये पुरा । श्रुत्वा मत्तस्तु निखिलं मुनिः काव्यं चकार हि ॥
प्रोच्यते तस्य काव्यस्य माहात्म्यं कथमीदृशम् ॥ ५ ॥
अन्ये च मुनयः केचिद्रामस्य चरितं शुभम् । निबध्नन्ति स्वकैर्वाक्यैर्न तेत्र कथमादरः ॥
प्रमार्जयैनं सन्देहं चरणाब्जं नतोऽस्मि ते ॥ ७ ॥

ब्रह्मोवाच—

न तेऽत्र संशयः कार्यो वत्स सर्वात्मना मुने ॥ ८ ॥

1. **யுதிஷ்டிரர் சொல்லுகிறார்:—** சகல தர்மங்களையுமறிந்த பகவானே! கரையிலாக் கருணைக் கடலே! ஸ்ரீராமாயண இதிஹாஸத்தின் காம்யபாடக்கிரமத்தைச் சொல்வீராக.

2 மாமுனிவரே! இஷ்டத்தைக் கோரிய ஜனங்களால் எப்படி என்னென்ன நியமங்களுடன் ஸ்ரீராமாயணம் படிக்கத்தக்கதென்று சொல்லி என்னை பரிசுத்தனாக்க வேண்டும்.

3. **தால்ப்யர் சொல்லுகிறார்:—** மஹாராஜனே! ஸ்ரீராமனின் திவ்யகதாமிருதத்தைப்பற்றி நன்கு கேட்டீர்கள். ஸ்ரீராமாயணமாகும் மஹாநதி, உங்களையும், என்னையும், இவர்களையும் பரிசுத்தமாகச் செய்யும்,

4. பகவானான நாரதரிஷி, நான்முக பிரம்மனுடைய திருமுகத்தாமரையிலிருந்து ஸ்ரீராமாயணமஹிமையை கேட்டுச் சொன்னார்.

5. **நாரதர் சொல்லுகிறார்:—** முன்காலத்தில் வால்மீகி மஹரிஷிக்கு ஸ்ரீராமசரிதம் என்னால் உபதேசிக்கப்பட்டது. அம்முனிவர் என்னிடமிருந்து எல்லாமும் கேட்டறிந்த பிறகு அதை ஒருகாவியமாகச் செய்தார். என்னகாரணத்தால் அந்த காவியத்திற்கு இவ்வளவு மஹிமை சொல்லப்படுகிறது.

6. இன்னும் வேறு சில ரிஷிகள் மங்களகரமான ஸ்ரீராமசரிதத்தை தங்கள் வாக்கியங்களால் உண்டுபண்ணுகிறார்கள். ஆனால் அவைகளில் தங்களுக்கு ஏன் ஆதரவில்லை?

7. தங்கள் திருமலரடிகளில் வணங்குகின்றேன். இந்த சந்தேகத்தை நீக்கவேண்டும்.

பிரம்மா சொல்லுகிறார்:— குழந்தாய்! நாரதமுனியே! இந்த விஷயத்தில் எப்படியும் நீ சந்தேகப்படவேண்டாம்.

acharya.org

सुबहूनि निबध्नन्ति काव्यानि बहवो भुवि। श्रीराघवकथाढ्यानि युक्तियुक्तानि चैव हि॥
न मे तत्रादरं चेतः करोति मधुरेष्वपि ॥ ९ ॥
वाल्मीकिरुपदेशं तु गृहीत्वा तव बुद्धिमान्। भक्तियुक्तो रघूत्तंसे द्रुतचित्तोऽभवत्तदा॥
राघवः परमात्माऽथ रहस्याहूय मां प्रभुः। आदिदेश स्वचरितं प्रकटीकर्तुमुद्यतः॥ ११ ॥
श्रीराम उवाचः—
चतुरास्य तवेदानीं कार्यं किमपि गोपितम्। तत्ते कर्तव्यमचिरान्मम प्रियचिकीर्षया ॥
संसारसिन्धुतरणं जनाः कर्तुमनीश्वराः। मत्कथासंज्ञितां नावं प्राप्य नन्दन्तु निर्वृताः ॥
इति मे बुद्धिरुत्पन्ना तदर्थं चाहुतो भवान् ॥ १४ ॥
अवतारक्रिया पूर्णा रावणो निहतो रिपुः। भोक्ष्ये त्वच्छापमित्येव भृगवेऽहं वरं ह्यदाम्॥
तदर्थं यत्नमास्थास्य इति कार्यद्वयं मतम् ॥ १५ ॥
शृङ्गारविरलं दुःखशोकायासनिरन्तरम्। मच्चरित्रं यथावत्तु कः समर्थो निबन्धितुम् ॥
वाल्मीकिर्नारदमुनेराकर्ण्य चरितं मम। द्रवचित्तोऽभवत्सद्यः कौमुद्या चन्द्रकान्तवत्॥

9. உலகில் அனேகர், ஸ்ரீராமகதை நிறைந்தவைகளும் யுக்தியுத்தங்களு மான அனேகம் காவ்யங்களை யுண்டுபண்ணுகிறார்கள். அவைகள் இனிமையாக இருந்த போதிலும் என்மனம் அவைகளில் செல்லுவதில்லை.

10. புத்திமானான வால்மீகிமுனி உன் உபதேசத்தைப்பெற்று, ஸ்ரீராமனிடத் தில் பக்தியுடையவராய் அதனால் மனமுருகினவராக ஆனார்.

11. அப்பொழுது, ஸ்ரீராமபரமாத்மா தனது சரிதத்தை வெளியிட ஆஸக் தராக பவித்து என்னை தனிமையில் வரவழைத்து ஆக்ஞாபித்தருளினார்.

12. ஸ்ரீராமர் சொல்லுகிறார்:—ஹே! பிரம்மதேவரே! தாங்கள் ரஹஸ்ய மாகச் செய்யவேண்டிய ஒரு கார்யமிருக்கிறது. அது எனது பிரியத்திற்காக சீக்கிரமாகவே உம்மால் செய்யப்படவேண்டும்.

13-14. ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்ட சக்தியற்ற ஜனங்கள் எனது சரித மாகிற மரக்கலத்தையடைந்து மனக்கவலை நீங்கி ஸந்தோஷமடையட்டும் என்று எனக்கு எண்ணமுண்டானது. அதற்காக நீர் இவ்விடமழைக்கப்பட்டீர்.

15. அவதார பிரயோஜனம் முடிவுபெற்றது. சத்துருவான ராவணன் கொல்லப்பட்டான். உமது சாபத்தை நான் அனுபவிக்கப்போகிறேன் என்று நான் பிருகுமஹர்ஷிக்கு வரம் கொடுத்தேன். அதற்காக நான் பிரயத்தனம்செய் கிறேன். இவ்விதம் இரண்டு கார்யங்கள் உத்தேசிக்கப்பட்டன.

16. சிருங்காரரஸம் குறைந்தும், சோகரஸம், கருணரஸம் நிறைந்தும் உள்ள எனது சரிதத்தை உண்டுபண்ண யார் ஸமர்த்தனாக இருக்கிறார்?

17. வால்மீகிமுனிவர் நாரதரிடமிருந்து எனது சரிதத்தைக் கேட்டு, உடனே நிலாவில் சந்திரகாந்தக்கல் எவ்விதமுருகுமோ, அவ்விதம் மனமுருகினவராக ஆனார்.

acharya.org

मन्येऽहं मच्चरित्रस्य ग्रथने तस्य योग्यताम् ॥ १८ ॥
खरादिनिधनाद्भीतः शङ्कुकर्णो निशाचरः । दण्डकारण्यगो भूत्वा कौञ्चरूपसमाश्रयः ॥
बाधतेऽद्य मुनींस्तस्मात्तस्य कार्यो वधो मया ॥ १९ ॥
मन्मायामोहितः सोऽथ दुष्टो वाल्मीकिसन्निधौ । क्रीडिष्यति समं वध्वा रूपे तदनुरूपया ॥
तदा निषादरूपोऽहं वधिष्यामि निशाचरम् । स्त्रीणामवध्यता यस्मात्तस्मात्तां परिवर्जये ॥
वाल्मीकिस्तु स्वया बुद्ध्या द्रुतश्वेदस्य दर्शनात् ।
शप्स्यते मां स्त्रीवियोगी भवेति रुषितः किल ॥
इष्टं मे कार्यमेतत्स्यात्तस्य दातुं हि गौरवम् ॥ २२ ॥
अतः सरस्वतीं त्वं तु प्रेरयास्याननं प्रति ॥ २३ ॥
मच्चरित्रं तवादेशादथासौ ग्रथयिष्यति । तच्च श्रोष्यामि कालेन स्वयमेव वृतोऽखिलैः ॥
मच्चरित्रपरीक्षायां साधु वाऽसाधु वेति हि ।
प्रवक्तुं कोऽर्हति पुमान्मां विना प्रतिपादितम् ॥ २५ ॥
प्रायेण चरितं मे हि वनेषु चलितं त्वभूत् । तद्गच्छ प्रेरय गिरां देवीमस्याननं प्रति ॥

18. அவர் என் சரிதத்தை எழுதத்தகுதியுற்றவர் என்று நான் எண்ணுகிறேன்.

19. கரன் முதலியவர்களுடைய வதையால் பயந்த சங்குகர்ணன் என்ற அரக்கன், கிரௌஞ்சபக்ஷியின் உருவங்கொண்டு தண்டகாரண்யத்தையடைந்து இப்பொழுது முனிவர்களை ஹிம்ஸிக்கின்றான். ஆகையால் அவனை நான் வதைக்கவேண்டும்.

20. எனது மாயையால் மோஹமடைந்த அந்த துஷ்டன் தனதுருவத்திற்குத் தகுந்த உருவமுள்ள தனது மனைவியுடன் வால்மீகிமுனிவரின் அருகில் கிரீடை செய்யப்போகிறான்.

21. அப்பொழுது வேடனுருக்கொண்ட நான் அந்த அரக்கனை வதைப்பேன். ஸ்த்ரீகள் கொல்லத்தகாதவர்களாதலால் அவனை கொல்லாது விட்டுவிடுவேன்.

22. வால்மீகிமுனிவர், அதைக்கண்டு மனமுருகினவராக பவித்து "நீ மனைவியை விட்டுப்பிரிந்தவனாக பவிக்கவேண்டும்" என்று என்னை சபிப்பார். வால்மீகிமுனிவருக்கு கௌரவத்தைக் கொடுப்பதற்காக அந்த சாபமும் எனக்கு பிரியமானதே.

23. ஆகையால் தாங்கள் அவரது முகத்தில் விளங்குமாறு கலிமகனை ப்ரேரிப்பிக்கவேண்டும்.

24. உமது உபதேசப்பிரகாரம் அவர் எனது சரிதத்தை உண்டுபண்ணுவார். அதை நான் காலக்கிரமத்தில் பந்துக்களால் சூழப்பட்டவனாகவே கேட்பேன்.

25. எனது சரித்திரம் 'சரியா, அல்லவா' என்று பரீக்ஷிப்பதில் என்னைத் தவிர யார் தகுதியுற்றவர்?

26. எனது சரித்திரம் அனேகமாக வனத்தில் நடைபெற்றது. ஆகையால் வாக்தேவதையை அவருடைய முகத்தில் விளங்குமாறு ப்ரேரிப்பிக்கவேண்டும்.

acharya.org

इति प्रतिसमादिष्टो वाणीं संप्रैरयं ततः। वाल्मीकिर्नियमायाथ तमसामगमन्नदीम् ॥
तस्मिन् पश्यति तत्रैव वृक्षे कुत्रापि दंपती। क्रौञ्चौ चिक्रीडतुर्हर्षात्कामबाणवशानुगौ ॥
तयोः पुमांसं वेगेन व्याधो विव्याध बाणतः ॥ २९ ॥

तदुद्वीक्ष्य महाप्राज्ञो वाल्मीकिः सुमहातपाः।
रुवन्त्यां करुणं तत्र क्रौञ्च्यां निर्विण्णमानसः ॥ ३० ॥

सुरतासक्तयोर्घातो न धर्म्य इति जज्ञिवान्। शशाप स मुनिस्तत्र व्याधमाकृष्टकार्मुकम् ॥
मा निषाद प्रतिष्ठां त्वमगमः शाश्वतीः समाः। यत्क्रौञ्चमिथुनादेकमवधीः काममोहितम् ॥
शपन्निति मुनिः क्रोधादुत्तरक्षण एव हि। नापश्यत निषादं तं तां क्रौञ्चीं तं च वृक्षकम् ॥
चिन्तयामास च मुनिर्मायेयं कस्यचिद्भवेत्। अन्यथा हि कथं सर्वं दृष्टनष्टं भवेदिदम् ॥
इति चिन्ताकुलः स्नात्वा समाप्य नियमांश्च सः। स्वाश्रमं पुनरायातः परिक्लिष्टेन चेतसा ॥
ततोऽहमगमं तत्र स्मरन्नाज्ञां रघुप्रभोः। सावित्र्या च सरस्वत्या हंसयुक्तरथे स्थितः ॥

27. இவ்விதம் ஆக்ஞாபிக்கப்பட்டவனுக நான் வாணியை பிரேரிப்பித்தேன். அப்பொழுது வால்மீகி முனிவர் தனது நியமங்களையனுஷ்டிப்பதற்காக 'தமஸை' என்ற நதிக்குச் சென்றார்.

28. அவர் அவ்விடத்தில் பார்த்துக்கொண்டிருக்கவே, ஓரிடத்தில் ஒரு மரத்தில் இரண்டு ஆண்பெண் கிரௌஞ்சபக்ஷிகள் காமவெறியுற்றவைகளாய் கிரீடித்துக்கொண்டிருந்தன.

29. அவைகளில் ஆண்பக்ஷியை ஒரு வேடன் ஒரு பாணத்தால் அடித்தான்

30. அப்பொழுது கிரௌஞ்சப்பேடு மிகக் கருணையோடு அழுதுகொண்டிருக்கும்பொழுது, மஹா புத்திமானும், மஹாதபஸ்வியுமான வால்மீகிமுனிவர் அதைப்பார்த்து மனவெறுப்படைந்தவராக பவித்தார்.

31. ''காமவெறியில் ஈடுபட்டவர்களைக் கொல்லுவது தர்மமாகாது'' என்று ணர்ந்த அந்த முனிவர் வில்லுடனிருக்கும் அந்த வேடனைச் சபித்தார்.

32. ''ஹே! வேடா! காமத்திலீடுபட்டிருக்கும், ஆண்பெண் கிரௌஞ்ச பக்ஷிகளில் ஆண்பக்ஷியை நீ கொன்றதால் நீடித்த காலம் நீ உயிருடனிருக்கமாட்டாய்''.

33. இவ்விதம் கோபத்தினுல் சபித்த அந்த முனிவர் உத்தரக்ஷணத்தில் அந்த வேடனையும், அந்த பெண் கிரௌஞ்ச பக்ஷியையும் அந்த மரத்தையும் காணவில்லை.

34. 'இது யாரோ ஒருவருடைய மாயையாக இருக்கவேண்டும். அல்லது காணப்பட்ட இவையெல்லாம் எவ்விதம் இல்லாததாகும்' என்று அந்த முனிவர் சிந்தையுற்றார்.

35. இவ்விதம் சிந்தையுற்றவராகவே அந்த முனிவர் நீராடி நியமங்களையனுஷ்டித்து, மனோவேகனையுடன் தனதாச்ரமம் வந்துசேர்ந்தார்.

36. அப்பொழுது நான் ரகுநாயகருடைய ஆக்ஞையை ஸ்மரித்துக்கொண்டு ஹம்ஸம் கட்டின ரதத்தில் ஸாவித்ரியுடனும், ஸரஸ்வதியுடனும், ஏறிக்கொண்டு அவ்விடம் வந்துசேர்ந்தேன்.

acharya.org

अभ्यर्चितश्च तेनाथ ससंभ्रममहं तदा ॥ ३७ ॥
वाक्यं वल्मीकजन्मानमब्रवं रचिताञ्जलिम् ॥ ३८ ॥

ब्रह्मोवाच—

ब्रह्मन् वल्मीकसम्भूत मा भूश्चिन्तासमाकुलः । कृता माया भगवता परीक्षार्थं हृदस्तव ॥
परदुःखासहिष्णुत्वाद् द्रुतचित्तोऽसि साम्प्रतम् ॥ ४० ॥
मयैव प्रेरिता तुभ्यमियं देवी सरस्वती । स्वयं मुखान्निर्गता ते ज्ञातस्ते वचसो रसः ॥
ईदृशैरेव सरसैः पद्यैरन्यैश्च भूरिशः । कुरु रामकथां पुण्यां यथा ते नारदाच्छ्रुतम् ॥ ४२ ॥
रामत्वेनावतीर्णस्य हरेरद्भुतकर्मणः । जन्मारभ्य स्वधामाप्तिपर्यन्तां सरसां कथाम् ॥ ४३
पुण्यां सुललितार्थां च अतीतानागताश्रयाम् । आश्रित्य सुमहत्काव्यं सर्गबन्धोज्वलं कुरु ॥

वाल्मीकिरुवाच—

चतुरानन लोकेश सर्वधर्मप्रवर्तक । निमग्नोऽस्मि सुधासारे श्रीरामचरिताह्वये ॥ ४५ ॥
जाने पुरुषमीशानं रामं रघुकुलोद्भवम् ॥ ४६ ॥
आचार्यानुपदिष्टाया विद्याया वीर्यशून्यताम् । विज्ञाय नारदमुनेः प्राप्तं रामकथामृतम् ॥

37. அப்பொழுது அவரால் பரபரப்புடன் பூஜைசெய்யப்பட்டேன்.

38. அஞ்சலிபந்தம் செய்துகொண்டிருந்த அந்த வல்மீகிமுனிவரைப்பார்த்து சொன்னேன்.

39. **பிரம்மதேவர் சொல்லுகிறார்:—** வல்மீகத்திலிருந்து ஜனித்த நீ! பிராம்மணோத்தமரே! நீர் சிந்தைப்படவேண்டாம். உமது மனதை பரீக்ஷிப்பதற்காக ஸ்ரீ மஹாவிஷ்ணுபகவானால் இந்த மாயை செய்யப்பட்டது.

40. அன்னியனது துக்கத்தை ஸஹியாததால் மனமுருகினவராக ஆகிறீர்.

41. என்னால்தான் ஸரஸ்வதீதேவி உமக்காக அனுபவிக்கப்பட்டவளாய் உமது முகத்திலிருந்து வெளிக்கிளம்பினாள். உமது வாக்கின் இனிமை அறியப்பட்டது.

42. ரஸவந்துக்களான இப்படிப்பட்டவைகளும், மற்றவைகளுமான பத்யங்களால் (ச்லோகங்களால்) நீர் நாரதமுனிவரிடமிருந்து கேட்டபிரகாரமே புண்யமான ஸ்ரீராமகதையச் செய்வீராக.

43-44. ஸ்ரீராமராக அவதரித்து ஆச்சர்யகரங்களான செயல்களையுற்ற ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஜனனம்முதல் வைகுண்டம்போய் சேருவது வரையிலுமுள்ளதும், ஸரஸமும், புண்யமும் அழகான அர்த்தங்களடங்கியதும், நடந்ததும், நடக்கப்போகிறதுமான கதையைத் தழுவி, ஸர்க்கபந்தங்களால் மிகவும் சோபிக்கிறதான மிகப்பெரிய ஒரு காவ்யத்தை செய்யவேண்டும்.

45. **வால்மீகிமுனிவர் சொல்லுகிறார்:—** உலகங்களுக்கீசனும் எல்லா தர்மங்களையும் பிரவர்த்திப்பிக்கும் பிரம்மதேவரே! ஸ்ரீராமசரிதமெனப்படும் அமிருதத்தில் நான் முழுகினவனாக ஆகின்றேன்.

46. ரகுவம்சத்திலுதித்த ஸ்ரீராமன் புருஷோத்தமனென்று நானறிவேன்.

47. ஆசாரியன் உபதேசம் செய்யாத வித்தைக்கு வீர்யமில்லையென்றறிந்து நாரதமுனிவரிடமிருந்து ஸ்ரீராமகதாம்ருதத்தின் உபதேசத்தைப் பெற்றேன்.

acharya.org

यदि शक्तोऽस्मि रामस्य चरितं पुण्यवत्तमम् । काव्यात्मना संग्रथितुं यदि चानुग्रहस्तव ॥
वक्ष्यामि रघुनाथस्य कथां काव्यात्मना शुभाम् ॥ ४८ ॥
तवानुग्रहतो भूयात्काव्ये मे नानृतं क्वचित् ॥ ४९ ॥
न च मिथ्याप्रलपितं प्रायुर्मां बुधा भुवि । श्लोकानामखिलानां च तात्पर्यं सुमहद्भवेत्॥
रसाः शृङ्गारकारुण्यहास्यवीरादयोऽखिलाः । तत्र तत्र मयोद्दिष्टा भूयासुश्च यथोचितम् ॥
न क्वचिदपशब्दो मे न च किञ्चिदृथा पदम् । श्रीरामचरिते भूयान्मम काव्यं प्रमाणकम् ।
नान्यत्किञ्चित्तथा भूयान्मत्काव्यस्यार्चनीयता ॥ ५२ ॥
पठनश्रवणाभ्यां मे काव्यस्य सकृदप्यहो । पुरुषार्थाश्च सर्वेऽपि भूयासुर्भुवि सर्वतः ॥
ब्रह्मोवाच—
वल्मीकजन्मन् सुमुने रामनामप्रभावतः । शापात्त्वं नीचवृत्तस्थोऽप्येवं जातो मुनीश्वरः ॥
नाम्न एवं प्रभावश्चेद्रामस्य परमात्मनः । किमु तच्चरितांभोधौ प्लवनादघनाशने ॥ ५५ ॥

48. மிகப்புண்யமான ஸ்ரீராமசரித்திரத்தைக் காவ்யமாகச் செய்ய முடிந்தவனுகில், தங்களனுக்கிரகமிருக்குமேயாகில், மங்களமான ஸ்ரீராமகதையை காவ்ய ரூபமாகச் சொல்லுகிறேன்.

49. தங்களது அனுக்கிரஹத்தால் எனது காவ்யத்தில் ஓரிடத்திலாவது பொய் இருக்கக்கூடாது.

50. உலகில் பண்டிதர்கள் என்னை பொய்சொன்னவனென்று சொல்லக் கூடாது. எல்லா ச்லோகங்களுக்கும் அர்த்தகாம்பீர்யமிருக்கவேண்டும்.

51. சிருங்காரரஸம், கருணரஸம், ஹாஸ்யரஸம், வீரரஸம் முதலியவைகள் நான் எண்ணியவிதமே அந்தந்த இடங்களுக்குத் தகுந்தவையாக பவிக்கவேண்டும்.

52. ஸ்ரீராமாயணத்தில் ஒரு அபசப்தமாவது, வீணான ஒரு பதமாவது இருக்கக்கூடாது. எனது காவ்யம் பிரமாணமாக பவிக்கவேண்டும். வேறு ஒரு காவ்யமாவது இதற்கீடாகக்கூடாது. எனது காவ்யம் பூஜிக்கத்தக்கதாகவும் பவிக்கவேண்டும்.

53. எனது காவ்யத்தை ஒருதரமாவது படிக்கவாவது கேட்கவாவது செய்தால் எவ்விதத்திலும் எல்லா புருஷார்த்தங்களும் ஸித்திக்கவேண்டும்.

54. **பிரம்மதேவர் சொல்லுகிறார்:**—ஹே! வால்மீகி முனிவரே! நீர் சாபத்தால் இழிவான செயலுடையவராக இருந்தபோதிலும் ராமநாமவைபவத்தால் முனிசிரேஷ்டராக பவித்தீர்.

55 ஸ்ரீராமபரமாத்மாவின் திருநாமங்களுக்கே இவ்வளவு மஹிமையாகில் ஸகல பாபங்களையும் நாசம் செய்யும் அவரது திவ்யசரிதமாகிற ஸாகரத்தில் மூழ்கினால் கேட்கவும் வேண்டுமோ?

acharya.org

वाल्मीकिरुवाच—
न ज्ञायते कथं ब्रह्मन् रामनामप्रभावतः। एवं मुनिरहं जातः शापश्च मम कीदृशः॥ ५६
ब्रह्मोवाच—
वर्णने त्वच्चरित्रस्य न कालोऽयं तथाऽप्यहम्। तवौत्सुक्यनिवृत्त्यर्थं संक्षेपात्प्रब्रवीमि ते॥
वरुणस्य सुतः पूर्वं त्वमभूर्हरिताभिधः ॥ ५८ ॥
कदाचित्तव गेहे तु वरुणेन समाहुताः। मुनयः सनकाद्यास्तु सङ्गता ब्रह्मवादिनः॥
सञ्जल्पुर्मिथस्तत्र श्रुतिस्मृत्याश्रयाः कथाः ॥ ६० ॥
प्रसङ्गेन च रामस्य हरेरवतरिष्यतः। वधाय दशकण्ठस्य कथां ते चक्रिरे तथा॥ ६१
क्रीडापरवशस्त्वं तु तदाऽभूर्गृहबर्हिणा। तत्केकाभिश्च ते हासैः कथाविघ्नो बभूव ह॥
सनत्कुमारः कुपितः शशाप त्वां तदा किल। यस्माल्लोकोत्तरकथाविघ्नाय किल दर्पतः॥
पक्षिणा क्रीडसे तस्माद्व्याधत्वं तु गमिष्यसि ॥ ६४ ॥
इत्युक्ते वचने तेन संभ्रान्ता मुनयोऽखिलाः। त्वं तु निश्चेतनो जातो वरुणो दुःखितोऽभवत्॥

56. வால்மீகிமுனிவர் கேட்கிறார்:— பிரம்மதேவரே! ஸ்ரீராமநாமமகிமை பலத்தால் நான் எவ்விதம் முனிவராக பவித்தேன் என்றும், எனக்கு எவ்விதமான சாபமானது பவித்தது என்றும் என்னால் அறிய முடியவில்லையே.

57. பிரம்மதேவர் சொல்லுகிறார்:— உமது சரித்திரத்தைச் சொல்ல இது தக்க சமயமன்று. ஆகிலும் உமது ஆசை நிறைவேற உமக்கு சங்கிரகமாகச் சொல்லுகிறேன்.

58 நீர் முன்பு "ஹரிதன்" என்ற பெயருடன் வருணனுக்கு புதல்வனாக இருந்தீர்.

59. ஒரு காலத்தில் பிரம்மவித்துக்களான ஸனகாதிமுனிவர்கள் வருணனால் அழைக்கப்பட்டு அவனது கிருஹத்தில் வந்துசேர்ந்தார்கள்.

60. அவ்விடத்தில் அவர்கள் சுருதிஸ்ம்ருதிகளை சம்பந்தித்த சங்கதிகளை ஒன்றுக்கொன்று ஸம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

61. அவர்கள் அவ்விதம் ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில் ராவணனை வதைசெய்வதற்காக ஸ்ரீராமராக அவதாரம் செய்யப்போகும் ஸ்ரீஹரி பரமாத்மாவின் சரிதத்தையும் சொன்னார்கள்.

62 அப்பொழுது நீர் வீட்டிலிருக்கும் மயிலுடன் விளையாடிக்கொண்டிருந்தீர். அந்த மயிலின் 'கேகா' என்ற சத்தங்களாலும் உமது அட்டஹாஸத்தினாலும் கதைக்கு இடையூறு ஏற்பட்டது.

63-64. அப்பொழுது கோபங்கொண்ட ஸனத்குமார முனிவர், உலகத்தில் மிகச் சிறந்த கதைக்கு இடையூறாக நீ கொழுப்பால் பறவையோடுகூட விளையாடினதால் நீ வேடனாக பவிக்கவேண்டுமென்று உம்மை சபித்தார்.

65. இவ்விதம் அவர் சொன்னபொழுது முனிவர்கள் எல்லோரும் திகைத்துப்போனார்கள். நீரோவெனில் பிரக்ஞையற்றவராக பவித்தீர். வருணன் வருத்தமுற்றார்.

acharya.org

प्रसादयामास मुनिं पिता ते शापशान्तये ॥ ६६ ॥
ततः प्रसन्नः स मुनिः पुनस्त्वां वाक्यमब्रवीत् । तव भ्रातुर्भृगोर्वंशे प्रचेता नाम वै मुनिः ॥
आस्तेऽद्य दण्डकारण्ये तपः कुर्वन् सुदुश्चरम् ॥ ६७ ॥
भवितासि सुतस्तस्य वेदवेदाङ्गपारगः ॥ ६८ ॥
कालेन व्याधवृत्तिश्च भवितासि गिरा मम ॥ ६९ ॥
सप्तर्षीणां प्रसादेन रामनामप्रभावतः । पूतो भूत्वा तपःकृत्वा मुनिवर्यत्वमेष्यसि ॥ ७०
इत्युक्त्वा स मुनिर्यातस्त्वं च प्राचेतसोऽभवः ॥ ७१ ॥
वेदवेदाङ्गनिष्णातो ह्यभूस्त्वं बाल्य एव च ॥ ७२ ॥
समित्कुशादीनाहर्तुं जातु त्वं वनमध्यगः ॥ ७३ ॥
बहूनानयतो बद्धान् वध्यमानांश्च वै मृगान् । पश्यंस्त्वं रममाणोऽभूर्व्याधेन मुनिशापतः ॥
आहूतोऽपि च पित्रा त्वं नाध्यगच्छः स्वमाश्रमम् ॥ ७५ ॥
नैषाद्या वर्तमानस्त्वं वृत्त्या हिंसन्मृगान् खगान् ।
परिणीय च भिल्लानां कन्यां कामपि संयतः ॥
पुत्रानुत्पादयंस्तस्यां भरंस्तांश्च मृगैः खगैः ॥ ७६ ॥

66. உமது தந்தை சாபம் தீருவதற்கு முனிவரை வணங்கி வேண்டிக் கொண்டார்.

67. பிறகு மனமுவந்த அம்முனிவர் உம்மைப் பார்த்து இவ்விதம் மொழிந்தார்:—"உமது சகோதரனுன பிருகுமஹர்ஷியின் வம்சத்தில் பிறந்த 'பிரசேதஸ்' என்ற முனிவர் தண்டகாரண்யத்தில் ஒருவராலும் செய்யமுடியாத தவம் புரிந்து கொண்டிருக்கிறார்.

68. "அவருக்கு நீ வேதவேதாங்கங்களையறிந்த புதல்வனுக பவிக்கப் போகிறாய்.

69. "சிலகாலத்திற்கப்பால் எனது சாபத்தால் வேடனுகவும் பவிப்பாய்.

70. "ஸப்தரிஷிகளின் அனுக்கிரகத்தாலும், ஸ்ரீராமநாமவைபவத்தாலும் பாபங்கள் நீங்கி தவம் புரிந்து முனிவர்பெருமானுகவும் பவிப்பாய்."

71. இவ்விதம் சொல்லி அம்முனிவர் போனார். நீரும் பிரசேதஸ்ஸின் புதல்வனுக பவித்தீர்.

72. நீர் சிறுவயதிலேயே வேதவேதாங்கங்களைக் கற்றறிந்தீர்.

73. ஒரு காலத்தில் ஸமித்து தர்ப்பை முதலியவற்றை கொண்டுவருவதற்காக வனமத்யத்தையடைந்தீர்.

74. அவ்விடத்தில் ஒரு வேடனுல் கயிறுகளால் கட்டுண்டவைகளும், கொல்லப்படுகிறவைகளுமான மிருகங்களைப் பார்த்து முனிவர் சாபத்தால் நீர் களிப்புற்றிருந்தீர்.

75. உமது தந்தையால் நீர் அழைக்கப்பட்டாலும் உமது ஆச்ரமத்திற்கு நீர் திரும்பிப்போகவில்லை.

76. நீர் வேடனது தொழிலைக்கொண்டு மிருகங்களையும் பறவைகளையும் ஹிம்ஸிப்பவனுய் வேடர்களது ஒரு கன்னிகையை விவாஹம் செய்துகொண்டு கட்டுப்பட்டவனுக அவளிடத்தில் பிள்ளைகளைப் பெற்று, அவர்களை மிருகங்களாலும் பறவைகளாலும் சம்ரக்ஷணைசெய்துவந்தீர்.

acharya.org

कुटुंबभरणात्खिन्नो बहुवर्षसहस्रतः । जातु त्वं वनमध्यस्थस्तरुस्थं ह्यवधीः खगम् ॥
पलायितः स च खगः स च बाणोऽपतत्त्वयि ॥ ७८ ॥
तेन विद्धांसदेशस्त्वं रुदितो वेदनावशात् ॥ ७९ ॥
तदा सप्तर्षयो मार्गागतास्त्वां वीक्ष्य कंपिताः । दैन्यराशिं त्वामथोचुर्दययाऽभिपरिप्लुताः ॥
अहो मूर्खत्वमेतत्ते विप्रो भूत्वा कुलोद्भवः । ईदृशीं वृत्तिमापन्नोऽस्यरे निष्कृतिवर्जिताम् ।
यथा त्वं खिद्यसे मूढ बाणेनानेन विध्यता । तथा मृगविहङ्गानां व्यथा किं नेति ते मतिः ॥
स्वमांसं परमांसेन यः पुष्णाति नराधमः । रुरवो भक्षयिष्यन्ति तस्य मांसं यमालये ॥
न त्वं निर्विद्यसे मूढ अपीमां वेदनां गतः ॥ ८४ ॥
इत्युक्ते वचने तैस्तु करुणार्द्रितमानसैः । कालयोगात्तु निर्विण्णः सञ्जातस्त्वं मृगात्ययात् ॥

77. இவ்விதம் அனேகாயிர வருஷங்கள் சென்றபிறகு குடும்பபரணத்தால் கஷ்டமடைந்த நீர் ஒருக்கால் ஒரு காட்டின் மத்தியிலிருந்துகொண்டு ஒரு மரத்திலிருக்கும் ஒரு பக்ஷியை பாணத்தால் அடித்தீர்.

78. அந்த பக்ஷி அவ்விடத்திலிருந்து பறந்துபோயிற்று. அந்த பாணமும் உமது சரீரத்தில் விழுந்தது.

79. அந்த பாணத்தால் தோளில் அடிக்கப்பட்ட நீர் வேதனையால் அழுதீர்.

80. அப்பொழுது அவ்வழியாகச் செல்லும் ஸப்தரிஷிகள் உம்மைப் பார்த்து நடுக்கமுற்றவர்களாகி தயைகூர்ந்து, துக்கிதனான உம்மிடத்தில் இவ்விதம் சொன்னார்கள்:—

81. இது என்ன உனது மூடத்தனம். அடே! ஸத்குலத்தில் பிராமணனாக ஜனித்து பிராயச்சித்தம் கூட இல்லாத இந்த தொழிலை அடைந்தாயே.

82. அடே! மூடா! வதை செய்யும் பாணத்தால் நீ எவ்விதம் வருத்தமடைகின்றனையோ, அவ்விதமே மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் வருத்தம் உண்டாகாதென்று உனது எண்ணமா?

83. எந்த ஒரு மானிடப்பதர் தனது மாம்ஸத்தை அன்னியனது மாமிசத்தால் வளர்க்கின்றானே, அவனது மாமிசத்தை யமலோகத்தில் 'ருரு' என்ற மிருகங்கள் பக்ஷிக்கின்றன.

84. நீ இப்படி வருத்தமடைத்தும்கூட விரக்தியை அடையவில்லையே.

85. கருணையால் மனமுருகின அவர்கள் இவ்விதம் சொன்னபொழுது நீர் நல்லகாலம் வந்ததால் மிருகங்களை வதைப்பதிலிருந்து வெறுப்படைந்தீர்

acharya.org

तानब्रवीः प्राञ्जलिस्त्वं तेभ्यो नत्वाऽथ दूरगः ॥ ८६ ॥
अहो अधन्यता मेऽद्य यदहं विप्रवंशजः । भूत्वाऽपि वृत्तिमापन्नो मृगमांसैः स्वयं हृतैः ॥
पश्चात्तप्तोऽस्म्यहं श्रेष्ठाः प्रायश्चित्तं वदन्तु मे ॥ ८७ ॥

सप्तर्षय ऊचुः—

तुष्टा वयं त्वद्विनयादिच्छामस्त्वत्समुद्भृतिम्॥ ८८ ॥
किं तु त्वं पतितो जातः प्रायश्चित्तं न ते श्रुतम् ।
वक्ष्यामोऽथापि कृपया त्वं कुरुष्व यथोदितम् ॥ ८९ ॥
पात्रापात्रविचारो न रामनाम्नां प्रकीर्तने । श्रवणे चोपदेशे च तस्मात्तत्तेऽद्य तु क्षमम् ॥
रामनाम समुच्चार्य यस्मात्पापान्न मुच्यते । त्रिलोक्यामस्ति तन्नैव सत्यमेतत्प्रकीर्तितम् ॥
जातोऽद्यैव रघोर्वंशे रामनाम वहन् हरिः । त्वं तदाम्नाय भक्त्याऽद्य मोक्ष्यसे सर्वपातकैः ॥
उपविश्याश्वत्थमूले कामक्रोधौ विसृज्य च । आजानुबाहुं दिर्घाक्षं नीलकुञ्चितमूर्धजम् ॥
प्रगृह्य वामहस्तेन चापं सव्येन सायकम् ॥ ९३ ॥
प्रावृषेण्यपयोवाहस्वच्छकान्तिमनोहरम् । निष्कामरणविस्तीर्णवक्षसं वनमालिनम् ॥ ९४

86-87. பிறகு வெகுதூரத்தில் நின்றுகொண்டு அவர்களை வணங்கி அஞ்சலி ஹஸ்தராகி அவர்களைப் பார்த்து, "எனது தௌர்பாக்கியத்தை என்னவென்று சொல்வேன். ஏனென்றால் நான் பிராமணஜன்மத்தையடைந்தும்கூட நானே கொன்று கொண்டுவந்த மிருகமாமிசங்களால் உபஜீவனம் செய்துவந்தேன். ஹே! பெரியோர்களே! நான் பச்சாத்தாபத்தை அடைந்துவிட்டேன். எனக்கு பிராயச்சித்தத்தை சொல்லுங்கள்" என்று சொன்னார்.

88. **ஸப்தரிஷிகள் சொன்னார்கள்:**— உனது வணக்கத்தால் சந்தோஷமடைந்தோம். உனது முன்னேற்றத்தை கோருகின்றோம்.

89. ஆனால் நீ பதிதனாக பவித்திருக்கின்றனை. உனக்கு பிராயச்சித்தம் ஸ்மிருதிகளில் சொல்லப்படவில்லை. ஆகிலும் நாங்கள் கருணையால் சொல்கின்றோம்; சொன்னபடி நீ செய்யவேண்டும்.

90. ஸ்ரீராமநாமாக்களை உச்சரிப்பதிலும், கேட்பதிலும், உபதேசிப்பதிலும் யோக்யன், அயோக்யன் என்ற விசாரம் கிடையாது. ஆகையால் அதுதான் இப்பொழுது உனக்குத்தக்கது.

91. ஸ்ரீராமநாமத்தை உச்சரித்தால் தொலையாத பாபம் இந்த மூவுலகிலும் கிடையாது. இது உண்மையே.

92. இப்பொழுதுதான் ஸ்ரீவிஷ்ணுபரமாத்மா ரகுவம்சத்தில் "ஸ்ரீராமன்" என்ற பெயருடன் திருவவதாரம் செய்திருக்கின்றார். ஆகையால் நீ அந்த ஸ்ரீராம நாமத்தை பக்தியுடன் உச்சரித்து ஸகல பாபங்களிலிருந்தும் விடுபடக்கடவாய்.

93-95. அச்வத்தமரத்தினடியில் உட்கார்ந்துகொண்டு காமக்ரோதங்களை விட்டுவிட்டு, முழங்கால்வரையில் நீண்டபுஜங்களையுடையவரும், நீண்டகண்ற கண்களையுடையவரும், கறுத்த சுருண்ட மயிர்களையுடையவரும், இடதுகையால் தனுஸ்ஸையும், வலதுகையால் பாணத்தையும் பிடித்தவரும், மழைக்காலமேகம்போல் ச்யாமலவர்ணரும், ஸ்வர்ணபரணங்களால் விளங்குமகன்ற மார்பையுடையவரும்

acharya.org

सुप्रसन्नमुखांभोजं सुमृष्टमणिकुण्डलम् । चिन्तयन्राघवं बुद्ध्या रामनामजपादृतः ॥ ९५
उपकृत्येति कृपया निवृत्तास्ते स्वकं पदम् ॥ ९६ ॥
त्वं ततः पुत्रदारादिचिन्तामृत्सृज्य दूरतः । राम रामेति रामेति जपन्निश्चलतां गतः ॥
कालेनाल्पेन ते देहं वल्मीकः प्रावृणोन्महान् ॥ ९८ ॥
अतीते वत्सरे काले त्वस्थिमात्रावशेषितम् ।
जपन्तं राम रामेति वल्मीकाच्छादिताङ्गकम् ॥ ९९ ॥
रामनामजपान्मुक्तपातकं त्वां विचिन्तयन् । अहं कमण्डलुजलैरभ्युक्ष्य त्वां न्यबोधयम् ॥
कार्यं च पूर्ववत्कृत्वा तपसे त्वां समैरयम् ॥ १०१ ॥
स्ववृत्तिमनुचिन्त्य त्वं यतः खिन्नोऽभवः पुरा । अतीतानां विस्मरणं ततोऽहमददां तव ॥
ततः शुद्धात्मताम् प्राप्य मुनिश्रेष्ठत्वमागतः ।
यत्त्वं वल्मीकतो जातो वाल्मीकिरिति तद्भवान् ॥ १०३ ॥
इदमेव नवं जन्म तव कृत्वाऽहमाह्वयम् । वाल्मीकिरिति तेन त्वं ख्यातो नाम्नाऽमुनैव ते ।
ख्यातो लोके सर्वलोकै रामनाम्नाऽसि सम्मतः ॥ १०५ ॥

வனமாகியுடையவரும், தெளிவுற்ற முகமுடையவரும் சோபிக்கின்ற ரத்னகுண்டலங்களையுடையவருமான ஸ்ரீராகவனை மனதில் தியானம் செய்துகொண்டு மிக்க ஆதரவுடன் ஸ்ரீராமநாமாவை ஜபிக்கக்கடவாய்.

96. என்று இவ்விதம் கருணையால் உபதேசம் செய்து அவர்கள் தங்கள் ஸ்தானம் போய்ச் சேர்ந்தார்கள்.

97. அனந்தரம் நீர் பத்தினி புத்திரன் முதலிய சிந்தனையை விட்டுவிட்டு 'ராம, ராம, ராம' என்று ஜபம் செய்துகொண்டே அசைவற்றிருந்தீர்.

98. சில நாட்கள் சென்ற உடனேயே பெரும் புற்று உமது தேகத்தை மறைத்துவிட்டது.

99-100. இவ்விதம் ஒரு வருஷகாலம் சென்ற பிறகு எலும்பு மட்டும் பாக்கியாய் 'ராம ராம' என்று ஜபித்துக்கொண்டிருப்பவரும், புற்றால் மூடப்பட்டவருமான உம்மை ஸ்ரீராமநாமத்தையுச்சரிப்பதால் பாபங்கள் தொலைந்தவராக எண்ணி நான் கமண்டலஜலத்தால் பிரோக்ஷணம் செய்து துயிலெழுப்பினேன்.

101. உமது தேகத்தையும் முன்போலவே செய்து உம்மை தவம் புரிய அனுப்பினேன்.

102. நீர் முற்காலத்தில் செய்த உமது தீயத்தொழில்களை நினைத்து பச்சாத்தாபத்தையடைந்ததால் நான் உம்மை அவைகளை மறக்கச்செய்தேன்.

103. பிறகு நீர் பரிசுத்தனாக பவித்து முனிவர்பெருமானாக ஆனீர். நீர் வல்மீகத்திலிருந்து (புற்றிலிருந்து) உண்டானதால் வால்மீகியென வழங்கப்படுகிறீர்.

104. இதையே உமக்கு புதிதான ஜன்மமாகச் செய்து நான் உம்மை அழைத்தேன். ஆகையால் அதே பெயரால் நீர் 'வால்மீகி' என்று பிரஸித்தியடைந்தீர்.

105. ஸ்ரீராமநாம வைபவத்தால் எல்லா உலகத்தாராலும் கௌரவிக்கப்பட்டவராகவும் பிரஸித்திபெற்றவராகவும் பவித்தீர்.

acharya.org

तस्माच्चं कुरु रामस्य चरितं काव्यरूपतः ॥ १०६ ॥
न ते वागनृता काव्ये काचिदत्र भविष्यति । रसपुष्टिर्भावपुष्टिः श्लोकानां ते भविष्यति ॥
न चापशब्दो भविता न चार्थगुणविच्युतिः । प्रमाणं रामचरिते काव्यं तव भविष्यति ॥
रहस्यं च प्रकाशं च रामस्य चरितं महत् । तवैव विदितं भूयान्नान्यो ज्ञास्यति तत्त्वतः ॥
इत्युक्ते च मया तत्र वाक्यमूचे सरस्वती ॥ ११० ॥
सरस्वत्युवाच—
मा ते भूत्काव्यकरणे भयं शब्दार्थसंश्रयम् ॥ १११ ॥
यथा यथा कर्षसि मां शब्दतश्चार्थतोऽपि वा । तथा तथाऽनुयास्ये त्वां त्वदाशयवशानुगा ॥
तव यत्नं विनैवाहं रसं भावं च पोषये । त्वन्मूलतः कृतार्था स्यामुक्त्वा रामकथां मुने ॥
त्वन्मार्गालंबनाद्ये वै कवयो राघवीं कथाम् । विवक्षन्तीह तेषां च भविष्यामि वशानुगा ॥
पश्चात्कवीनामाधारं काव्यं तव भविष्यति । रञ्जयिष्यन्ति लोकास्तु कवयस्त्वत्पथानुगाः ॥
इत्युक्तवत्यां वाग्देव्यां सावित्री वाक्यमब्रवीत् ॥ ११६ ॥

106. ஆகையால் ஸ்ரீராமசரிதத்தை காவ்யரூபமாகச் செய்யக்கடவீர்.

107. இந்தக் காவ்யத்தில் உமது வாக்கு பொய்யாக பவிக்காது. உமது ச்லோகங்களுக்கு ரஸபுஷ்டியும், அபிப்பிராய காம்பீர்யமும் உண்டாகும்.

108. அபசப்தம் என்பதே உண்டாகாது. அர்த்தங்களுக்கும், காவ்யகுணங்களுக்கும் குறைவுண்டாகாது. ஸ்ரீராம சரித்திரத்தில் உமது காவ்யம் பிரமாணமாக பவிக்கும்.

109. ஸ்ரீராமருடைய ரஹஸ்யமானதும், பிரகாசமானதுமான எல்லா சரித்திரமும் உமக்கே பிரத்யக்ஷமாகும். வேறொருவன் உள்ளபடி அறியமாட்டான்.

110. இவ்விதம் நான் சொல்லமுடிந்ததும் ஸரஸ்வதீதேவி ஒரு வார்த்தை சொன்னாள்.

111. ஸ்ரீ ஸரஸ்வதிதேவி சொல்லுகிறாள்:— உமக்கு காவ்யத்தைச் செய்வதில் சப்தார்த்தஸம்பந்தமாக பயம் வேண்டாம்.

112. நீர் சப்தவிஷயத்திலாவது அர்த்தவிஷயத்திலாவது என்னை எவ்விதம் அழைக்கின்றீரோ, அவ்விதமே உனது அபிப்பிராயத்தைத் தழுவிக்கொண்டே நான் உம்முடன் வருகிறேன்.

113. உமது பிரயத்தனமில்லாமலே நான் ரஸபுஷ்டியையும், அபிப்பிராய காம்பீர்யத்தையும் செய்கின்றேன். மஹரிஷியே! உம்மூலமாக ஸ்ரீராம கதையைச் சொல்லி நான் கிருதார்த்தையாக பவிக்கவேண்டும்.

114. உமது வழியை பின்பற்றிக்கொண்டு எந்த கவிகள் ஸ்ரீராமகதையைச் சொல்ல விரும்புகின்றனரோ, அவர்களுக்கும் நான் அதீனையாக பவிப்பேன்.

115. உமது காவ்யமானது பின்வரும் கவிகளுக்கு ஆதார (அவலம்ப)மாக பவிக்கும். உமது மார்க்கத்தை பின்பற்றின கவிகள் உலகங்களை சந்தோஷப்படச் செய்வார்கள்.

116. இவ்விதம் ஸரஸ்வதீதேவி சொன்னபொழுது ஸாவித்ரீதேவி ஒரு வார்த்தை சொன்னாள்.

acharya.org

सावित्र्युवाच—

कुरु रामकथां पुण्यां काव्यरूपां मनोरमाम् । प्रविष्टा त्वां च ते काव्ये प्रतिश्लोकसहस्रकम् ॥
विभक्तावयवा भूत्वा चतुर्विंशतिधा ह्यहम् ॥ ११७ ॥
काव्यचिन्तैकमनसा त्वया चेदनुपस्थिता । न ते कुप्यामि बुद्धेश्च प्रसादं ते ददाम्यहम् ॥
त्वन्मार्गालंबतो ये स्यु रामस्य चरितं शुभम् ।
काव्यात्मनोद्यताः कर्तुं यशसे वा धनाय वा ॥
प्रसीदामि च तेभ्योऽपि तेन मे स्यात्कृतार्थता ॥ ११९ ॥

ब्रह्मोवाच—

इत्येवमनुगृह्यैनं निवृत्ताः स्मो वयं मुने ॥ १२० ॥
अथायं ज्ञानतो वीक्ष्य कृत्स्नां रामस्य सत्कथाम् । राघवस्य प्रसादेन अस्माकं च विशेषतः ॥
रामायणं महाकाव्यं चकार चरितव्रतः ॥ १२१ ॥
चतुर्विंशतिसाहस्रं श्लोकानामुक्तवानृषिः ॥ १२२ ॥
गायत्र्याद्याक्षरं त्वादौ विन्यस्यारब्धवांस्ततः । प्रतिश्लोकसहस्रस्य समाप्तावेकमक्षरम् ॥
विनियुङ्क्ते च गायत्र्या न्यवधाद्राघवीं कथाम् ॥ १२३ ॥

117. ஸாவித்ரீதேவி சொல்லுகிறார்:— புண்யமான ஸ்ரீராம கதையை மனோரம்யமான ஒரு காவ்யமாக நீர் செய்யக்கடவீர். நான் எனது அவயவங்களே இருபத்துநான்காக பிரித்து (விபாகம்செய்து) கொண்டு உமது காவ்யத்தில் ஒவ்வொரு ஆயிரம் சுலோகங்களிலும் பிரவேசிக்கின்றேன்.

118. நீர் காவ்யத்தைச் செய்வது ஒன்றிலே மனதைச் செலுத்தியிருப்பதால் என்னே (உபஸ்தானம்) ஸ்தோத்திரம் செய்யவில்லையாகிலும் நான் உம்விஷயத்தில் கோபித்துக்கொள்ளவில்லை. உமது புத்திக்கு விகாஸத்தையும் கொடுக்கிறேன்.

119. உமது வழியை பின்பற்றிக்கொண்டு எவர்களெல்லாம் மங்களகரமான ஸ்ரீராம சரிதத்தை காவ்யரூபமாக கீர்த்திக்காகவாவது, அல்லது தனத்திற்காகவாவது செய்ய பிரயத்தனிக்கின்றனரோ, அவர்களுக்கும் நான் அனுக்கிரகம் செய்கின்றேன். அதனால் நான் கிருதார்த்தையாக பவிப்பேன்.

120. பிரம்மதேவர் சொல்லுகிறார்:— ஹே! நாரதமுனியே! இவ்விதமாக அவரை அனுக்கிரஹித்து நாங்கள் திரும்பிப்போனோம்.

121. அதன்பிறகு விரதங்களை முடித்துக்கொண்ட வால்மீகிமுனிவர், ஞானதிருஷ்டியால் ஸ்ரீராமசரிதத்தை பூராவும் பிரத்யக்ஷமாகக்கண்டு ஸ்ரீராமருடைய அனுக்கிரகத்தாலும், எங்களது, அனுக்கிரகவிசேஷத்தாலும் ஸ்ரீராமாயணமென்ற மஹாகாவ்யத்தைச் செய்தார்

122. வால்மீகிரிஷி இருபத்துநான்காயிரம் சுலோகங்களைச் செய்தார்.

123. முதலில் காயத்ரீமந்திரத்தின் முதல் அக்ஷரத்தைக்கண்டு ஆரம்பித்தார். பிறகு ஒவ்வொரு ஆயிரம் சுலோகம் முடிந்தவுடன் காயத்ரீயின் ஒவ்வொரு அக்ஷரத்தையும் விநியோகம்செய்து ஸ்ரீராமாயணகதைச் செய்துமுடித்தார்.

acharya.org

त्रिवर्गमात्रशरणशरण्याः प्रथमं मुनिः । श्रीरामस्य महीप्राप्तिपर्यन्तां निर्ममे कथाम् ॥
ततश्चतुर्वर्गपरैः सेवनीयां प्रयत्नतः । स्वधामप्राप्तिपर्यन्तां राघवस्याकरोत्कथाम् ॥ १२५ ॥

तस्मादुक्तं नित्यपाठे मुमुक्षूणां च पाठके ।
सप्तापि काण्डाः पाठ्याः स्युः षट्काण्डाः फलकाम्यया ॥ १२६ ॥

तस्मान्नारद वाल्मीकिप्रोक्ता रामस्य सत्कथा । प्रशस्ता सर्वलोकेषु स च तत्करणान्मुनिः ॥
उपदेष्टुत्वाच्च तस्याः कथायास्ते यशः कृते । आद्ये सर्गे वर्णितस्त्वं श्लाघ्यस्त्वंतेन भावितः ॥
एवं त्वया कृताः प्रश्नाः सम्यगुत्तरिता मया । मुने रामायणं कृत्स्नं चर गायन्नितः परम् ॥

इति श्रीस्कान्दोपपुराणे पुराणवैभवखण्डे ब्रह्मनारदसंवादे
रामायणप्रणयनकथनं नाम चतुर्विंशोऽध्यायः ॥

अत्र द्वितीयोऽध्यायः ॥

124. தர்மம், அர்த்தம், காமம் என்ற மூன்று புருஷார்த்தங்களை இச்சிப்பவர்களுக்கு அவைகள் கைகூடுவதற்காக ஸ்ரீராமபட்டாபிஷேகபர்யந்தமான கதையைச் செய்தார்.

125. பிறகு தர்மார்த்தகாமமோக்ஷங்களென்ற நான்கு புருஷார்த்தங்களை இச்சிப்பவருக்கு ஆச்ரயிக்கத்தக்கதான ஸ்ரீராமர் வைகுண்டம் போய்ச் சேர்ந்தது வரையிலுமுள்ள கதையை செய்தார்.

126. ஆகையால் நித்யபாடத்திலும், மோக்ஷத்தை விரும்பியவர்களுடைய பாடத்திலும் ஏழு காண்டங்களும் படிக்கவேண்டியவைகளாகின்றன. பிரத்யேகமாக பலத்தை விரும்பினால் ஆறு காண்டம் படிக்கவேண்டுமெனச் சொல்லப்பட்டது.

127. ஆகையால் ஹே! நாரதா! வால்மீகியால் சொல்லப்பட்ட ஸ்ரீராமகதை எல்லா உலகங்களிலும் புகழடைந்தது. வால்மீகிமுனிவரும் ஸ்ரீராமகதையை சொன்னதால் எல்லா உலகங்களிலும் புகழடைந்தார்.

128. அந்த கதையை உபதேசித்ததால் எனது யசஸ்ஸிற்காக நீ முதல் ஸர்க்கத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றாய். அவரால் கௌரவிக்கப்பட்ட நீயும் புகழத் தகுந்தவனே.

129. இவ்விதமாய் உன்னால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நன்றாய் பதில் சொல்லப்பட்டது. ஆகையால் இதற்குமேல் ராமாயணம் பூராவும் கானம் பண்ணிக்கொண்டு நீ சஞ்சாரம் செய்யக்கடவாய்.

acharya.org

तृतीयोऽध्यायः ॥

नारद उवाच—

तात प्रीतोऽस्मि सञ्जातो रामायणकथाश्रवात् । इतःपरं तां गास्यामि वीणाहस्तश्चरन्मुहुः ॥
मन्ये पूज्यतमं लोके वाल्मीकिं मुनिपुङ्गवम् ॥ २ ॥
श्रीरामायणवेदस्य काम्यपाठः कथंविधः । लोकनाथ मम ब्रूहि शुश्रूषोः प्रणतस्य च ॥

ब्रह्मोवाच—

धन्योऽसि नारदमुने वक्ष्यामि शृणु ते हितम् । श्रीरामायणवेदस्य काम्यपाठविधिक्रमम् ।
चतुर्विधः काम्यपाठस्तत्तत्कालोचितः स्मृतः ॥ ५ ॥

सप्तसर्गीपारायणक्रमः ॥

श्रीमत्सुन्दरकाण्डस्य सप्तसर्गप्रपाठनम् । सर्वाभीष्टप्रदं प्रोक्तममराणामपीहितम् ॥ ६ ॥
शुभे दिवसनक्षत्रे सङ्कल्प्य विधिपूर्वकम् । यथाशक्ति सुवर्णेन रजतेनाथ ताम्रतः ॥ ७ ॥
रामस्य लक्ष्मणस्यापि वैदेह्याश्च हनूमतः । विधाय प्रतिमास्ताश्च प्रतिष्ठाप्य यथाविधि ॥
पूजयेद्धर्मपुञ्जे वा त्वरा चेद्रघुनन्दनम् ॥ ८ ॥

1. நாரதர் சொல்லுகிறார்:—தந்தையே! ஸ்ரீராமாயண சரிதத்தைக்கேட்டு மிகவும் சந்தோஷமடைந்தேன். இதற்குப் பிறகு வீணையை கையிலெடுத்துக் கொண்டு சஞ்சரித்துக்கொண்டு அடிக்கடி அதையே கானம் செய்வேன்.

2. உலகில்வால்மீகி முனிவரை மிகவும் பூஜ்யராக எண்ணுகிறேன்.

3. லோகநாதா! ஸ்ரீராமாயணமாகிற வேதத்தின் காம்யபாடம் எவ்விதம் என்றுகேட்க விரும்பி வணங்கி எனக்கு உபதேசித்தருள்வீராக.

4. பிரம்மதேவர் சொல்கிறார்:— நாரதமுனியே! நீர் தன்யராகிறீர். உமக்கு பிரியமான ஸ்ரீராமாயணத்தின் காம்யபாடக்கிரமத்தைச் சொல்கின்றேன். அதைக்கேளும்.

5. அந்தந்தக்காலத்திற்கு தகுந்தபடி காம்யபாடம் நான்கு விதமாகச்சொல்லப்படுகிறது.

ஏழேழு ஸர்க்கங்கள் பாராயணம் செய்யவேண்டிய கிரமம்.

6. தினமொன்றுக்கு ஸ்ரீமத்ஸுந்தரகாண்டத்தின் ஏழேழு ஸர்க்கங்களாகப் படிப்பதென்பது கோரியவற்றையெல்லாம் கொடுக்கவல்லது என்றும் தேவர்களுக்குங்கூட பிரியமானது என்றும் சொல்லப்படுகிறது.

7-8. நல்ல நக்ஷத்திரத்துடன்கூடின ஒரு சுபதினத்தில் சாஸ்திரப்பிரகாரம் ஸங்கல்பம் செய்து சக்தியையறுஸரித்து தங்கத்தாலாவது, வெள்ளியாலாவது, தாமிரத்தாலாவது ஸ்ரீராமர், லக்ஷ்மணர், ஸீதை, ஹநுமான் இவர்களுடைய ப்ரதிமைகளைச்செய்து சாஸ்த்ரப்பிரகாரம் பூஜை ப்ரதிஷ்டை முதலியவைகளை செய்யவேண்டும். த்வரையிருக்குமேயானால் தர்ப்பை ஸமூகத்திலாவது ஸ்ரீராமனை பூஜை செய்யவேண்டும்.

acharya.org

सहस्रनाममिर्विष्णोरभ्यर्चंश्च दिने दिने । पठेन्सुन्दरकाण्डस्य सप्तसर्गीं विधानतः ॥
यदा तु सप्तमः सर्गः काण्डस्यान्तिमसर्गकः । भविष्यति तदन्तं तु सप्त सर्गान् पठेद्व्रती ॥
अथ श्रीरामचन्द्रस्य सर्गं राज्याभिषेचने । पठित्वा पूजयित्वा च पठनं तु समापयेत् ॥
समाप्तिदिवसे कुर्याद्बहुब्राह्मणभोजनम् । यद्यद्विचिन्तितं चित्ते तत्सर्वं तु समश्नुते ॥

पुनर्वसुपारायणक्रमः ॥

अथ रामायणस्यास्य पाठं वक्ष्ये पुनर्वसौ । भुक्तिमुक्तिफलं श्रुते पाठस्तस्य पुनर्वसौ ॥
निर्माय मण्डपं दिव्यं नानालङ्कारशोभितम् । रत्नैर्वा मौक्तिकैर्वापि धातुभिर्वा विशेषितैः ॥
कृत्वा चित्रा रङ्गवल्लीस्तत्र वेदिं विधाय च । अधो व्रीहीन् प्रस्थमात्रांस्तुषहीनान् प्रसार्य च ॥
तावन्मात्रांश्चन्द्रशुभ्रांस्तदुपर्यपि तण्डुलान् । ततश्चणकखण्डांश्च निस्तुषान् प्रस्थमात्रकान् ॥
ततस्तिलान् प्रस्थमात्रांस्ततो मापांस्तथाविधान् । तदुपर्यपि गोधूमैर्मुद्गैर्वा हरितैर्भृतम् ॥
घटं संस्थाप्य तच्छृङ्गे नालिकेरफलोपरि । सुवर्णप्रतिमां सीतारामलक्ष्मणशोभिनीम् ॥
निधाय च प्रतिष्ठाप्य सर्वोपकरणैर्युतः । पूजां पुरुषसूक्तेन विधाय च यथाविधि ॥ १९
अनुज्ञाप्य द्विजानग्र्यान्नान्दीश्राद्धं विधाय च । हिरण्येनैव पूर्णेन तोषकेण द्विजन्मनाम् ॥
श्रीरामायणकोशेऽथ रामपूजां विधाय च । पुनर्वसुदिने शुद्धे काले सङ्गवनामके ॥ २१

9. பிரதிதினமும் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தால் பூஜை செய்து விதிமுறைப்படி ஸுந்தரகாண்டத்தின் ஏழு ஸர்க்கங்களை படிக்கவேண்டும்.

10. எப்பொழுது ஸுந்தரகாண்டத்தின் கடைசி ஸர்க்கம் ஏழாவது ஸர்க்கமாகவருகிறதோ அதுவரையில் நியமத்துடன் ஏழுஸர்க்கங்களைப்படிக்கவேண்டும்.

11. பிறகு ஸ்ரீராமபட்டாபிஷேகஸர்க்கத்தை (யுத்த. 131. ஸர்க்கம்) படித்து பூஜை செய்து பாராயணத்தை முடிக்கவேண்டும்.

12. பாராயணம் முடியும் தினத்தில் ப்ராம்மணாராதனம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் மனதில் நினைத்தவற்றையெல்லாம் பெறலாம்.

புனர்வஸுபாராயணக்ரமம்.

13. இதற்கப்பால் புனர்வஸுநக்ஷத்திரத்தில் ஸ்ரீராமாயணத்தின் பாராயணமுறையை சொல்லுகிறேன். புனர்வஸுவில் பாராயணம் செய்யும் முறையானது போகங்களையும், மோக்ஷத்தையும் கொடுக்கிறது.

14-23. நானாவித அலங்காரங்களால் அலங்கரிக்கப்பட்ட ஓர் அழகான மண்டபத்தை உண்டுபண்ணி, அவ்விடத்தில் ரத்தினங்களாலாவது, முத்துக்களாலாவது, நற்சங்குப் பொடிகளாலாவது நானாவர்ணங்களுடைய கோலங்களைச் செய்து, அவ்விடத்தில் ஒரு திட்டு (மேடை) உண்டுபண்ணி, அதில் ஒரு ப்ரஸ்தம் (ஒரு மரக்கால்) பதரில்லாத நெல்லைப்பரத்தி, அதன்மேல் சந்திரன்போன்ற நிறமுள்ள அரிசியை அதே அளவு பரத்தி, அதற்குமேல் ஒரு மரக்கால் பதரில்லாத கடலையையும் அதற்குமேல் ஒரு மரக்கால் எள்ளையும், அதற்குமேல் அதே அளவு உளுந்தையும் பரத்தி, அதற்குமேல் கோதுமையாலாவது, பாசிப்பயற்றுலாவது நிறைக்கப்பட்ட ஒரு குடத்தை வைத்து, அதன்மேல் ஒரு தேங்காயை வைத்து, அதன்மேல் ஸீதை, ஸ்ரீராமன், லக்ஷ்மணன் இவர்களால் விளங்கும் தங்கப்பிரதி

acharya.org

आञ्जनेयस्वरूपांश्च श्रोतॄन् भक्तान् रघूत्तमे वृत्वा यथासम्भवं च कृत्वा चित्तं रघूत्तमे ॥
नारदेनोपदिष्टार्थसर्गमारभ्य भक्तितः । उच्चैःस्वरं रागयुक्तं पठेत्सर्गांस्तु विंशतिम् ॥
स्वयमेव पठेच्छक्तो यदि सर्गानविक्लबम् । न चेद्विप्रमुखेनैव पठेत्तत्स्यात्तु मध्यमम् ॥
पठितं यच्च भुक्तेन यच्च व्यग्रेण वा पुनः । यच्चास्पष्टपदं भूयात्तत्सर्वं निष्फलं स्मृतम् ॥
मध्याह्ने तु समायाते पाठं कृत्वा समाप्य च । पञ्चोपचारैः संपूज्य गुडान्नादिनिवेदनैः ॥
ब्राह्मणान् भोजयेत्पश्चाद्दधिमध्वाज्यसंयुतम् ॥ २६ ॥
भोजनानन्तरं सर्वैः सह विश्रम्य किञ्चन । अधृत्वाऽपि च तांबूलमनाभाष्य च पुल्कसैः ॥
वक्तारं ब्राह्मणश्रेष्ठं सर्वशास्त्रार्थपारगम् । वाक्यार्थचतुरं दान्तमलुब्धं सत्यवादिनम् ॥
नानोपचारैः संपूज्य तोषयित्वा च तं धनैः । पूर्वं वृतोपवेश्यैनमुच्चैरासनमण्डले ॥ २९ ॥
उपविश्य ततोऽधस्ताद्रामे चित्तं निधाय च । पूर्वाह्णे पठितान् सर्गान् प्रार्थयेद्वाचयेति च ॥
तदुक्तार्थांश्च शृणुयान्मङ्गलाशासनान्तकम् ॥ ३० ॥

மையை வைத்து பிராணப்பிரதிஷ்டை செய்து, வேண்டிய உபகரணங்களுடன் கூடினவராக சாஸ்திரமுறைப்படி புருஷஸூக்தவிதானத்தால் பூஜைசெய்து, பிராம்மணர்களின் அனுமதி பெற்று, பிராம்மணர்களுக்கு திருப்தியுண்டாகும் விதமாக பூர்ண தக்ஷிணையுடன் நாந்தீசிராத்தத்தை செய்து, ஸ்ரீராமாயண புஸ்தகத்தில் ஸ்ரீராமனை பூஜை செய்து, புனர்வஸுநக்ஷத்திரத்தில் சுத்தமான ஸங்கவகாலத்தில் ஸ்ரீராமபக்தர்களான ஜனங்களே ஆஞ்சனேயஸ்வரூபிகளான ச்ரோதாக்களாக யதாலாபம் வரித்து, ஸ்ரீராமனிடத்தில் மனதைச் செலுத்தி, பக்தியுடன் நாரதர் உபதேசம் செய்த ஸர்க்கத்திலாரம்பித்து ராகத்துடன் உச்சஸ்வரத்தில் இருபது ஸர்க்கங்களை பாராயணம் செய்யவேண்டும்.

24. முடியுமானால் தானுகவே ஸ்பஷ்டமாக ஸர்க்கங்களை படிக்கவேண்டும் முடியாதவரையில் பிராம்மணமுகமாக படிக்கவேண்டும். அது மத்யாமமாகும்.

25. போஜனத்திற்குப் பிறகும், மனோவ்யாகுலத்துடனும், அஸ்பஷ்டமாகவும் பாராயணம் செய்தால் நிஷ்பலமாகிவிடுகிறது.

26. மத்தியானவேளையில் பாராயணத்தை முடித்துக்கொண்டு, குடான்னம் முதலிய நைவேத்தியங்களுடனும், பஞ்சோபசாரங்களுடனும் பூஜைசெய்து, பிறகு தயிர், தேன் முதலியவைகளுடன் பிராம்மணபோஜனம் செய்விக்கவேண்டும்.

27-30. போஜனத்திற்குப் பிறகு எல்லோருடனும் கொஞ்சம் இளைப்பாற்றி, தாம்பூலம் தரிக்காமலும், ம்லேச்சர்களுடன் பேசாமலுமிருந்து. ஸகல சாஸ்திரங்களின் கரைகண்டவரும், வாக்யார்த்தத்தில் சமர்த்தரும், புலன்களையடக்கினவரும், ஆசையொழிந்தவரும், உண்மையே பேசுபவருமான ஓர் பிராம்மணோத்தமரை பிரவசனம் செய்பவராக முதலில் வரித்து, அவரை உயர்ந்த மணையில் உட்காரச்செய்து, நானாவித உபசாரங்களுடன் பூஜைசெய்து, தனங்களால் திருப்தி செய்து, பிறகுதான் கீழ் உட்கார்ந்துகொண்டு, ஸ்ரீ ராமபிரானிடத்தில் மனதைச் செலுத்தி பிராதக்காலத்தில் படித்த சர்க்கங்களுக்கு அர்த்தப்பிரவசனம் செய்ய வேண்டுமென்று அவரிடம் வேண்டிக்கொண்டு, அவரால் சொல்லப்பட்ட மங்களாசாஸனத் தங்களான அர்த்தங்களை கோட்கவேண்டும்.

acharya.org

ततः सायं विधिं कृत्वा विष्णोर्नामसहस्रतः । रघुनाथं समभ्यर्च्य ततो भुक्त्वा स्वपेत्क्रमात् ॥
एवं दिने दिने कुर्वन्नुपचारैरनुक्रमात् । पठित्वा विंशतिं सर्गान्वाचयेच्च यथाक्रमम् ॥
प्रत्येकदिवसे कुर्यादन्यान्यैः संभवे सुमैः । सहस्रनामभिः पूजां श्रीरामस्य पदाब्जयोः ।
सीतापाणिग्रहो यत्र यत्र सुग्रीवसख्यकम् । अङ्गुलीयकदानं च रावणस्य वधस्तथा ।
तत्र तत्र दिने कुर्यात्तूर्यलास्यपुरःसरम् । अभ्यर्चां रघुनाथस्य वक्तारं च प्रपूजयेत् ॥
पठित्वैवं क्रमेणैव सप्तविंशतिवासरान् । पुनः पुनर्वसौ प्राप्ते रामस्य विदितात्मनः ॥
पट्टाभिषेकसर्गन्तु पठेन्मङ्गलपूर्वकम् ॥ ३६ ॥
पुनः पुनर्वसुप्राप्तिस्तारावृद्धिक्षयादिभिः । सप्तविंशे दिने चेत्स्यात्तदा तत्रैव वासरे ।
शिष्टान् सर्गान् वाचयेत्तु यावद्रामाभिषेचनम् ॥ ३७ ॥
अथ वृद्ध्या तु सा चेत्स्यादेकोनत्रिंशवासरे । अष्टाविंशदिनं पाठशून्यं कृत्वार्चयेद्विभुम् ।
एकोनत्रिंशदिवसे पठेत् पट्टाभिषेचनम् ॥ ३८ ॥
अष्टाविंशे क्रमेणैव सा चेत्तत्र तु वासरे । पठेत्पट्टाभिषेकाख्यसर्गमात्रं कृतोत्सवः ।
पूर्वेद्युःपाठसमये तं सर्गमवशेषयेत् ॥ ३९ ॥

31. பிறகு ஸாயங்காலக் கடன்களை முடித்துக்கொண்டு ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ர நாமத்தால் ஸ்ரீராமனை பூஜைசெய்து, பிறகு போஜனம் செய்து நித்திரை செய்ய வேண்டும்.

32. இவ்விதமாக ஒவ்வொரு நாளும் கிரமமாக உபசாரங்களுடன் பூஜை செய்து, இருபது ஸர்க்கங்கள் படித்து, பிரவசனம் செய்விக்கவேண்டும்.

33. விசேஷதினங்களில் முடித்தவரையில் வெவ்வேறு புஷ்பங்களால் ஸ்ரீராமரின் திருவடிகளில் ஸ்ரீ ஸஹஸ்ரநாமத்தால் பூஜை செய்யவேண்டும்.

34-35 எந்த தினங்களில், 'ஸீதாவிவாஹம்', 'ஸுக்ரீவஸக்யம்', 'அங்குளீய கதானம்', 'ராவணவதம்' இவைகள் நடக்கின்றனவோ அந்த தினங்களில் வாத்ய கோஷங்களுடன் ஸ்ரீராமரையும், பிரஸங்கம் செய்பவரையும் பூஜைசெய்யவேண்டும்.

36. இவ்விதம் இருபத்தேழு நாட்கள் படித்து மறு புனர்வஸு (இருபத்தெட்டாவது) தினத்தில் ஸ்ரீராமபரமாத்மாவின் பட்டாபிஷேக ஸர்க்கத்தை மங்களகோஷங்களுடன் படிக்கவேண்டும்.

37. இரண்டாவது புனர்வஸு நக்ஷத்திரம், நக்ஷத்திரங்களின் விருத்திக்ஷயங்களால் இருபத்தேழாவது தினத்திலே வருமேயானால் அன்றையதினமே மீதி ஸர்க்கங்களை ஸ்ரீராமபட்டாபிஷேகம் முடிய படிக்கவேண்டும்.

38. ஆனால் நக்ஷத்திரவிருத்தியால் அது இருபத்தொன்பதாவது தினத்தில் வரும்பக்ஷத்தில் இருபத்தெட்டாவது தினத்தில் படியாமல் ஸ்ரீராமபூஜையை மட்டும் செய்து இருபத்தொன்பதாவது தினத்தில் பட்டாபிஷேகஸர்க்கத்தைப் படிக்கவேண்டும்.

39. கிரமமாகவே அது இருபத்தெட்டாவது தினத்தில் வரும்பக்ஷத்தில் முதல்தினத்தில் பட்டாபிஷேகஸர்க்கத்தை பாக்கிவைத்துக்கொண்டு அதே தினத்தில் (இருபத்தெட்டாவது) உத்ஸவத்துடன் பட்டாபிஷேகஸர்க்கத்தைப் படிக்கவேண்டும்.

acharya.org

प्रातःकालेद्वि यत्रातिव्याप्तिर्दृष्टा पुनर्वसोः । आरभेत च तत्रैव तत्रैव च समापयेत ॥
दिनद्वये समा चेत्सा रौद्रविद्धां परित्यजेत् ॥ ४१ ॥
सप्तविंशावरान् विप्रान्दधिमध्वाज्यपायसैः । भोजयेत्परया भक्त्या ध्यात्वा राघवविग्रहान् ॥
वक्तारं पठितारं च यथाशक्ति प्रपूजयेत् ॥ ४२ ॥
एवमाराधिते रामे सर्वलोकशरण्यके । वन्ध्या नारी प्रसूयेत पुत्रं सर्वगुणान्वितम् ॥
आपन्नो मुच्यते कृच्छ्रादपमृत्युं व्यपोहति । अतिक्रान्तचिकित्साच्च रोगादुल्लाघतां व्रजेत् ॥
भक्तिं च रघुनाथस्य पादयोर्विन्दते दृढाम् । अन्ते ज्ञानेन मुक्तः स्यादन्तं स्याद्दुःखवर्जितः ॥
एष तूद्देशतः प्रोक्तो मया ते फलविस्तरम् । नाहं पटुः प्रवक्तुं स्यां संपूर्णफलविस्तरम् ॥
यं यं कामयते कामं स स हस्ते भविष्यति ॥ ४८ ॥
मुमुक्षोरपि कार्यं स्यादेतत्पारायणं भुवि ॥ ४९ ॥
एवं कर्तुमशक्तश्चेद्वित्तलोभं विना द्विजः । यथाशक्त्यर्चयित्वा तु रामं सर्वार्थसिद्धिदम् ॥

40. எந்த தினத்தில் புனர்வஸு நக்ஷத்திரத்தில் பிராதக்காலத்தில் அதிக நாழிகையிருக்கிறதோ, அந்த தினத்தில் பாராயணத்தைத் துவக்கவும், முடிக்கவும் வேண்டும்.

41. இரண்டு தினங்களிலும் துல்யமாக இருக்கும்பக்ஷத்தில் திருவாதிரை நக்ஷத்திரம் ஸம்பந்தமுள்ள தினத்தை வர்ஜிக்கவேண்டும்.

42. இருபத்தேழு பிரம்மணர்களை ஸ்ரீராமபரமாத்மாவென த்யானம்செய்து கொண்டு தயிர், தேன், நெய், பாயஸம் முதலியவற்றுடன் ஆராதிக்கவேண்டும்.

53. பிரவசனம் செய்பவரையும், படிப்பவரையும் சக்தியையநுஸரித்து பூஜை செய்யவேண்டும்.

44. இவ்விதம் எல்லா உலகங்களுக்கும் சரண்யரான ஸ்ரீராமர் சேவிக்கப் பட்டால் வந்தியை (மலடி) யான ஸ்த்ரீயும் எல்லா குணங்களுமமைந்த புதல்வனைப் பெறுவாள்.

45. ஆபத்தையடைந்தவன் ஆபத்திலிருந்தும் விடுபடுகிறன். அபமிருத்யுவை ஜயிக்கிறன். சிகித்ஸை செய்யமுடியாத ரோகத்திலிருந்தும்கூட விடப்பட்டு சுகமடைகிறன்.

46. ஸ்ரீராமனின் திருவடிகளிலில் திருடமான பக்தியை அடைகிறன். சாகும் வரையில் துக்கமொழிந்தவனாக இருந்து கடைசியில் ஞானத்தையடைந்து மோக்ஷம் பெறுகிறன்.

47. இந்த புனர்வஸு பாராயணத்தின் பலமானது என்னால் ஸங்க்ரஹமாக உனக்கு சொல்லப்பட்டது. பலத்தை பூராவும் சொல்ல நான் சக்தனல்ல.

48. எந்தெந்த அபீஷ்டத்தை மனதில் கொள்கிறனோ, அவையெல்லாம் பெறமுடியும்.

49. இவ்வுலகத்தில் மோக்ஷத்தை இச்சிப்பவன்கூட இந்த பாராயணத்தை செய்யவேண்டும்.

50-51. இவ்விதம் செய்யமுடியாதவன் தனலோபமில்லாமல் சக்தியையநுஸரித்து ஸகலாபீஷ்டங்களையும் கொடுக்கும் ஸ்ரீராமனை பூஜைசெய்து முன் சொல்லிய

acharya.org

पूर्वोक्तरीत्या सर्गाणां केवलं विंशतिं पठेत् । तस्यापि फलसामग्र्यं दद्याद्धि रघुनन्दनः ॥

नवरात्रपारायणविधिः ॥

अतः परं प्रवक्ष्यामि नवरात्रे तु पाठनम् ॥ ५२ ॥

चैत्रे वाऽऽश्वयुजे मासि प्रथमायां शुभे दिने । आरभ्य च नवम्यन्तं पठेत्प्रातरपि क्रमात् ॥
दशम्यां रावणवधं पठित्वा तत्र वै दिने । रामपट्टाभिषेकस्य पठन् सर्गं समापयेत् ॥
पूर्वोक्तविधिमातिष्ठेदत्रापि नियतो द्विजः । अशक्तः केवलं पाठमाचरेद्भक्तिसंयुतः ॥
सर्वसिद्धिस्ततो भूयादाधिव्याधी विनश्यतः । रघुनाथः प्रसन्नात्मा तस्य स्यादनुगः सदा ॥
पुत्रमित्रकलत्रेषु न हानिं द्रक्ष्यते क्वचित् ॥ ५६ ॥

ऐच्छिकपारायणविधिः ॥

अथ रामायणस्यास्य वक्ष्ये मुनिवरोत्तम । पारायणं त्वैच्छिकं यत्कालापेक्षा न तत्र हि ॥
महाव्याधिसमुद्भूतौ विश्लेषे बन्धुजाययोः । राष्ट्रक्षोभे च दुर्भिक्षे भूपालाच्च भयागमे ॥
यस्यां कस्यां च तारायां जन्मर्क्षे च विशेषतः । श्रीरामायणकाव्यस्य पारायणमथाचरेत् ॥

விதம் இருபது ஸர்க்கங்களை பாராயணம்மட்டும் செய்யவேண்டும். அதற்கும் ஸ்ரீ ராமன் பூர்ணபலத்தையளிப்பார்.

ஒன்பதுநாள் பாராயண விதி.

52. இதற்குமேல் நவராத்திரிகாலத்தில் பாராயணம் செய்யவேண்டிய விதியை சொல்லுகின்றேன்.

53. சித்திரைமாஸத்திலாவது. ஐப்பசிமாசத்திலாவது பிரதமையாகிற சுபதினத்தில் பிராதக்காலத்தில் ஆரம்பித்து க்ரமமாக நவமிவரையில் படிக்கவேண்டும்.

54. தசமிதினத்தில் ராவண வதத்தைப் படித்து அன்றே ஸ்ரீராம பட்டாபிஷேக ஸர்க்கத்தையும் படித்து முடிக்கவேண்டும்.

55. இதிலும் முன்சொன்ன நியமங்களையே ப்ரம்மசாரி சிரத்தையுடன் அனுஷ்டிக்கவேண்டும். சக்தியற்றவனுகில் பக்தியுடன் பாராயணம்மட்டும் செய்யவேண்டும்.

26. அதிலிருந்து எல்லா பலன்களுமுண்டாகும். மனக்கவலை, வ்யாதி இவைகள் நீங்கும். ஸ்ரீராமன் அருள்புரிந்து எப்பொழுதும் அவன்கூட ஸஞ்சரிப்பார். புத்ரர்கள், சினேகிதர்கள், பத்னி முதலியவர்கள் விஷயத்தில் ஒரு ஆபத்தையும் பார்க்கமாட்டான்.

ஐச்சிகபாராயண முறை.

57. ஹே! மாமுனிவரே! இதற்குமேல் ஸ்ரீராமாயணத்தின் ஐச்சிக (ஐச்சிக) பாராயணத்தின் முறையைச் சொல்லுகின்றேன். இதை குறித்த காலத்தில்தான் செய்யவேண்டுமென்ற நியமமில்லை.

58-59. பெரும் வ்யாதிகளுண்டானபொழுதும், பந்துக்களின் பிரிவேற்பட்ட பொழுதும், ராஜ்யத்தில் கலக்கமுண்டானபொழுதும், அரசனிடமிருந்து பயமுண்டானபொழுதும் எந்த நக்ஷத்திரமாகிலும், விசேஷித்து ஜன்மநக்ஷத்திரத்திலும், ஸ்ரீ ராமாயணத்தை பாராயணம் செய்யலாம்.

acharya.org

न सर्गसङ्ख्यानियमो न घटस्थापनादिकम्। न चापि दिनसङ्ख्याऽत्र पारायणसमापने॥
मन्द्रस्वरं पठेत्सर्गान् यथाशक्त्यैकमेव च। भुक्त्वा तु न पठेत्किञ्चिन्न च प्रवचनं चरेत्॥
पुष्पैर्लब्धैश्च तुलसीदलैर्विल्वदलैरपि। विष्णोर्नामसहस्रेण प्रयतः पूजयेत्प्रभुम् ॥ ६२ ॥
सर्वसङ्कल्पसिद्धिः स्यादेतावन्मात्रके कृते ॥ ६३ ॥
जन्मलग्नवशाद्वापि चन्द्रलग्नवशादपि। ग्रहाणां क्रूरता यस्मिन् काले भवति दुःखदा॥
विशेषेणार्कपुत्रस्य चन्द्रपुत्रस्य वा गुरोः। दशा चान्तर्दशा यत्र काले भवति दुःखदा॥
आत्मपीडा दारपुत्रपीडा चापि धनक्षयः। तदा रामायणं भक्त्या काम्यपाठक्रमात्पठेत्॥
प्रसङ्गादेष कथितः पाठो रामायणस्य तु ॥ ६७ ॥

पुनर्वसुत्रयापेक्षपारायणविधिः ॥

ऐच्छिकं तुर्यपाठं तु काम्यं वक्ष्यामि नारद ॥ ६८ ॥
पुनर्वसौ समारभ्य तृतीयेऽथ पुनर्वसौ। समापयेत्प्रतिदिनं पठेच्च दश सर्गकान्॥

10. இதில் இவ்வளவு ஸர்க்கங்கள் படிக்கவேண்டுமென்ற நியமமில்லை. கடஸ்தாபனம் முதலியன கிடையாது. பாராயணத்தை முடிக்க இவ்வளவு நாள் என்ற நியமமும் இல்லை.

61. தனது ஸௌகரியத்தையனுஸரித்து மந்த்ர (மெதுவாக) ஸ்வரத்தில் படிக்கலாம். ஆனால் போஜனத்திற்கு பிறகு படிக்கவாவது, பிரவசனம்செய்யவாவது கூடாது.

62. கிடைத்த புஷ்பங்களாலாவது, துளஸீதளங்களாலாவது, பில்வதளங்களாலாவது ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமத்தைக்கொண்டு பிரபுவை சுத்தமாகவிருந்து பூஜை செய்யவேண்டும்.

63. இவ்வளவுமட்டும் செய்தால் ஸர்வாபீஷ்டங்களும் சித்திக்கின்றன.

64-66. ஜன்மலக்கினத்தையபேக்ஷித்தாவது, சந்திரலக்கினத்தையபேக்ஷித்தாவது எந்தக் காலங்களில் நவக்கிரகங்கள் கேடுவினைவிக்கின்றனவோ, அந்தக் காலங்களிலும், விசேஷித்து செவ்வாயுடையவும், புதனுடையவும், வியாழனுடையவும் தசைகளாவது, அந்தர்தசைகளாவது கேடுவினைவிக்கிறகாலங்களிலும், தனக்காவது, புத்திரர்களுக்காவது, பத்னிக்காவது பீடைகள் உண்டாகும் காலங்களிலும் ஸ்ரீ ராமாயணத்தை காம்யபாடக்கிரமத்தில் சொன்ன முறைப்படி படிக்கவேண்டும்.

67. இவ்விதம் ஸ்ரீ ராமாயணத்தின் ஐச்சிகபாராயணமுறையானது சொல்லப்பட்டது.

புனர்வஸூத்ரய பாராயண முறை.

68. ஹே! நாரதமுனிவரே! காம்யபாடங்களில் நான்காவதான ஐச்சிக பாடத்தை சொல்லுகிறேன்.

69. ஒரு புனர்வஸூநக்ஷத்திரத்தில் பாராயணத்தையாரம்பித்து மூன்றாவது புனர்வஸூநக்ஷத்திரத்தில் முடிக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் பத்து ஸர்க்கங்கள் படிக்கவேண்டும்.

acharya.org

गीताया एकमध्यायमपि भक्त्याऽऽदृतः पठेत् ॥ ७० ॥
गृहे देवालये वाऽपि रामचन्द्रस्य सन्निधौ । पूजयित्वा चम्पकैर्वा पद्मैर्वा तुलसीदलैः ॥
विष्णोर्नामसहस्रेण पायसापूपमिश्रितम् । निवेदयित्वा दिव्यान्नमारभेत ततः परम् ॥
अनुज्ञाप्य द्विजान् स्वैः सङ्कल्प्य च यथाविधि ।
पुण्याहवाचनं कृत्वा कृत्वा शुद्धं च मण्डपम् ॥ ७३ ॥
श्रोतारमेकं वृत्वा च पठेद्वै दश सर्गकान् । सायमर्थप्रवचनं नावश्यकमिहेरितम् ॥ ७४ ॥
विष्णोर्नामसहस्रेण रामनाम्नां शतेन वा । अभ्यर्च्य रात्रौ श्रीरामं तत्पक्षीरं निवेदयेत् ॥
पाठस्य बहुकालेन साध्यत्वाद्वैषयोगतः । आशौचेनाथवा रोगैः राजोपप्लवनादिभिः ॥
यजमानस्य विघ्नश्चेत्स्वस्थानेऽन्यं प्रकल्पयेत् ॥ ७६ ॥
यजमानः पठेद्भक्त्या पाठमेनं दिने दिने । अशक्तश्चेत् शृणुयात् पाठकं परिकल्प्य च ॥
चतुःपञ्चाशताऽहोभिर्दशसर्गक्रमेण तु । एवं पारायणं कृत्वा तृतीये तु पुनर्वसौ ॥
पूर्वोक्तेन क्रमेणैव श्रीमतो राघवप्रभोः । महोत्सवं प्रकुर्वीत सर्गं राज्याभिषेचनम् ॥ ७९
पठित्वा पूजयित्वा च पाठं तत्र समापये ॥ ८० ॥

70. கீதையின் ஒரு அத்யாயத்தையும் பக்தியுடன் படிக்கவேண்டும்

71-74. தனது கிரகத்திலாவது, கோவிலிலாவது ஸ்ரீராமஸந்நிதியில் ஸ்வர்ணங்களை தக்ஷிணையாக கொடுத்து பிராம்மணர்களின் அனுமதி பெற்றுக்கொண்டு விதிமுறைப்படி ஸங்கல்பம் செய்து, புண்யாஹவாசனம் செய்து மண்டபத்தை சுத்தமாகச் செய்து, சம்பக புஷ்பங்களாலாவது, தாமரை புஷ்பங்களாலாவது, துளஸீதளங்களாலாவது விஷ்ணுஸஹஸ்ரநாமத்தைக்கொண்டு பூஜைசெய்து பாயஸம், அப்பம் இவைகளுடன்கூடின திவ்யான்னத்தை நிவேதனம் செய்து பிறகு பாராயணத்தையாரம்பிக்கவேண்டும். அதில் ஒருவரை ச்ரோதாவாக வரித்து பத்து ஸர்க்கங்களை படிக்கவேண்டும். இதில் ஸாயங்காலத்தில் அர்த்தம் சொல்லவேண்டுமென்ற நியமமில்லை.

75. ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமத்தாலாவது, ஸ்ரீராமசதநாமத்தாலாவது இரவில் ஸ்ரீராமனை பூஜைசெய்து, காய்ச்சின பாலை நிவேதனம் செய்யவேண்டும்.

76. இந்த பாராயணம் பல நாட்களால் செய்துமுடிக்கவேண்டியிருப்பதால் தைவேச்சையால் (தற்செயலாக) ஆசௌசத்தாலாவது, ரோகங்களாலாவது, அல்லது அரசனது பீடையாலாவது யஜமானனுக்கு விக்னமுண்டாகுமேயாகில் தனது ஸ்தானத்தில் வேறொருவனை நியமிக்கவேண்டும்.

77. யஜமானன் பக்தியுடன் ஒவ்வொரு நாளும் பாராயணம் செய்யவேண்டும். முடியாதாகில் ஒருவனை பாராயணம் செய்யச்சொல்லி தான் கேட்கவேண்டும்.

78-80. இவ்விதம் தினம் ஒன்றுக்கு பத்து ஸர்க்கக் கிரமமாக ஐம்பத்து நான்கு நாட்களில் பாராயணத்தை முடித்துக்கொண்டு, மூன்றாவது புனர்வஸு நக்ஷத்ரதினத்தில் முன்சொன்னபிரகாரம் ஸ்ரீராமபிரானுக்கு மஹோத்ஸவத்தை செய்யவேண்டும். அன்றையதினமே ஸ்ரீராமபட்டாபிஷேகஸர்க்கத்தை படித்து பாராயணத்தை முடிக்கவேண்டும்.

acharya.org

काम्यपाठस्त्वयं वत्स करणीयः सुखेन च। सुलभः स्याद्दरिद्राणामपि सर्वार्थसिद्धिदः॥
आवश्यकस्त्रिवर्गस्य मर्त्यानां कामनावताम् ॥ ८१ ॥
पुनर्वसुमहापाठ उत्तमोत्तम ईरितः। अन्ये पाठश्चोत्तमाः स्युर्यस्माच्चैवर्गिका हि ते ॥
इत्युक्तो गुणविस्तारः सङ्क्षान्नारदाय ते। श्रीरामायणवेदस्य काम्यपाठक्रमस्य तु ॥
विस्ताराद्वक्तुमीशः स्यात्स एव रघुनन्दनः ॥ ८३ ॥
गच्छ कामं चरन् पुत्र गायन्रामायणं सदा ॥ ८४ ॥

दाल्भ्य उवाच—

श्रुत्वा रामायणस्येत्थं माहात्म्यं नारदो मुनिः।
नत्वा चतुर्मुखं सद्यो वाल्मीकिमभिगम्य च ॥ ८५ ॥
तं नमस्कृत्य बहुशः प्रशस्य च पुनः पुनः। गीतं कुशलवाभ्यां च श्रुत्वा रामायणं ततः॥
रामं नन्तुमथागच्छदयोध्यां मुनिभिः सह ॥ ८६ ॥
अत्रान्तरे मृतं पुत्रमादायागात्पान्तिकम्। विप्रः कोऽपि शपन्रामं तदैनं नारदोऽब्रवीत् ॥
प्रभो राघव धर्मज्ञ सर्वभूतहिते रत। किञ्चिद्वेत्सि इव भासीह द्विजात्मजमृतिं प्रति ॥

81. ஹே! நாரத! இந்த காம்யபாராயணமானது பலத்தை இச்சித்தவர்களுக்கு ஸர்வாபீஷ்டங்களை கொடுக்கவல்லதும், தர்மார்த்தகாமங்களை அடைவதற்கு அவச்யம் செய்யவேண்டியதும், ஏழைகளாலும் எளிதில் செய்துமுடிக்கக்கூடியதும், எல்லோராலும் சிரமமில்லாமல் எளிதாக முடிக்கத்தகுந்ததாகவுமாகிறது.

82. புனர்வஸு பாராயணமாகின்ற உத்தமோத்தமம் (எல்லாவற்றிலும் சிறந்தது) என்று சொல்லப்படுகிறது. மற்ற பாடங்களும் தர்மார்த்தகாமங்களை கொடுப்பதால் உத்தமங்கள் என்றே சொல்லப்படுகின்றன.

83. ஹே! நாரத! ஸ்ரீராமாயணமாகின்ற வேதத்தின் காம்யபாடத்தின் பல விசேஷம் உலகுக்கு ஸங்கிரகமாக சொல்லப்பட்டது. அதன் பலத்தை விஸ்தாரமாகச் சொல்ல ஸ்ரீராமன் ஒருவரே சக்தர்.

84. ஹே! புத்திரா! நீ எப்பொழுதும் ஸ்ரீராமாயணத்தை கானம்செய்து உனது இஷ்டம்போல சஞ்சரிப்பாயாக.

85-86. தால்ப்யர் சொல்லுகிறார்:—நாரதமுனிவர் இவ்விதமாக ஸ்ரீராமாயணத்தின் மாஹாத்ம்யத்தை கேட்டுவிட்டு, பிரம்மதேவரை வணங்கி நமஸ்கரித்து வால்மிகிமுனிவரிடம்போய் அவரை நமஸ்கரித்து, அவரை அடிக்கடி புகழ்ந்து பேசி, குசலவர்களால் கானம் பண்ணப்பட்ட ஸ்ரீராமாயணத்தை சிரவணம்செய்து, பிறகு முனிவர்களுடன்கூட ஸ்ரீராமரை கண்டு தரிசிக்க அயோத்திக்கு போய்ச் சேர்ந்தார்.

87. இதற்கிடையில் ஓர் பிராம்மணன் இறந்துபோன தனது புத்திரனை எடுத்துக்கொண்டு, ஸ்ரீராமனை சபித்துக்கொண்டு அரசர் ஸந்நிதிக்கு வந்தார்.

88. தர்மங்களெல்லாமறிந்த ஹே! பிரபுவே! ஸமஸ்த பிராணிகளுக்கும் நன்மைசெய்யும் ஹே! ராகவ! இந்த பிராம்மணப்பையனின் மரணத்தைக்குறித்து ஒன்றுமறியாதவர்போல் தோன்றுகிறீரே.

acharya.org

शूद्रः करोति च तपो दण्डकायां वने क्वचित् । तं हत्वा जीवय सुतं ब्राह्मणस्य कृपावशात् ॥
इति श्रुत्वा रघुवरः पुष्पकेण सहायुधः । शम्बूकाख्यं दण्डकायां शूद्रं हत्वा तपस्विनम् ॥
जीवयित्वा द्विजसुतमगस्त्यमभिवाद्य च । गतः पुनरयोध्यां च वाजिमेधेन चेजिवान् ॥
निर्माय पर्णशालां तु नारदो मुनिभिः सह । गङ्गाद्वारे महापुण्ये रामपूजनतत्परः ॥
पुनर्वसौ समारभ्य श्रीरामायणमादतः । सर्गाणां विंशतिं नित्यं पठित्वा विधिपूर्वकम् ॥
वक्तारं कल्पयित्वाऽत्र वाल्मीकिं मुनिपुङ्गवम् । व्रतं समापयामास पुनः प्राप्ते पुनर्वसौ ॥
अथ दृश्यत्वमापन्नः साक्षात्तत्रोटजाङ्गणे । स्निग्धेन्दीवरपत्राभः पद्मरक्तान्तलोचनः ॥
युक्तः किरीटकटकेयूराङ्गुलिभूषणैः । वनमालायुतोरस्कः पूर्णचन्द्रनिभाननः ॥ ९६ ॥
मन्दस्मितप्रभारूढबिंबोष्ठविलसन्मुखः ॥ ९७ ॥
वामहस्तेन कोदण्डं दक्षिणेन च सायकम् । बिभ्रच्च तूणीं च संपूर्णौ निशितैः सायकोत्तमैः ॥
पार्श्वस्थया च सर्वाङ्गभूषणोज्ज्वलया पुनः । सपद्मकरया देव्या सेव्यमानश्च सीतया ॥
अग्रे धृताञ्जलिं प्रह्वं हनुमन्तं कृपाळ्वया । दृष्ट्यानुगृह्णंस्तमपि प्रसन्नवदनेक्षणम् ॥
सेव्यमानो लक्ष्मणेन पार्श्वे प्राञ्जलिना मुदा ॥ १०१ ॥

89. தண்டகாவனத்தில் ஒரு சூத்திரன் தவம்புரிகின்றான். தயைசெய்து அவனைக்கொன்று இந்த பிரம்மணனின் புத்திரனை பிழைக்கச்செய்யக்கடவீராக.

90-91 இவ்விதம் ஸ்ரீ நாரதரிடமிருந்து கேட்டு ஸ்ரீராமன் ஆயுதபாணியாக புஷ்பகவிமானத்திலேறிக்கொண்டு தண்டகாவனத்தில் தவம் புரியும் சம்பூகன் என்ற சூத்திரனைக்கொன்று, பிறகு அகஸ்த்ய முனிவரைக் கண்டு தரிசித்து, அயோத்திக்கு திரும்பிவந்து, அச்வமேதயாகம் செய்தார்.

92-94 பிறகு நாரதமுனிவர் முனிவர்களோடுகூட மஹா புண்யக்ஷேத்திரமாகிய ஹரித்வாரத்தில் ஓர் பர்ணசாலையை நிர்மித்து அதில் ஸ்ரீராமனை பூஜித்துக் கொண்டு, பக்தியுடன் புனர்வஸு தினத்தில் பாராயணத்தை முடித்தார்.

95-101. அப்பொழுது அந்த பர்ணசாலையின் திண்ணையில் அழகான நீலத் தாமரைபோன்ற மேனியுடையவரும், தாமரைமலர்போன்ற சிவந்த கடைக்கண் களை யுடையவரும், கிரீடம், கங்கணம், தோள்வளை, மோதிரம் முதலிய ஆபரணங் களோடுகூடினவரும், வனமாலையை தரித்தவரும், முழு மதிபோன்ற முகமண்டல முடையவரும், மந்தஹாஸத்தால் விளங்கும் கோவைப்பழம்போன்ற உதடுகளால் விளங்குகிற முகமுடையவரும், இடதுகையால் கோதண்டத்தையும், வலதுகையால் பாணத்தையும், கூரான சிறந்த பாணங்கள் நிறைந்த இரண்டு அம்புறத்தூணிகளை யும் தரித்தவரும், ஸமஸ்தாபரணங்களாலும் விளங்குபவரும், பக்கலிலிருப்பவரும், தாமரைப்பூவைக் கையிலேந்தினவருமான ஸீதாதேவியால் ஸேவிக்கப்படுகிற வரும், எதிரே கைகூப்பி வணங்கினவரும், மலர்ந்த முகத்தையும், கண்களையு முடையவரான ஆஞ்சனேயரை கிருபாகடாக்ஷத்தால் அனுக்ரஹம் செய்பவரும், பக்கலில் சந்தோஷத்துடன் லக்ஷ்மணரால் கைகட்டி சேவிக்கப்பட்டவருமான ஸ்ரீராமன் பிரத்யக்ஷமாகத் தோன்றினார்.

acharya.org

नारदस्तु तमालोक्य प्रणिपत्य सहस्रशः । स्तुत्वा बहुविधैः स्तोत्रैर्दिक्लौकिकैरपि ॥
पाहि पाहीति च ततोऽब्रवीत् प्रेमाश्रुलोचनः ॥ १०२ ॥
श्रीराम उवाच—
वत्स नारद तुष्टोऽस्मि त्वद्रामायणपाठतः । पारायणान्पुनर्वेत्थं विशेषानुग्रहो मम ॥
यथाऽनेनास्मि तुष्टोऽद्य तथा न तपसा तव । रामायणं यत्र तत्र भक्तितोऽभक्तितोऽपि वा ॥
पठ्यते तत्र सान्निध्यमहं कुर्वे यथेह तु । यो वाञ्छति प्रसादं मे स तु रामायणं पठेत् ॥
श्रीमद्वाल्मीकिवचसां माधुर्यं मां प्रकर्षति । अहं चाकर्णयिष्यामि त्वया च त्वादृशैः सह ॥
स च कालो भवेच्छीघ्रं त्वमप्यागच्छ यत्नतः । ब्रियतामद्य च वरो यथेष्टं प्रददामि ते ॥
नारद उवाच—
किमिहाद्य वरैः कार्यं निस्सङ्गस्य ममेतरैः । अयं वरो मे परमो यदेवं त्वां विलोकये ॥
दृष्टा मया शङ्खचक्रगदापीतांबरान्विता । कौस्तुभाभरणग्रीवा लक्ष्मीयुक्तो रसान्विता ॥
तव सा क्षीरपाथोधौ मूर्तिर्नारायणाह्वया ॥ १०९ ॥

102. நாரதமுனிவரும் அவரைப்பார்த்து அனேகந்தடவை தண்டனிட்டு பலவிதங்களான வைதிகஸ்தோத்திரங்களாலும், லௌகிகஸ்தோத்திரங்களாலும் ஸ்துதிசெய்து, ஆனந்தக்கண்ணீர் பெருகவிட்டுக்கொண்டு "என்னைக் காத்தருள வேண்டும், காத்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

103. ஸ்ரீராமர் சொல்லுகிறார்:— தேவ! நாரதமுனிவரே! உமது ஸ்ரீராமாயண பாராயணத்தால் மிகவும் சந்தோஷமடைந்தேன். புனர்ஸ்பாராயணத்தால் நான் உம்மை விசேஷமாக அனுக்கிரகிக்கின்றேன்.

104. இந்த பாராயணத்தால் நான் ப்ரீதியடைந்ததுபோல் நான் உமது தவத்தால் ப்ரீதியடையவில்லை.

105. பக்தியுடனுவது, பக்தியில்லாமலாவது எந்தெந்த இடங்களில் ஸ்ரீராமாயணம் படிக்கப்படுகிறதோ அவ்விடமெல்லாம் நான் இவ்விடத்தில்போல பிரத்யக்ஷமாக இருப்பேன்.

106. எவன் எனது பிரஸாதத்தை விரும்புகிறானே, அவன் ஸ்ரீராமாயணத்தை படிக்கவேண்டும். ஸ்ரீ வால்மீகிமுனிவரின் சொற்களின் இனிமை என்னைப் பிடித்திழுக்கிறது.

107. நான் உம்மோடுகூடவும், உம்மைப்போன்றவர்களுடனும் ஸ்ரீராமாயண பாராயணத்தை கேட்பேன். அந்த காலமும் சீக்கிரத்திலேயே உண்டாகும். ஆகையால் நீரும் எவ்விதத்திலும் வரவேண்டும். இப்பொழுது உமக்கு வேண்டியதான வரத்தைக் கேட்டுக்கொள்ளும், நான் தருகின்றேன்.

108. நாரதர் சொல்லுகிறார்:— ஒன்றிலும் பற்றில்லாத எனக்கு மற்ற வரங்களால் என்ன பிரயோஜனம். நான் இப்பொழுதுதங்களை நேரில் இவ்விதம் தரிசிக்கின்றேன் என்பதே எனக்கு எல்லாவற்றிலும் மேலான வரம்.

109. சங்கு, சக்ரம், கதை மஞ்சளாடை இவைகளை தரித்ததும், கழுத்தில் கௌஸ்துபமணியுடையதும், மார்பில் லக்ஷ்மீதேவியோடுகூடினதும், நாராயணன் என்ற பெயரையுடையதுமான தேவரீரது திருமேனி பாற்கடலில் என்னால் பார்க்கப்பட்டிருக்கிறது.

acharya.org

वैकुण्ठस्थानगा मूर्तिर्भुजाष्टकविभूषिता । सुनन्दनन्दप्रमुखैः सेविता नित्यसूरिभिः ॥
दृष्टा तपःप्रभावेन कृपया दर्शिता त्वया ॥ ११० ॥
नरनारायणाभिख्ये लोकरक्षार्थमाहते । तपस्विवेषे ते मूर्ती दृष्टे बदरिकाश्रमे ॥ १११ ॥
सर्वावतारबीजात्मा वैराजी साऽपि ते तनुः । नानाविश्वमयी दृष्टा श्वेतद्वीपे मया पुरा ॥
न तथा हर्षमगमं यथाऽद्य तव दर्शनात् ॥ ११३ ॥
बाणकोदण्डपाणेश्च जानक्या सेवितस्य च दिव्यतेजोनिधेस्तेऽद्य दर्शनान्निर्वृणोम्यहम् ॥
मनो मे मोदतेऽत्यर्थं मन्ये पूर्वं न चेदृशम् ॥ ११५ ॥
तदहं प्रार्थये त्वाऽद्य वरं सर्ववरोत्तमम् । यदा यदाऽहं वाञ्छामि द्रक्ष्यामि त्वां तदा तदा ॥
एवं बाणधनुष्पाणिं सीतालक्ष्मणसेवितम् ॥ ११६ ॥
अचञ्चला च त्वद्भक्तिः स्यान्मे कारुण्यतस्तव ॥ ११७ ॥

110. எட்டு கைகளுடன் கூடினதும், ஸுநந்தர், நந்தர் முதலிய நித்ய முக்தர்களால் எப்பொழுதும் சேவிக்கப்பட்டதும், தங்களால் கிருபையுண்டு காண்பிக்கப்பட்டதுமான வைகுண்டத்திலிருக்கும் தங்களது திருமேனி என்னுல் தவ மஹிமையால் தரிசிக்கப்பட்டது.

111. உலகத்தை காத்தருள்வதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டவையும், தவஸிகள் வேஷம்பூண்டவையும், நரன் நாராயணன் என்ற பெயரையுடையவைகளுமான அவ்விரண்டு மூர்த்திகளும் என்னுல் பதரிகாச்ரமத்தில் தரிசிக்கப்பட்டன.

112. முன்னொரு காலத்தில் எல்லா அவதாரங்களுக்கும் மூலபூதமானதும், நானவித சராசர பிரபஞ்சஸ்வரூபமுமான விராட்ரூபமானது என்னுல் ச்வேதத் வீபில் தரிசிக்கப்பட்டது.

113. நான் இப்பொழுது தங்களை தரிசித்து மகிழ்வதுபோல் இதற்குமுந்தி மகிழவில்லை.

114. பாணத்தையும், கோதண்டத்தையும் கையிலேந்தியவரும், ஸீதாதேவியுடன்கூடியவரும், திவ்ய தேஜோவானுமான தங்களை தரிசித்ததால் நான் ஆனந்தமடைகின்றேன்.

115. எனது மனம் மிகவும் மிகவும் சந்தோஷமடைகிறது. இதற்குமுந்தி இவ்வித ஆனந்தம் அடையவில்லை என்று எண்ணுகிறேன்.

116. நான் எப்பொழுதெல்லாம் தங்களை தரிசிக்கவேண்டுமென்று விரும்புகிறேனோ, அப்பொழுதெல்லாம் தங்களை பாணத்தையும், கோதண்டத்தையும் கையிலேந்தியவராகவும், ஸீதாதேவியுடனும், லக்ஷ்மணனுடனும்கூடியவராகவும் தரிசிக்கவேண்டுமென்ற இந்த எல்லாவரங்களிலும் சிறந்ததான வரத்தை நான் இப்பொழுது பிரார்த்திக்கின்றேன்.

117. தங்களது அருளால் தங்களிடத்தில் வைத்த எனது பக்தி அசஞ்சலமாக இருக்கவேண்டும்.

acharya.org

किञ्चैवं काम्यपाठेन श्रीरामायणमादरात् । पुनर्वसौ समारभ्य यः पठेद्विधिपूर्वकम् ॥
भक्तितो दंभतो वाऽपि तस्य त्वं प्रीतमानसः । धर्मार्थकाममोक्षाख्यं चतुर्वर्गं दिश प्रभो ॥
पुत्रान् पौत्रान् संपदश्च ज्ञानमन्ते च सोऽश्नुताम् ॥ १२० ॥
श्रीराम उवाच—
सत्यमुक्तं त्वया ब्रह्मन् मद्भक्ता मामकीं तनुम् । क्रोदण्डपाणिं संद्रष्टुं समीहन्ते न चान्यथा ॥
ईदृशी मे तनुः पूर्वं स्वतेजःपुञ्जसंवृता । कोटिसूर्यसमाभासा रक्तचन्दनसेविता ॥ १२२ ॥
सीतया सेविता पार्श्वे बालव्यजनहस्तया । मायां दर्शनमात्रेण निहन्त्री भेदधीप्रदाम् ॥
चिरमाशासमानाय मत्प्रसादाभिकाङ्क्षया । सनत्कुमाराद्विज्ञाय ममाविर्भावमञ्जसा ॥
सारथ्यान्मन्त्रकृत्याच्च इक्ष्वाकुकुलसेविने । दर्शिताऽभूत्सुमन्त्राय प्रस्थास्येऽहं यदा वनम् ॥
शबर्यै शरभङ्गाय वालिने च सुमूर्षवे । दर्शिताऽभूदिदानीं त्वं दृष्टवान्मत्कथाबलात् ॥
नित्य रामायणं ये वा पठेयुः कामतोऽपि वा । मुक्तये वाऽपि ते सर्व एवंरूपं तु मां मुने ॥
अन्ते दृष्ट्वा प्राप्नुयुर्मां नात्र कार्या विचारणा ॥ १२७ ॥

118-120. இத்துடன், யாதொருவன் காம்யாபாடமுறைப்படி ஸ்ரீராமாயணத்தை விதிமுறைப்படி புனர்வஸுதினத்தில் தொடங்கி பக்தியுடனுவது, டம்பத்துடனுவது படிப்பானேயாகில் தாங்கள் பிரீதியடைந்து அவனுக்கு தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷமென்ற நான்கு புருஷார்த்தங்களையும், புத்திரபௌத்திரர்களையும், ஐசுவரியத்தையும் தந்தருளவேண்டும். கடைசியில் அவன் ஆத்மஞானத்தையுமடையவேண்டும்.

121. ஸ்ரீராமர் சொல்லுகிறார்:— ஹே! நாரதமுனிவரே! தாங்கள் சொன்னது உண்மையே. எனது பக்தர்கள் எனது திருமேனியை கோதண்டபாணியாகவே தரிசிக்க இச்சிக்கின்றார்கள். இதற்கையமில்லை.

122-125. இப்படிப்பட்டதும், தனது காந்திஸமூஹத்தால் வ்யாபிக்கப்பட்டதும், வெண்சாமரத்தை கையிலேந்திய ஸீதாதேவியால் பக்கலில் நின்று ஸேவிக்கப்பட்டதும், தரிசனம்செய்த மாத்திரத்திலேயே த்வந்த்வபுத்தியை உண்டுபண்ணுகிறதான மாயையை நாசம்செய்யக்கூடியதுமான இந்த எனது மூர்த்தியானது ஸனத்குமாரரிடமிருந்து எனது திருவவதாரத்தைக் கேட்டறிந்து நெடுநாளாக எனது அனுக்கிரகத்தைப் பெற ஆசைகொண்டிருந்தவரும், மந்திராலோசனையாலும், தேரோட்டுவதாலும் இக்ஷ்வாகுவம்சத்திய அரசர்களை ஸேவித்துவந்தவருமான சுமந்திரருக்கு நான் காட்டிற்கு புறப்பட்டு வரும்பொழுது காண்பித்தருளினேன்.

126. அவ்விதமே சபரிக்கும், சரபங்கமஹரிஷிக்கும், மரணமடையும் தருவாயிலிருக்கும் வாலிக்கும் காண்பிக்கப்பட்டது இப்பொழுது நீர் எனது சரித்திரத்தை பாராயணம் செய்த வைபவத்தால் தரிசித்தீர்:

127. எவர்கள் நித்யமாக ஸ்ரீராமாயணத்தை காமனையுடனுவது, நிஷ்காமமாகவாவது படிக்கிறார்களோ, அவர்கள் கடைசியில் இவ்விதமான உருவமுடைய என்னை தரிசித்து, என்னிடமே வந்து சேருகிறார்கள். ஹே! முனிவரே! இதில் ஸந்தேகமில்லை.

acharya.org

ये वा पुनर्वसुदिने समारभ्य यथाविधि । श्रीमद्रामायणं भक्त्या पठेयुः पुत्रकाम्यया ॥
धनाप्तये वा विपदां तारणायाथ वा मुने । अन्ते तेषां सुप्रसन्नः पाठस्यास्य यथेप्सितम् ॥
सर्वान् कामान्ददाम्येव न ते शोचन्ति भूतले ॥ १२९ ॥
प्रारब्धमपि दुःखं स्यात्तेषां निर्वीर्यमञ्जसा ॥ १३० ॥
नाहं स्वाध्यायतो वाऽपि बाह्याभ्यन्तरपूजनात् ।
तपसा त्यागतो वाऽपि प्रसीदामि तथा मुने ॥
यथा रामायणकथापठनश्रवणादिभिः ॥ १३१ ॥
दर्शयिष्यामि ते मूर्तिमेवं रूपां मनोरमाम् । यदा यदा वाञ्छसि त्वं यत्र क्वापि मुनीश्वर ॥
मत्प्रसादाद्दक्षशापो न त्वामभ्यभवन्मुने ॥ १३३ ॥
अत्र स्थितं मासमात्रं क्षणमात्रमतः परम् । नात्र स्थेयमितस्तस्माद्गच्छ लोकान्यथासुखम् ॥
त्वं च नित्यं चरन् गायेः श्रीरामायणमादृतः । प्रकाशय कथामेतां लोकानां सुखसिद्धये ॥
वाल्मीके त्वं च शिष्याभ्यां गायद्भ्यां मत्कथां सदा ।
आनन्दमाप्नुहि परं नान्यलभ्यां कथञ्चन ॥ १३६ ॥

128-129. ஹே! நாரதமுனியே! எவர்கள் புத்திரேச்சையாலாவது, தனேச்சையாலாவது, ஆபத்துகளே தாண்ட இச்சையாலாவது புனர்வஸு தினத்தில் தொடங்கி, விதிமுறைப்படி ஸ்ரீராமாயணத்தை பக்தியுடன் படிக்கின்றார்களோ, அவர்களுக்கு பாராயணத்தின் முடிவில் நான் ஸந்துஷ்டனாக பவித்து, அவர்களுக்கு வேண்டிய வரங்களையளிப்பேன். அவர்கள் இவ்வுலகில் துக்கியார்கள்.

130. ஜன்மாந்திரத்தில் செய்த பாபத்தின் பலனான (பிராரப்தமான) துக்கங்கூட அப்பொழுதே சக்தி குன்றியதாக ஆய்விடும்.

131. ராமாயணத்தைப் படிப்பதாலோ, கேட்பதாலோ நான் எவ்வளவு சந்தோஷமடைகிறேனோ, அவ்வளவு சந்தோஷம், வேதாத்யயனத்தாலாவது. பாஹ்யபூஜையாலாவது, மானஸிகபூஜையாலாவது, தவத்தாலாவது, ஸன்யாஸத்தாலாவது அடைவதில்லை.

132. ஹே! நாரதமுனியே! எவ்விதத்திலாகிலும் சரி, எப்பொழுதாகிலும் சரி, நீர் விரும்பியபொழுதெல்லாம் எனது அழகான இந்த உருவத்தை உமக்கு காண்பிக்கிறேன்.

133. எனது அருளால் (ஒரிடத்திலும் நில்லாமல் ஸஞ்சரித்துக்கொண்டேயிரு என்ற) தக்ஷசாபம் உம்மை பாதிக்கமுடியாது.

134. இவ்விடத்தில் ஒரு மாஸகாலமாக இருக்கப்பட்டுவிட்டது. இனிமேல் ஒரு க்ஷணம்கூட இருக்கக்கூடாது. ஆகையால் இவ்விடமிருந்து உமது இஷ்டம் போல் உலகஸஞ்சாரம் செய்யும்.

135. நீர் ஸஞ்சரித்துக்கொண்டே ஸ்ரீராமாயணத்தை கானம்பண்ணவேண்டும். உலகக்ஷேமத்திற்காக இந்த கதையை உலகத்தில் பிரகாசம் செய்யவேண்டும்.

136. ஹே! வால்மீகிமுனிவரே! நீரும் எனது கதையை எப்பொழுதும் பாடிக்கொண்டிருக்கும் உமது சிஷ்யர்களுடன் வேறெருவரும் அடையமுடியாத ஆனந்தத்தையடைவீராக.

acharya.org

आहरिष्याम्यश्वमेधं स्वर्णसीतासमन्वितः ।
आगच्छ सह शिष्याभ्यां मत्पुत्राभ्यां महाध्वरम् ॥ १३७ ॥
तदा कर्मान्तरे काव्यं त्वत्कृतं मत्कथाश्रयम् । श्रोष्यामि बहुभिः सार्धं सभायां राजभिः सह ॥
अश्वमेधकथाघट्टं मुनिभिश्च भवादृशैः । अन्तं ततश्च श्रोष्यामि त्वं यशोभाग्भविष्यसि ॥
पुत्रौ च स्वीकरिष्यामि सर्वलोकस्य सन्निधौ ॥ १४० ॥
इदं रहस्यं प्रोक्तं ते त्वया प्रोक्तं च काव्यके ॥ १४१ ॥
त्वं निवत्स्यसि मल्लोके मत्समो बहुकल्पकम् । मामेवैष्यसि चान्ते त्वं सत्यं प्रतिशृणोमि ते ॥

दाल्भ्य उवाच—

इत्युक्त्वाऽन्तर्हितो रामः सीताद्यैरनुगैः सह ॥ १४३ ॥
अद्यापि गायति मुनिश्चरन्रामायणं सदा ॥ १४४ ॥
स एनमर्थं प्रावोचद्व्यासायामिततेजसे ॥ १४५ ॥
उपादिशत्स्वपुत्राय सोऽपि राजञ्च्छुकाय च ॥ १४६ ॥

137. நான் தங்கத்தால் செய்யப்பட்ட ஸீதையுடன் அச்வமேதயாகம் செய்யப்போகிறேன். அந்த பெரிய யாகத்திற்கு நீர் எனது புத்திரர்களான உமது சிஷ்யர்களுடன் வரவேண்டும்.

138-139. அப்பொழுது யாககர்மங்களின் இடைவேளைகளில் சபையில் அனேகம் அரசர்களுடனும், உம்மைப்போன்ற முனிவர்களுடனும்கூட எனது கதையை ஒட்டியதும், உம்மால் உண்டுபண்ணப்பட்டதுமான காவ்யத்தில் அச்வமேதகட்டம் முடிகிறவரைக்கும் கேட்கிறேன். பிறகு ஒரு காலத்தில் காவ்யம் முடியக் கேட்கிறேன். நீர் புகழடைந்தவராக ஆவீர்.

140. எல்லா ஜனங்களுக்கும் எதிரில் நான் புத்திரர்களை ஸ்வீகரித்துக் கொள்வேன்.

142. நீர் அனேக கல்பகாலம்வரையில் எனது ஸாலோக்யத்தையும், ஸாரூப்யத்தையுமடைந்து கடைசியில் எனது ஸாயுஜ்யத்தையும் அடையக்கடவீர். உமக்கு ஸத்யப்பிரதிக்ஞை செய்கிறேன்.

143. **தால்பியர் சொல்லுகிறார்:—** இவ்விதம் சொல்லிவிட்டு, ஸ்ரீராமர் ஸீதை முதலிய பரிவாரங்களுடன் அந்தர்தானமடைந்தார்.

144. இன்றைக்கும் நாரதமுனிவர் ஸஞ்சரித்துக்கொண்டே ஸ்ரீராமாயணத்தை கானம்பண்ணுகிறார்.

145. அந்த நாரதமுனிவர் இந்த ஸ்ரீராமாயண வைபவத்தை அளவற்ற தேஜோவானான வ்யாஸமுனிவருக்கு உபதேசம்செய்தார்:

146. ஹே! அரசே! அவரும் தனது புதல்வனான சுகரிஷிக்கு உபதேசம் செய்தார்.

acharya.org

स मे कथितवान् पूर्वं प्रसङ्गाद्भक्तसंसदि । मया तवोपदिष्टं च श्रीरामायणवैभवम् ॥
त्वं चादित्ये समायाते मदुक्तविधिपूर्वकम् । पठत्रामायणं भक्त्या वक्तारं परिकल्प्य च ॥
श्रोतॄंश्च परमोदारांस्तरिष्यसि महापदम् ॥ १४८ ॥

युधिष्ठिर उवाच—

श्रीमन्मुनिगणश्रेष्ठ दाल्भ्य सर्वज्ञसंमत । धन्योऽस्म्यनुगृहीतोऽस्मि विपदं तारितोऽस्मि च ॥
अहं रामायणं भक्त्या पठिष्यामि पुनर्वसौ । वक्ता भव महाभाग नान्योऽस्ति मम संमतः ॥

श्रीसूत उवाच—

इत्युक्त्वा पाण्डुतनयः संभारान् भ्रातृभिर्मुदा । संपाद्य च ततो वृत्वा श्रोतॄन् भक्तान्रघूत्तमे ॥
दाल्भ्यं वक्तारमाधाय द्वारकां प्रेष्य चानुजान् ।
गोविन्दं च समानीय प्रोक्तवान् स्वमनीषितम् ॥ १५२ ॥
स चैनमब्रवीद्राजंस्तुष्टोऽस्मि तव कार्यतः ॥ १५३ ॥
अस्मिन्नप्यवतारेऽहं मम पूर्वावतारके । रामात्मके यच्चरितं तद्यो वर्णयते मुदा ॥ १५४ ॥
तदा परवशो राजन् भवामि प्रीतमानसः । किमुताद्य महीपाल श्रीरामायणपाठतः ॥

147. முன்னொருகாலத்தில் பக்தர்கள் கோஷ்டியில் அவர் எனக்கு சொன்னார். அந்த ஸ்ரீராமாயண வைபவம் என்னால் உமக்கு உபதேசம்செய்யப்பட்டது.

148. நீரும், நான் சொன்ன விதிமுறைப்படி (அதிதியை தேவதையாக உடைய) புனர்வஸுநக்ஷத்திரம் வந்துபொழுது, ஒரு பிரவசனம் செய்பவரையும், மிக விசிஷ்டர்களான ச்ரோதாக்களையும் நியமித்துக்கொண்டு ஸ்ரீராமாயணத்தை பக்தியுடன் படித்து மிகப் பெரிய ஆபத்துக்களையும் கடப்பீராக.

149. **யுதிஷ்டிரர் சொல்லுகிறார்:—** எல்லாமறிந்தவர்களில் சிறந்த வே! முனிவர்பெருமானே! வே! தால்பியமுனியே! நான் தன்யனாக ஆனேன். அனுக்ரகிக்கப்பெற்றேன். ஆபத்துக்களை தாண்டிவைக்கப்பட்டேன்.

150. நான் புனர்வஸுதினத்தில் ஸ்ரீராமாயணத்தை பக்தியுடன் படிக்கப் போகிறேன். அதற்கு தாங்கள் "வக்தாவா" இருக்கவேண்டும். தங்களைத் தவிர வேறு யாரும் எனக்கு பிரியப்பட்டவர்களாக இல்லை.

151-152. **ஸூதர் சொல்லுகிறார்:—** தர்மபுத்திரர் இவ்விதம் கொல்லி மிக்களிப்புடன் தம்பிகளுடன் வேண்டிய ஸாமக்ரிகளை சம்பாதித்துக்கொண்டு ஸ்ரீ ராகவனிடத்தில் பக்தர்களான ஜனங்களை ச்ரோதாக்களாக (கேட்போராக) வரித்து, தால்ப்யமுனிவரை வக்தாவாகவும் (கதைசொல்பவராகவும்) வரித்து, தம்பிகளை த்வாரகாபுரிக்கனுப்பி ஸ்ரீகிருஷ்ணபகவானை அழைத்துவரச்செய்து தனது வேண்டுகோளை தெரிவித்தார்.

153. ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவும் தர்மபுத்திரரைப் பார்த்து வே! அரசே! உமது பிரவிருத்தியைக்கண்டு களிப்புற்றேன்.

154-155. இந்த அவதாரத்திலும், இதற்கு முந்தினதான ஸ்ரீராமாவதாரத்திலும் நடந்த தனது சரிதத்தை யாராகிலும் வருணித்தார்களானால் நான் மிகவும் ஸந்தோஷமடைந்து பரவசனாகிறேன். அப்படியிருக்க ஸ்ரீராமாயணத்தை படித்தால் நான் ஸந்தோஷமடைய கேட்கவும் வேண்டுமோ?

acharya.org

चरत्वयं विधिः सर्वं श्रोष्यामि च सह द्विजैः ॥ १५६ ॥

सूत उवाच—

ततो युधिष्ठिरो राजा सङ्कल्प्य विधिपूर्वकम् । द्रौपद्या सह धर्मात्मा पुनर्वसुमहादिने ॥
रामायणं यथान्यायं समारभ्य पठन् स्वयम् । समापयच्च विधिना कृत्वा कृष्णं सभेश्वरम् ॥
यथा सभां पूजयितुमुत्थितो धर्मनन्दनः । न ददर्श तदा कृष्णं तत्स्थानेऽन्यं ददर्श ह ॥
सव्ये पाणौ च कोदण्डं दक्षिणे चापि सायकम् । सीतालक्ष्मणसंसेव्यं पादान्ते च हनूमता ॥
श्रीरामं पुष्पवर्षेण कीर्यमाणं नभःसदाम् । सूर्यकोटिसमाभासं प्रसन्नवदनांबुजम् ॥
दृष्ट्वा परवशो भूत्वा हर्षेण कुरुनन्दनः । सहस्रकृत्वः प्राणंसीत्तुष्टाव च पुनः पुनः ॥
पाद्यार्घ्याचमनीयेन सम्यगाराधयन्मुदा ॥ १६२ ॥
भगवानपि सर्वात्मा राजानमिदमब्रवीत् ॥ १६३ ॥

श्री भगवानुवाच—

तुष्टोऽस्म्यनेन विधिना श्रीरामायणपाठतः ।अवाप्तस्याखिलान् कामानन्ते सायुज्यमेष्यसि
शत्रून् हनिष्यस्यखिलान् प्रतिज्ञान्ते नृपोत्तम ।
राज्यं प्राप्स्यसि भूयोपि भ्रातृभिः परिवारितः ॥ १६५ ॥
इत्युक्त्वाऽऽसीत्पुनः कृष्णः सर्वालङ्कारशोभितः ॥ १६६ ॥

156. ஆகையால் இந்த பாராயணமுறை நடைபெறட்டும். நானும் பிரசமனர்களுடன் ஆதியோடந்தமாக கேட்கிறேன்.

157-158. ஸூதர் சொல்லுகிறார்:— பிறகு தர்மாத்மாவான தர்மபுத்திரர் திரௌபதியுடன்கூட சாஸ்திரமுறைப்படி புனர்வஸுதினத்தில் ஸங்கல்பம் செய்து, ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவை ஸபாநாயகனகச் செய்து, ஸ்ரீராமாயணத்தை தானுகவே படிக்கத்தொடங்கி கிரமமாக முடித்தார்.

159. தர்மபுத்திரர் ஸபையை பூஜை செய்ய எழுந்திருந்தபொழுது அவிடத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானைக் காணவில்லை. ஆனல் அந்த இடத்தில் வேரேருவரை கண்டார். என்ன ஆச்சரியம்!

160-162. இடதுகையில் கோதண்டத்தையும், வலதுகையில் பாணத்தையு மேந்தியவரும், ஸீதாதேவியாலும், லக்ஷ்மணராலும், காலடியில் ஹனுமானாலும் ஸேவிக்கப்பட்டவரும், தேவர்களால் புஷ்பவர்ஷத்தால் இறைக்கப்பட்டவரும், கோடிசூரியர்களுக்குத் துல்யமான காந்தியுடையவரும், முகமலர்ச்சியுடனுமிருக்கும் ஸ்ரீராமரை தரிசித்து, சந்தோஷத்தால் மெய்மறந்து, தர்மபுத்திரர் அனேகாயிரம் தடவை விழுந்து நமஸ்கரித்தார். அடிக்கடி ஸ்தோத்திரம் செய்தார். பாத்யம், அர்க்கியம், ஆசமனீயம் இவைகளால் சந்தோஷத்துடன் நன்கு பூஜைசெய்தார்.

163. ஸர்வஸ்வருபியான பகவான் ராஜாவைப் பார்த்து இவ்விதம் திருவாய் மலர்ந்தருளினார்.

164-166. ஸ்ரீபகவான் சொல்லுகிறார்:— ஹே! ராஜோத்தமா! இந்த ஸ்ரீராமாயணமுறையால் நான் மிகவும் ஸந்தோஷமடைந்தேன். நீர் ஸர்வாபீஷ்டங்களை

acharya.org

सदस्या विस्मयांभोधौ मग्नाः श्रीरामदर्शनात् । तुष्टुवुर्द्वारकानाथं तन्माहात्म्यवशीकृताः ॥
राजाऽपि कर्म तत्सम्यक्समाप्य विधिपूर्वकम् । अन्नैश्च षड्रसोपेतैः सूर्यपात्रविनिर्मितैः ॥
ब्राह्मणान् भोजयामास सहस्राधिकसंख्यया ॥ १६८ ॥
वक्तारं पूजयामास कृष्णदत्तैर्धनादिभिः ॥ १६९ ॥
ततो व्यतीते वनवासदुःखे जित्वा रिपून् भीष्ममुखान् महात्मा ।
सहोदरैः सेवितपादपद्मो महीं प्रपेदे महतीं मुदं च ॥ १७० ॥

सूत उवाच—

यो रामायणमाहात्म्यमिदमुक्तं मुनीश्वराः । पठेद्वा शृणुयाद्वापि स रामे भक्तिमान् भवेत् ॥
श्रीरामस्य प्रसादेन सर्वान् कामानवाप्नुयात् ॥ १७१ ॥

इति श्रीस्कान्दोपपुराणे पुराणवैभवखण्डे ब्रह्मनारदसंवादे रामायणमाहात्म्ये
अत्र तृतीयोऽध्यायः ॥

யும் அடைவீர். கடைசியில் எனது ஸாயுஜ்யமுக்தியையுமடைவீர். உமது [12 வருஷங்கள் வனவாஸமும், 1 வருஷம் அக்ஞாதவாஸமும் செய்கிறேன் என்ற) பிரதிக்ஞையின் முடிவில் எல்லா சத்ருக்களையும் கொல்லுவீர். மறுபடியும் தம்பிகளுடன் கூடினவராக உமது ராஜ்யத்தையடைவீர், என்று சொல்லிவிட்டு, எல்லா அலங்காரங்களாலும் விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக பவித்தார்.

167. ஸதஸ்யர்கள் ஆச்சரியக்கடலில் மூழ்கியவர்களாக பவித்து ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவை அவரது மகிமையால் மெய்மறந்தவர்களாக பவித்து ஸ்துதித்தார்கள்.

168-169. அரசனும் சாஸ்த்திரமுறைப்படி அந்த கர்மாவை முடித்துக் கொண்டு, ஸூர்யபகவானுல் கொடுக்கப்பட்ட அக்ஷயபாத்திரத்திலிருந்துண்டான ஷட்ரஸங்களோடுகூடின அன்னங்களால் ஆயிரக்கணக்கான பிராம்மணர்களை புஜிக்கச்செய்தார். ஸ்ரீகிருஷ்ணபகவானுல் கொடுக்கப்பட்ட தனம் முதலியவற்றால் வக்தாவான தால்பியரையும் பூஜைசெய்தார்

170. பிறகு வனவாஸ துக்கம் முடிந்தபிறகு மஹாத்மாவான தர்மபுத்திரர், பீஷ்மன் முதலிய சத்ருக்களைவென்று, தம்பிகளால் அடிபணியப்பட்டவராகி மஹத்தான அரசாட்சியையும், சந்தோஷத்தையும் அடைந்தார்.

171. ஸூதர் சொல்லுகிறார்:— ஹே! முனிவர்களே! யாதொருவன் இப்பொழுது சொல்லப்பட்ட ஸ்ரீராமாயண மாஹாத்மியத்தை படிக்கவோ, கேட்கவோ செய்கிறானே, அவன் ஸ்ரீராமபக்தனுக பவிப்பான். ஸ்ரீராமரது அருளால் ஸர்வாபீஷ்டங்களையும் பெறுவான்.

acharya.org

॥ श्रीः ॥

कुमारसंहितोक्तः श्रीरामायणनवाहपारायणविधिः ॥

माण्डुकर्णिरुवाच—

कुम्भसम्भव धर्मज्ञ विष्णुभक्त नमोऽस्तु ते । रामायणस्य यत्प्रोक्तं नवाहपठनं त्वया ॥
विस्तराच्छ्रोतुमिच्छामि तदद्य मुनिपुङ्गव । पूजां पारायणं दानं जपहोमार्चनादिकम् ॥
कथं कार्यं कदा वापि कुत्र वा वद विस्तरात् ॥ २ ॥

अगस्त्य उवाच—

मुने वक्ष्यामि ते पृष्टं श्रूयतामवधानतः । तुष्टोऽस्म्यनेन प्रश्नेन राघवं स्मारितोऽस्म्यहम् ॥
धर्मकामनया वाऽपि अर्थकामनयाऽपि वा मोक्षकामोऽथवा रामप्रीतिमात्राभिलाषतः ॥
अपस्मारादिरोगैश्च दुश्चिकित्सैः प्रपीडितः । नवग्रहाणां दोःस्थ्येन पीडितो वाऽपि चैकदा ॥
विश्लिष्टबन्धुसंयोगकामुको वा सुतार्थिकः ॥ ५ ॥
श्रीमद्रामायणाख्यस्य इतिहासोत्तमस्य च । नवाहपठनं कृत्वा सर्वं सौख्यमवाप्नुयात् ॥
गृहे देवालये वाऽपि महाभोगाङ्गणान्विते । कुर्यान्मण्डपिकां चित्रां पट्टवस्त्रवितानिकाम् ॥
तोरणालङ्कृतां दिक्षु कदलीस्तंभसंवृताम् । कोमलैर्नारिकेलैश्च पक्वैः पूगफलैरपि ॥ ८ ॥

1-2. மாண்டுகர்ணிமுனிவர் சொல்லுகிறார்:— எல்லா தர்மங்களையறிந்தவரும், விஷ்ணுபக்தருமான ஹே! அகஸ்த்யமாமுனிவரே! தங்களால் சொல்லப்பட்ட ஸ்ரீராமாயணத்தின் நவாஹபாராயணமுறையை விரிவாகச் சொல்லிக்கேட்க விரும்புகின்றேன். பூஜை, பாராயணம், தானம், ஜபம், ஹோமம், அர்ச்சனை முதலியவைகள் எப்பொழுது எவ்விடத்தில் எவ்விதம் செய்யவேண்டும் என்று எனக்கு விவரித்துச்சொல்லக்கடவீர்.

3. அகஸ்த்யர் சொல்லுகிறார்:— ஹே! முனிவரே! உம்மால் கேட்கப்பட்டதற்கு பதில் சொல்லுகிறேன். சிரத்தையுடன் கேட்பீராக. உமது இந்த கேள்வியால் நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். ஏனென்றால் இந்த காரணத்தால் நான் ஸ்ரீராமனை ஸ்மரிக்கும்படி செய்யப்பட்டேன்.

4-6. தர்மத்தில், ஆசைகொண்டோ, அல்லது அர்த்தத்தில் ஆசைகொண்டோ, அல்லது மோக்ஷத்தில் ஆசைகொண்டோ, அல்லது ஸ்ரீராமனது அனுக்கிரகத்தில்மட்டும் ஆசைகொண்டோ, அல்லது வைத்தியம்செய்யமுடியாத அபஸ்மாரம் முதலிய ரோகங்களால் பாதிக்கப்பட்டவனே, அல்லது நவக்கிரகங்களின் கெட்ட தசையால் பாதிக்கப்பட்டவனே, அல்லது பிரிந்துபோன பந்துக்களுடன் சேர விரும்பியவனே, அல்லது புத்திரனை இச்சித்தவனே, யாராயிலும் இந்த ராமாயணமென்ற இதிஹாஸத்தை ஒன்பது நாட்களில் பாராயணம் செய்தால் எல்லாவிதங்களான ஸௌக்கியங்களையும் பெறுகிறான்.

7-10. அகலமான நிண்ணையையுடைய வீட்டிலாவது, கோவிலிலாவது, பட்டுமேற்கட்டியுள் கூடினதும், அழகானதும், தென்னங்குருத்துகளாலலங்கரிக்கப்

acharya.org

शोभितां रङ्गवल्लीभिश्चित्राभिः सर्वतो वृताम् । शङ्खचक्राब्जमीनादिरूपाभिः कृतभक्तिभिः ॥
महतीं चतुरश्रां च कुर्यात्तत्र च वेदिकाम् ॥ १० ॥
तत्र व्रीहीन् संप्रसार्य द्वादशप्रस्थसंमितान् । अनाहतेन शुक्लेन वस्त्रेणाच्छाद्य तानथ ॥
तदर्धपरिमाणेन तण्डुलांस्तस्य चोपरि । निक्षिप्य तत्र विलिखेत्पद्ममष्टदलं शुभम् ॥
परितस्तस्य विलिखेत् भूपुरद्वितयं ततः ॥ १३ ॥
त्रिकोणद्वयमालिख्य कर्णिकायां सरोरुहः । प्रणवं रामबीजं च सीताबीजं तथैव च ॥
विलिख्य दर्भैराच्छाद्य तण्डुलांस्तान्समन्ततः । तस्य चोपरि गङ्गादितीर्थसंपूरितं घटम् ॥
हाटकं राजतं वाऽपि ताम्रं वा स्थापयेच्छुभम् ॥ १५ ॥
पञ्चपल्लवकूर्चादिपट्टवस्त्राद्यलङ्कृते । उदच्छिखं नारिकेलं पक्वं विन्यस्य तत्र च ॥ १६ ॥
सुवर्णस्याथ रौप्यस्य पलद्वयविनिर्मिताम् । स्नपितां पञ्चगव्येन यथावच्च प्रतिष्ठिताम् ॥
प्रतिमां यत्राष्टदलपद्ममध्ये रघूद्वहः । उत्सङ्गे सीतया सार्धं भाति चिन्मुद्रयान्वितः ॥
स्थापयित्वा द्विजश्रेष्ठैरनुज्ञातो गणाधिपम् । पूजयित्वा प्रार्च्य तं च श्रीरामायणपुस्तके ॥
प्रतिमायां च संपूज्य ततः सङ्कल्पयेन्मुदा ॥ १९ ॥

பட்டதும், நான்கு திக்குகளிலும், வாழைமரங்களால்லலங்கரிக்கப்பட்டதும், அழகான தென்னங்குலைகளாலும், பழுத்த பாக்குக்குலைகளாலுமலங்கரிக்கப்பட்டதும், சங்கம், சக்கிரம், தாமரைப்பூ, மீன் முதலிய உருவங்களால் வரிசையாக கோலமணிகளாலலங்கரிக்ப்பட்டதுமான மண்டபத்தைை உண்டுபண்ணி அவ்விடத்தில் நான்கு மூலியுடைய ஒரு பெரிய வேதியையும் உண்டுபண்ணவேண்டும்.

11-15. அந்த வேதியில் 12 படி நெல்லைப் பரத்தி வெளுத்த கோடிவஸ்திரத்தால் அதை மறைத்து, அதன்மேல் 6 படி அரிசியைப பரத்தி, அதில் எட்டு தளங்களுடன்கூடின அழகான தாமரைப்பூவை வரையவேண்டும். பிறகு அதற்கு நாற்புறமும் இரண்டு பூபுரங்களை வரையவேண்டும். பிறகு அதன் கர்ணிகையில் (நடுவில்) ஆறுகோணசக்கிரத்தை வரைந்து "ஓ" என்ற பிரணவத்தையும், "रां" என்ற ராமபீஜத்தையும், "श्री" என்ற ஸீதாபீஜத்தையும் எழுதி, அந்த அரிசியை நாற்புறங்களிலும் தர்ப்பைகளால் மறைத்து, அதன்மேல்கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களால் நிறைந்த தங்கக்குடத்தையாவது, வெள்ளிக்குடத்தையாவது, அல்லது தாம்பிரக்குடத்தையாவது வைக்கவேண்டும்.

16-19. அரசு, அத்தி, இத்தி, மா, ஆல் என்ற ஐந்துமரங்களின் தளிர்களாலும், கூர்ச்சத்தாலும், பட்டுவஸ்திரத்தாலுமலங்கரிக்கப்பட்ட அந்தக் குடத்தின் மேல் பழுத்ததான தேங்காயை வடக்குநுனியாக வைத்து, இரண்டு பலம் தங்கத்தாலாவது, வெள்ளியாலாவது செய்யப்பட்ட எட்டு தளங்களையுடைய தாமரைப்பூவின் நடுவில் மடியில் ஸீதையுடனும், சின்முத்திரையுடனும் கூடின ஸ்ரீராமப்பிரதிமையை பஞ்சகவ்யத்தில் ஸ்நானமசெய்துவைத்து, பிராம்மணர்களின் அனுமதி பெற்றுக்கொண்டு, ஸ்ரீமஹாகணபதியை பூஜைசெய்து பிரார்த்தித்துக்கொண்டு, ஸ்ரீராமாயண புஸ்தகத்திலும், ஸ்ரீராமப்பிரதிமையிலும் பூஜைசெய்து பிறகு ஸங்கல்பம் செய்யவேண்டும்.

acharya.org

पठितारौ कुशलवस्वरूपौ द्वौ वृणीत च । वक्तारमपि वाल्मीकिरूपमेकं वृणीत च ॥
श्रोतारमेकं हनुमत्स्वरूपं वृणुयात्ततः । उपश्रोतॄंस्ततस्त्रींश्च वृणुयाद्राघवप्रियान् ॥ २१ ॥
पठने वा प्रवचने श्रवणे वा यदा स्वयम् । पटुर्भवेत्तदा कुर्यात्तथा सङ्कल्पमेव च ॥ २२ ॥
ततः पठेन्नारदोपदिष्टमारभ्य सर्गकम् । आबालकाण्डसंपूर्तेः पठेत्तु प्रथमे दिने ॥ २३ ॥
द्वितीये वै दशरथप्राणयात्रान्तमेव च । तृतीये तु दिने पाठ्यमयोध्याकाण्डशेषकम् ॥
चतुर्थे तु पठेद्दूराजमोक्षावधि क्रमात् । विलप्रवेशात् पूर्वं तु पञ्चमे विरमेत्पुनः ॥

20. பிறகு குசலவஸ்வரூபிகளான இரண்டு பாராயண கர்த்தாக்களை வரிக்க வேண்டும். பிறகு வால்மீகிஸ்வரூபியான ஒருவரை வக்தாவாக வரிக்கவேண்டும்

21. பிறகு ஹனுமத்ஸ்வரூபியான ஒருவரை ச்ரோதாவாக வரிக்கவேண்டும் பிறகு ஸ்ரீராமபக்தர்களான மூன்றுபேர்களை உபச்ரோதாக்களாக வரிக்கவேண்டும்.

22. படிப்பதிலோ, பிரஸங்கம்செய்வதிலோ, கேட்பதிலோ, தானே சக்தனாக இருக்கும்பக்ஷத்தில் அவ்விதமே ஸங்கல்பம்செய்யவேண்டும்.

பின் சுலோகங்களில் சொன்னவிதம் ஒவ்வொரு நாளும் பாராயணம் செய்யவேண்டிய ஸர்க்கங்களின் விவரமும் ஸங்கியையும்:—

நாள்.	காண்டம்.	ஸர்க்கம்.	மொத்தம் ஸர்க்கம்.	ஒவ்வொரு நாள் சுலோக ஸங்கியை	மொத்தம் பாராயணம் செய்த சுலோகஸங்கியை
1.	பாலகாண்டம்	1—77	77	2355	2355
2.	அயோத்யாகாண்டம்	1—64	64	2597	4952
3.	ஷ	65–119	55	1760	6712
4.	ஆரண்யகாண்டம்	1—68	68	2290	9002
5.	ஷ	69—75	7	250	11289
	கிஷ்கிந்தாகாண்டம்	1—49	49	2037	
6.	ஷ	50—67	18	501	14176
	ஸுந்தரகாண்டம்	1—56	56	2386	
7.	ஷ	57—68	12	499	16665
	யுத்தகாண்டம்	1—50	50	1990	
8.	ஷ	51–111	61	3154	19819
9.	ஷ	112–131	20	905	20724
			537	20724	20724

23. பிறகு முதல்தினத்தில் நாரதர் வால்மீகிக்கு உபதேசித்ததான முதல் ஸர்க்கத்திலாரம்பித்து பாலகாண்டம் முடிய படிக்கவேண்டும்.

24. இரண்டாவது தினத்தில் அயோத்யாகாண்டத்தில் தசரதர் மரணமடையும் (64-வது) ஸர்க்கம் முடியவும், மூன்றும்நாள் (65) அதிலிருந்து அயோத்தியாகாண்டம் முடியவும் படிக்கவேண்டும்.

25. நான்காவதுநாளில் ஆரண்யகாண்டத்தில் ஜடாயுமோக்ஷம் (68)வரையில் படித்து ஐந்தாவதுநாளில் (ஸ 69முதல்) அதிலிருந்து பிலப்பிரவேசம் (கி. 49) வரையில் படிக்கவேண்டும்.

acharya.org

हनूमतो निवृत्त्यन्तं षष्ठे लङ्कापुरात्पठेत् । नागपाशनिवृत्त्यन्तं सप्तमे दिवसे पठेत् ॥
रावणस्य वधान्तं च दिवसे चाष्टमे पठेत् । नवमे दिवसे पाठ्यं यावद्रामाभिषेचनम् ॥
पठनान्ते राघवस्य विष्णोर्नामसहस्रतः । मल्लिकाचम्पकैरर्चां पद्मैर्वा तुलसीदलैः ॥
कृत्वाऽथ पायसापूपभक्ष्यभोज्यादिसंयुतम् । शाल्यन्नं विनिवेद्याथ ब्राह्मणान् भोजयेत्ततः॥
प्रथमे दिवसे विप्रा भोज्या द्वादशसङ्ख्यकाः । द्वितीयेऽष्टौ तृतीये तु विंशतिश्च चतुर्थके॥
दश विप्राः पञ्चमे तु भोज्याः पञ्चदश द्विजाः । षष्ठे च द्वादशैव स्युः सप्तमे तूनविंशतिः॥
अष्टमे दश विप्राश्च न सङ्ख्या नवमे स्मृता ॥ ३२ ॥
मध्वाज्यफलसंमिश्रं भोजनं सर्वदा दिशेत् । दक्षिणामपि विप्राणां दद्याद्युक्तवतां व्रती ॥
सायं च यामे पूर्वे च रात्रे प्रतिदिनं ततः । वक्तुर्मुखाच्च शृणुयात्पूर्वाह्णपठितस्य च ।
भक्त्याऽर्थान् पूजयेत्तं चाप्यभीष्टैः प्रतिवासरम् ॥ ३४ ॥
वक्ता श्रोता च पठिता यजमानस्तथैव च । ब्रह्मचर्यव्रतपरा भवेयुर्नव वासरान् ॥ ३५ ॥

26. ஆறுவதுநாளில் (कि. 50முதல்) ஹனுமான் லங்கையிலிருந்து திரும்பி வரும்வரையில் (सु. 56முடிய) படித்து, ஏழாவது நாளில் (सु. 57முதல்) நாகபாசத்திலிருந்து விடுவிக்கப்பட்டது முடிய (सु. 60) படிக்கவேண்டும்.

27. எட்டாவது நாளில் (यु. 51முதல்) ராவணவதம் முடிய (यु. 111)படிக்கவேண்டும். ஒன்பதாவது நாளில் (यु. 112முதல்) ஸ்ரீராம பட்டாபிஷேகம் முடியும் (यु. 131) படிக்கவேண்டும்.

28-29. பாராயணமுடிவில் மல்லிகை, சம்பகம், தாமரைப்புஷ்பம், துளஸீ இவைகளைக்கொண்டு ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தால் அர்ச்சனைசெய்து, பாயஸம், அப்பம், பக்ஷியங்கள் இவைகளுடன் அன்னத்தை நிவேதனம் செய்து பிறகு பிராமணபோஜனம் செய்விக்கவேண்டும்.

30-32. முதல்நாள் 12, இரண்டாம்நாள் 8, மூன்றாம்நாள் 20, நான்காம் நாள் 10, ஐந்தாம்நாள் 15, ஆறுவதுநாள் 12, ஏழாவதுநாள் 19, எட்டாவதுநாள் 10, ஒன்பதாவதுநாள் அனேகம் பிராமணர்கள் போஜனம் செய்விக்கப்படவேண்டும்.

33. தேன், நெய், பழம் முதலியவற்றுடன்கூடின போஜனத்தை கொடுக்கவேண்டும். போஜனம்செய்த பிராமணர்களுக்கு தக்ஷிணையும் கொடுக்கவேண்டும்

34. பிறகு சாயங்காலம் இரவின் முதல்யாமத்தில் அன்றன்றையதினம் முற்பகலில் படித்த கதை பிரஸங்கம் செய்பவரிடமிருந்து பக்தியுடன் சிரவணம் செய்யவேண்டும். கதாபிரஸங்கம் செய்பவரை வேண்டிய திரவ்யங்களைக் கொடுத்து பஹுமானம் செய்யவேண்டும்.

35. வக்தா ச்ரோதா, பாராயணகர்த்தா, யஜமானன் இவர்கள் ஒன்பது நாட்களும் ஸ்த்ரீசங்கமில்லாமல் பிரம்மசாரிகளாக இருக்கவேண்டும்.

acharya.org

एवं कृत्वा प्रतिदिनं प्राप्ते तु नवमे दिने । पठनान्ते तु सङ्कल्पं कृत्वा कल्पोक्तमार्गतः ॥
कृत्वा पूजां यथाशक्ति पुष्पादिद्रव्यसंयुताम् । कुर्यात्पट्टाभिषेकाख्यमहोत्सवमथादरात् ॥
स्वगृह्योक्तविधिना प्रतिष्ठाप्य हुताशनम् । क्षीरान्नेन च पालाशसमिद्भिश्च घृतेन च ॥
त्रिशतं रामगायत्र्या जुहुयाद्राघवं स्मरन् ॥ ३८ ॥
गुडान्नेन च दूर्वाभिर्घृतेन च चतुःशतम् । मूलमन्त्रेण जुहुयात्स्वयं वाऽऽचार्यमूलतः ॥
धर्मात्मेति च मन्त्रेण घृताक्तान्नेन सर्पिषा । अश्वत्थसमिधा चापि जुहुयात्त्रिशतं व्रती ॥
तद्विष्णोरिति मन्त्रेण जुहेदष्टोत्तरं शतम् । तत्र हव्यं तु शुद्धान्नं समिधस्तु कुशाः स्मृताः ॥
होमाशक्तौ होममन्त्रान् होमत्रिगुणसङ्ख्यया । आवर्तयेद्रघुपतिं कूर्चेष्वावाह्य चोच्चकैः ॥
प्रतिमामप्यथोद्वास्य दद्याद्विप्राय योगिने । स्नपयेद्यजमानं चाचार्यः कुम्भजलेन च ॥
वक्त्रे पठित्रे श्रोत्रे च वस्त्रालङ्करणादिभिः । दीनारैरपि संमानं ततः कुर्याद्यथोचितम् ॥

36-37. இவ்விதம் ஒவ்வொரு நாளும் செய்துவந்து ஒன்பதாவது தினத்தில் பாராயணம் முடிந்ததும் ஸங்கல்பம்செய்து, புஷ்பம் முதலிய பூஜாத்ரவ்யங்களுடன் கல்போக்தவிதியாக சக்தியநுஸாரமாக பூஜைசெய்து, ஸ்ரீராமபட்டாபிஷேக மஹோத்ஸவத்தை பக்தியுடன் செய்யவேண்டும்.

38. தனது க்ருஹ்யத்தில் சொன்னபடி அக்னிப்ரதிஷ்டை செய்து பாயஸத்தாலும், பலாசஸமித்துக்களாலும், நெய்யினாலும்–"दाशरथाय विद्महे सीतावल्लभाय धीमहि । तन्नो रामः प्रचोदयात् ॥" என்ற ராம காயத்ரீமந்திரத்தால் 300 ஹோமம் செய்யவேண்டும்.

39. பிறகு "रां रामाय नमः" என்ற மூலமந்திரத்தால் சர்க்கரை கலந்த அன்னத்தாலும், அருகம்புல்லுகளாலும், நெய்யினாலும் 400 ஹோமம், தானுகவோ ஆசார்யனைக்கொண்டோ செய்யவேண்டும்.

40. பிறகு धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि। पौरुषे चाप्रतिद्वन्द्वः शरैनं जहि रावणिम्॥ என்ற மந்திரத்தைக்கொண்டு, நெய்யன்னத்தாலும், நெய்யினாலும், அச்வத்தஸமித்துக்களாலும் 300 ஹோமம் செய்யவேண்டும்.

41. तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति सूरयः । दिवीव चक्षुराततम्" என்ற மந்திரத்தைக்கொண்டு அன்னத்தாலும், தர்ப்பைகளாலும் ஹோமம் செய்யவேண்டும்.

42. ஹோமம் செய்ய முடியவில்லையாகில் கூர்ச்சத்தில் ஸ்ரீராமனை ஆவாஹனம்செய்து ஹோமமந்திரங்களை, ஹோமஸங்கியைக்கு மூன்றுபங்கு அதிகமாக ஜபிக்கவேண்டும்.

43. பிறகு ஸ்ரீராமப்ரதிமையை உத்வாஸனம்செய்து யோக்கியரான ப்ராம்மணனுக்கு தானம் செய்யவேண்டும். பிறகு ஆசார்யன் கும்பஜலத்தால் யஜமானனுக்கு அபிஷேகம் செய்யவேண்டும்

44. பிறகு வக்தா, பாராயணகர்த்தா, ச்ரோதா இவர்களுக்கு வஸ்த்ரம் அலங்காரம், தக்ஷிணை இவைகளால் தகுந்தபடி பஹுமானம்செய்யவேண்டும்.

acharya.org

इदं व्रतं शुक्लपक्षे चैत्रे वाऽऽश्वयुजेऽपि वा । प्रथमायां समारभ्य नवम्यां च समापयेत् ॥
तिथिवृद्ध्या तु नवमी यदि स्याद्दशमे दिने ।
तथाऽऽरभेद्द्वितीयायां नवाहं स्यान्महोत्सवः ॥ ४७ ॥
तिथिक्षयेण सा चेत्स्यादष्टमे दिवसे भवेत् । अमायां तु व्रतमिदं प्रारभ्य नव वासरान् ॥
मध्याह्नव्यापिनी ग्राह्या नवमी रामपूजने ॥ ४८ ॥
कुर्याद्भक्त्या च तुष्ट्या च श्रद्धया च समन्वितः । मासद्वयं तु पूर्वोक्तमुख्यपक्षसमाश्रयात् ॥
अन्येष्वपि च मासेषु शुक्लपक्षे यथारुचि । कुर्याद्व्रतमिदं यत्तः सर्वसंपत्समृद्धये ॥
एवं कृते जगत्स्वामी रामभद्रः श्रियः पतिः ।
तुष्टो भवति मोक्षान्तान् सर्वान् कामान्ददाति च ॥ ५१ ॥
अपुत्रो लभते पुत्रमपमृत्युं तरेत च । भुञ्जीत सर्वान् भोगांश्च कुबेरेण समो भुवि ॥
आचन्द्रार्कं वंशवृद्धिर्यजमानस्य वै भवेत् । प्रीयन्ते पितरस्तस्य आविंशतिकुलं ततः ॥
नरकादुत्तरन्त्येते राममाहात्म्यतोऽखिलाः ॥ ५३ ॥
आयुः कीर्तिश्च वर्धेत सर्वं दुःखं प्रणश्यति ॥ ५४ ॥
इदमुक्तं महाभाग माण्डूकर्णे महामुने ॥ ५५ ॥

45. இந்த விருதத்தை சித்திரைமாதத்திலாவது, ஆச்வயுஜமாதத்திலாவது சுக்கிலபக்ஷ பிரதிமையில் தொடங்கி நவமியில் முடிக்கவேண்டும்.

46. திதியின் விருத்தியால் நவமி பத்தாவது நாளில் வருமானால் த்விதீயை யன்று பாராயணத்தை துவக்கவேண்டும். எவ்விதமும் உத்ஸவம் 9 நாட்கள் நடக்கவேண்டும்.

47. திதி க்ஷயத்தால் நவமி திதி எட்டாவதுநாளில் வருமானால் அமாவாஸ்யாதினத்தில் பாராயணத்தை துவக்கி 9 நாட்கள் நடத்தவேண்டும்.

48. ஸ்ரீராமபூஜைக்கு மத்யானவ்யாபினியான நவமிதிதியைக்கொள்ளவேண்டும்.

49. முன்சொன்ன இரண்டுமாதங்களையும் முக்கியபக்ஷமாக கைக்கொண்டு சிரத்தையுடனும் பக்தியுடனும், மனஸந்துஷ்டியுடனும் இந்த உத்ஸவத்தை நடத்தவேண்டும்.

50. இதரமாஸங்களிலும் சுக்லபக்ஷத்தில் தனதிஷ்டம்போல ஸமஸ்தைசுவரியங்களுண்டாவதற்காக சிரத்தையுடன் இந்த விரதத்தை செய்யவேண்டும்.

51. இவ்விதம் செய்தால் ஸ்ரீகாந்தனும், உலகநாதனுமாகிய ஸ்ரீராமர் அருள்புரிந்து மோக்ஷபரியந்தங்களான ஸகல அபீஷ்டங்களையுமளிக்கிறார்.

52. புத்திரனில்லாதவன் புத்திரனையடைகிறான். அபமிருத்யுவை ஜயிக்கிறான். இவ்வுலகில் குபேரனுக்கு துல்யனாக ஸகலபோகங்களையுமனுபவிக்கிறான்.

53. யஜமானனுடைய வம்சம் சந்திர சூரியர்களிருக்கும்வரையில் விருத்தியடைகிறது. அவனது இருபத்தோரு தலைமுறை பிதுருக்கள் திருப்தியடைகிறார்கள். ஸ்ரீராமரது மஹத்வத்தால் நரகத்திலிருந்து கரையேறுகிறார்கள்.

54. ஆயுஸும், கீர்த்தியும், விருத்தியடைகிறது. ஸகல துன்பங்களும் நசிக்கிறது.

55. ஹே! மாண்டுகர்ணிமுனிவரே! ஸ்ரீராமாயணத்தைப்பற்றின இவ்வளவும் சொல்லப்பட்டது.

acharya.org

रामातिक्रमदोषाच्च क्षत्रियभ्रूणनाशनात् । इदं यथोदितं चक्रे जामदग्न्यः पुरा व्रतम् ॥
प्रत्यक्षीभूय रामश्चाप्यनुजग्राह तं ततः ॥ ५६ ॥
बहुभिश्च ततो भूपैर्मुनिभिश्च द्विजोत्तमैः । अनुष्ठितं व्रतमिदं तत्तत्कामनयाऽन्वितैः ॥
अनायासेन ते प्राप्ता अभीष्टं रघुसत्तमात् ॥ ५७ ॥
एवं कर्तुमशक्तश्चेद्वित्तलोभं विना द्विजः । यावच्छक्ति व्रतमिदं कुर्याद्भक्तिसमन्वितः ॥
सर्वाशक्तौ नवदिनं यथोक्तक्रमतः पठेत् । पूजयेच्च रघूत्तंसं तेन रामः प्रसीदति ॥
इति श्रीकुमारसंहितायामगस्त्यमाण्डूकर्णिसंवादे
श्रीरामायणनवाहपारायणविधिः समाप्तः

॥ श्रीः ॥

अथ वायुपुराणान्तर्गतायामुमासंहितायां कामनावद्भिः पठनीयषट्निरूपणम् ॥

ईश्वर उवाच—
अथ वक्ष्यामि गिरिजे शृणुतामवधानतः । श्रीमद्रामायणग्रन्थे कामनावद्भिरादरात् ॥
षट्कानां पठनीयानां सङ्ग्रहाध्यायमादरात् ॥ १ ॥
कामेप्सवो द्विजाः प्रातः स्नात्वा दिव्यसरिज्जले । प्रयताः शुद्धभावाश्च कृतजप्या हुताग्नयः ॥

56. ஸ்ரீராமனே நிந்தித்த தோஷத்திற்காகவும், க்ஷத்திரியகர்ப்பங்களை (பாலர்களை) கொன்ற தோஷத்திற்காகவும் பரசுராமர் இந்த விரதத்தை விதிமுறைப்படி அனுஷ்டித்தார். அப்பொழுது ஸ்ரீராமர் பிரத்யக்ஷமாக வந்து அவரை அனுக்கிரஹித்தார்.

57. அதன் பிறகு அனேகம் அரசர்களாலும், ரிஷிகளாலும், பிராம்மணர்களாலும் ஒவ்வொரு பலத்தையுத்தேசித்து இந்த விரதம் அனுஷ்டிக்கப்பட்டது. அவர்களெல்லோரும் சிரமமின்றி ஸ்ரீராமரிடமிருந்து அந்தந்த பலன்களையடைந்தார்கள்.

58. முன்சொன்ன விதிமுறைப்படி இந்த விரதத்தைச் செய்யமுடியாத பிராம்மண க்ஷத்திரிய வைசியர்கள் தனலோபமில்லாமல் சக்தியனுஸரித்து செய்ய வேண்டும்.

59. ஒன்றும் செய்யமுடியாதாகில் 9 நாட்கள் முன்சொன்ன க்ரமத்தில் பாராயணம் செய்யவேண்டும். ஸ்ரீராமரை பூஜைசெய்யவும் வேண்டும். அப்படியாகில் ஸ்ரீராமர் அருள்புரிவார்.

1. **ஈசுவரன் சொல்லுகிறார்:—** ஹே! பார்வதி! வெவ்வேறு பலன்களை இச்சித்த ஜனங்கள் ஸ்ரீராமாயணத்தில் படிக்கவேண்டிய கட்டங்களின் ஸங்க்ரஹத்தை சொல்லுகிறேன். சிரத்தையுடன் கேட்பாயாக.

2-4. பலன்களை விரும்பும் த்விஜர்கள் ப்ராதக்காலத்தில் புண்யநதியில் ஸ்னானம் செய்து, காயத்ரீஜபம் செய்து, அக்னிஹோத்ரஹோமம் செய்து, பகலில்

acharya.org

दिवसस्याष्टम भागं परिहृत्य ततः परम् । रामं संपूज्य विधिवत् पठेयुः स्वेष्टषट्टकम् ॥
पठितुं चेदशक्तः स्याच्छृणुयात्स गदादिमान् ॥ ४ ॥
द्विजेतरैस्तु श्रोतव्यं सर्वदैव द्विजाननात् । पाठकं मानयेदन्ते मत्वा श्रीरामविग्रहम् ॥
धर्मकामस्तु कौसल्यारामसंवादमादरात् । मङ्गलान्तं पठेत्प्रातर्मध्याह्ने वा स्मरन् प्रभुम् ॥
अनश्नन्नेव हि पठेत्प्रातर्मध्याह्न एव च । पठनं यस्य षट्टस्य सायं च परिकीर्तितम् ॥
तं पठेत्प्रयतः सन्ध्यामनुष्ठायधृतव्रतः । अशुद्धिश्चेद्दिवा प्राप्ता सायं स्नात्वा पठेत्ततः ॥
अर्थकामः पठेत्सर्गं यात्रादानकथांशकम् । रामस्यारण्यगमनसमये तु त्रिसन्ध्यकम् ॥ ९
कन्यार्थी च वटुः कन्याऽप्यनुरूपवरार्थिनी । सीताविवाहसर्गं तु पठेत्प्रातः प्रयत्नतः ॥
गव्यं निवेदयेत् क्षीरं सद्यो दुग्धं शुचिस्थले ॥ १० ॥
मोक्षार्थिभिस्तु पाठ्या स्याज्जटायुर्मोक्षदानका । रामस्य लक्ष्मणाश्वासाद्यारभ्य प्रयतैः कथा ॥

எட்டில் ஒரு பங்காகிய $3\frac{3}{4}$ நாழிகைக்குப் பிறகு ஸ்ரீராமனே விதிமுறைப்படி பூஜை செய்து, தனக்கிஷ்டமான கட்டத்தை படிக்கவேண்டும். வியாதி முதலியவற்றால் படிக்க முடியவில்லையாகில் படிப்பதை கேட்கவேண்டும்.

5. பிராம்மணரல்லாதார் எப்பொழுதும் பிராம்மணரிடமிருந்து கேட்க வேண்டும். பாராயணமுடிவில் பாராயணம் செய்பவரை ஸ்ரீராமனாக பவித்து பூஜிக்கவேண்டும்.

6. தர்மத்தை இச்சித்தவன் கௌஸல்யாதேவிக்கும் ஸ்ரீராமருக்கும் நடந்த ஸம்வாதத்தை (அயோ. 21-25 ஸர்.) மங்களாசாஸனம்வரையில் ஸ்ரீராமரை தியானித்துக்கொண்டு படிக்கவேண்டும்.

7.8. பிராதக்காலத்திலும் மத்யான்ன காலத்திலும் செய்யவேண்டிய பாராயணத்தை சாப்பிடாமல் செய்யவேண்டும். எந்தக் கட்டத்தை சாயங்காலம் பாராயணம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அந்த கட்டத்தை ஸாயம் சந்தியையனுஷ்டித்து நியமத்துடன் பாராயணம் செய்யவேண்டும். பகலில் ஏதாவது அசுத்தியேற்படுமேயாகில் ஸ்னானம் செய்து பிறகு படிக்கவேண்டும்.

9. பணத்தில் விருப்பமுள்ளவன் தினம் மூன்று வேளையிலும், ஸ்ரீராமன் ஆரண்யத்திற்கு போகும்பொழுது செய்த யாத்ராதானத்தை (அயோ. 23 ஸர்க்கம்) படிக்கவேண்டும்.

10. கன்னிகையை விரும்பிய பிரம்மசாரியும், வரனை விரும்பிய கன்னிகையும் பிராதக்காலத்தில் ஸீதாவிவாஹகட்டத்தை (बाल. 73 ஸர்.) படிக்கவேண்டும். பரிசுத்தமான இடத்தில் அப்பொழுது கறந்த பசுவின்பாலை நிவேதனம் செய்யவேண்டும்.

11. மோக்ஷத்தை விரும்பியவர்கள் லக்ஷ்மணர் ஸ்ரீராமருக்கு தேறுதல் சொல்லும் கட்டத்திலிருந்து ஜடாயுவுக்கு மோக்ஷம் கொடுக்கும்வரையில் (आर. 65-68 ஸர்.) படிக்கவேண்டும்.

acharya.org

अपस्मारश्वासखासकुष्ठादिगदशान्तये । आद्ये युद्धे दशास्यस्य मौलिभङ्गं दिने दिने ॥
पठेद्द्विवारं नैवेद्यमादौ मध्वन्ततः पयः ॥ १२ ॥
भूतवेतालपीडा चेल्लङ्काविजयसर्गकम् । आदौ गुडान्नं नैवेद्यं कृत्वा सायं पठेद्व्रतः ॥
विमार्ग सर्वलेति पद्यस्यान्ते नीराजनार्पणम् । कृत्वाऽथप्रणमेन्मारुतात्मजनेयं हृदा स्मरन् ॥
उन्मादद्दोषशान्त्यर्थं हनूमच्चिन्तनं पठेत् । अशोकवनिकायानसमये समुपस्थितम् ॥
निवेदयेद्व्रतः प्रातर्मापचूर्णान्नमादृतः ॥ १५ ॥
दारिद्र्यध्वंसकामस्तु लङ्कायां तु हनूमता । मैथिलीदर्शनं प्रातः पठेत्पापविमोचनम् ॥
दुःखध्वंसनकामस्तु रावणस्य वधोत्तरम् । सीताञ्जनेयसंवादसर्गं तु प्रयतः पठेत् ॥
अतर्कितापदुद्धारकामश्चेदभयार्पणम् । विभीषणाय रामस्य पठेदर्थं विचिन्तयन् ॥
आदावन्ते च संस्फोट्य नालिकेरं निवेदयेत् ॥ १८ ॥
विश्लिष्टबन्धुसंयोगकामना चेद्धनूमतः । रामाङ्गुलीयार्पणं तु सीतायै सन्ध्ययोः पठेत् ॥
आदावन्तेऽपि वा नित्यं पनसाम्रफलार्पणम् ॥ १९ ॥

12. அபஸ்மாரம், ச்வாஸம், காசம், குஷ்டம் முதலிய ரோகசாந்திக்காக ராம்ராவணர்களுக்கு நடந்த முதல்யுத்தத்தில் ராவணனது மௌளிபங்கம் (கிரீடத்தை உடைத்தல்) நடந்த (यु. 59 ஸர்) ஸர்க்கத்தை தினம் இரண்டுவேளை படிக்கவேண்டும். முதலில் தேனும், கடைசியில் பாலும் நிவேதனம் செய்யவேண்டும்.

13. பூதவேதாளபீடாபரிஹாரத்திற்காக சாயங்காலத்தில் ஆஞ்சனேயரது லங்காவிஜயஸர்க்கத்தை (सु. 3 ஸர்) முதலில் சர்க்கரைப்பொங்கல் நிவேதனம் செய்து படிக்கவேண்டும். அந்த ஸர்க்கத்திலிருக்கும் "विमार्गं सर्वल" என்ற சுலோகம் முடிந்ததும் கர்ப்பூர ஆரத்தியெடுத்த பிறகு ஆஞ்சனேயரை மனதினுள் ஸ்மரித்துகொண்டு நமஸ்கரிக்கவேண்டும்:

15. உன்மாததோஷசாந்திக்காக அசோக வனந்திற்கு போகும்போதுண்டான ஹனுமாருடைய சிந்தையை சொல்லும் (सु 13 ஸர்) ஸர்க்கத்தை காலையில் படிக்கவேண்டும். உளுந்துப்பொடி கலந்த அன்னத்தை நிவேதனம் பண்ணவேண்டும்.

16. தாரித்ரியம் இல்லாதாக விரும்பியவன் பாவனமான ஹனுமான் ஸீதாதேவியை தரிசித்த (सु. 15 ஸர்) ஸர்க்கத்தை படிக்கவேண்டும்.

17. துக்கங்கள் நீங்க விரும்பியவன் ராவணவதத்திற்கு பிறகு ஸீதாஞ்சனேய ஸம்வாத (यु. 116 ஸர்) ஸர்க்கத்தை படிக்கவேண்டும்.

18. எதிர்பாராமல் வந்த ஆபத்து நீங்க விரும்பியவன் ஸ்ரீராமர் விபீஷணனுக்கு அபயமளித்த (यु. 17-18 ஸர்) ஸர்க்கங்களை அர்த்தத்துடன் படிக்கவேண்டும். ஆதியிலும் முடிவிலும் தேங்காய் உடைத்து நிவேதனம் செய்யவேண்டும்.

19. பிரிந்துபோன பந்துக்களுடன் சேரவிரும்பியவன் ஹனுமான் ஸீதைக்கு கணையாழிகொடுத்த (सु. 36 ஸர்) ஸர்க்கத்தை பிராதக்காலத்திலும் ஸாயங்காலத்திலும் படிக்கவேண்டும். ஆதியிலாவது முடிவிலாவது பலாப்பழமும் மாம்பழமும் நிவேதனம் செய்யவேண்டும்.

acharya.org

दुःस्वप्नदोषशान्त्यर्थं त्रिजटास्वप्नदर्शनम् । पठेत्त्र्यहं प्रातरेव शर्करां विनिवेदयेत् ॥ २० ॥
